# 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்குகள்

## ஓய்வூதியத் திணைக்களம்

செலவீனத் தலைப்பு – 253

## பொருளடக்கம்

**பக்க இலக்கம்**

**1. நிறுவனம் சார் விபரத் திரட்டு** **01-45**

1.1. அறிமுகம் 01-02

1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, இலக்குகள் 03-05

1.3. பிரதான செயற்பாடுகள் 06-07

1.4. நிறுவனக் கட்டமைப்பு 08-10

1.5. திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள் **11-32**

I. நிர்வாகப் பிரிவு 11 -15

II. சிவில் ஓய்வூதியப் பிரிவு 15-21

- பன்முகப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவு
- மையப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவு
- கொள்கைப் பிரிவு

III. விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பிரிவு 21-22

IV. கணக்குப் பிரிவு 22-25

- மாதாந்தக் கொடுப்பனவுப் பிரிவு
- பணிக்கொடைப் பிரிவு
- மோசடிகள் தொடர்பான பிரிவு
- விதவைகள் அநாதைகள் பங்களிப்புத் தொகை பிரிவு
- வழங்கற் பிரிவு
- மேலதிகக் கொடுப்பனவுப் பிரிவு

V. அரச ஊழியர் சேமலாப நிதியம் 26-28

VI. உள்ளக கணக்காய்வுப் பிரிவு 28-29

VII. சட்டப் பிரிவு 29-30

VIII. வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவு 30

IX. ஆயுதப் படைச் சேவை ஓய்வூதியப் பிரிவு 31-32

X. தகவல் தொழில்நுட்ப பிரிவு 32

XI. ஊடகப் பிரிவு 32

➢ 2019 ஆம் ஆண்டில் நன்கு புலப்படும் சிறப்பம்சங்கள் **33-38**

- புது அறிமுகப்படுத்தல்கள் 33-37
  - பௌதீக ரீதியாக மேம்படுத்துதல்

- வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்கள் 37-38
  - தேசிய ஓய்வூதியர் தினக் கொண்டாட்டம்

- ஓய்வூதியம் செலுத்துகை (வரைபுகள் மற்றும் அட்டவணைகள் ஊடாக) **39-45**
  - வருடாந்த ஓய்வூதியர்களின் எண்ணிக்கை 39-43
  - பணிக்கொடை செலுத்துதல் 43-44
  - நிலுவை சம்பளத் தொகையை செலுத்துதல் 45

**2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு 46-51**

**3. 2019.12.31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான முழு மொத்த நிதிச் செயலாற்றுகை 52-92**

3.1. நிதிச் செயலாற்றுகை அறிக்கை 52

3.2. நிதி நிலைமை தொடர்பான அறிக்கை 53

3.3. காசுப் பாய்ச்சல் தொடர்பான அறிக்கை 54

3.4. நிதி அறிக்கை குறிப்புகள் 55

3.5. வருமானச் சேகரிப்பு தொடர்பான செயலாற்றுகை 56

3.6. ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது தொடர்பான செயலாற்றுகை 57

3.7. நிதி ஒழுங்கு விதியின் 208 இன் பிரகாரம் , ஏனைய அமைச்சுகள் / திணைக்களங்களின் பிரதிநிதியொருவராக இத் திணைக்களத்துக்கு / மாவட்ட செயலகங்களுக்கு / மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் 57

3.8. நிதியல்லாத சொத்து அறிக்கையிடலின் செயலாற்றுகை 58

3.9. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 59-92

**4. செயல்திறன் குறிகாட்டிகள் 93-97**

4.1. நிறுவனத்தின் செயல்திறன் குறிகாட்டி (செயற்பாட்டுத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு)

**5. மனித வளங்கள் தொடர்பான விபரத் திரட்டு 98-99**

5.1. ஆளணி முகாமைத்துவம் 98

5.2. மனித வள அபிவிருத்தி 98-99

**6. இணக்க அறிக்கை 100-113**

## 1.1. அறிமுகம்

1970 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதியன்று பொது நிருவாக அமைச்சின் கீழ் நிர்வாகிக்கப்பட்ட A தரத்துடைய திணைக்களமொன்றாக உத்தியோகபூர்வ ரீதியில் நிறுவப்பட்டது. ஓய்வூதியத் திணைக்களத்தின் உருவாக்கம் 1900 ஆம் வருடம் வரையான மீக நீண்ட கால வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. இலங்கையின் அரச ஊழியர்களுக்கு மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அளப்பரிய சமூகப் பாதுகாப்பு வேலைத் திட்டமாக விளங்கும் அரச சேவையில் ஓய்வூதிய முறைமையானது பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அது அரச ஊழியர்களின் மறைவிற்குப் பின்னர் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கும் விதவைகள் மற்றும் அநாதைப் பிள்ளைகளின் உள்ளங்களில் புத்தொளிவூட்டும் உணர்ச்சியைக் கொண்டு வந்து சேர்க்கின்றது. 1898 ஆம் ஆண்டு இலக்கம் 01 இனையுடைய விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்ட நிதிய கட்டளைச் சட்டம் மற்றும் 1934 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஸ்தாபிக்கப்பட்ட ஓய்வூதிய பிரமாணக் குறிப்பானது சட்டபூர்வ ஆவணங்களினால் அமுல்படுத்தப்படும் வகையில் அரச சேவையில் ஓய்வூதிய நடைமுறையை இலங்கை அரசு சட்டமொன்றாக சட்டரீதியாக பிரகடனப்படுத்தியது.

ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு 1934 ஆண்டு தொடக்கம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல திருத்தங்கள் இடம்பெற்றுள்ளதோடு 1972 மே மாதம் 05 ஆந் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு ஓய்வூதியக் கொடுப்பனவு முறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அத்தோடு 1898 இலக்கம் 01 இனையுடைய விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதி கட்டளைச் சட்டம் மற்றும் 1983 இலக்கம் 24 இனையுடைய தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதிச் சட்டம் மற்றும் 1981 இலக்கம் 44 இனையுடைய விதவைகள், அநாதைகள் நிதிய திருத்தச் சட்டத்தின் கீழ் அங்கவீனர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தினையும் சேர்த்து நலன்பெறுவதற்கான வாய்ப்புக்கள் விஸ்தரிக்கப்பட்டு விதவைகள், அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அவ்வாறே 1942 இலக்கம் 18 இனையுடைய அரச சேவை ஊழியர் சேமலாப நிதியக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தப்படும் அரச சேவை ஊழியர் சேமலாப நிதியமும் அதற்கு இணையாக அரச சேவையை வழங்குகின்ற பிரஜைகளுக்கு உதவியாக அமைகின்றது.

2019 ஆம் ஆண்டு நிறைவடையும் போது ஆறு இலட்சத்தி முப்பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து நான்கு ஓய்வூதியர் பிரஜைகளுக்கான ஓய்வூதியம் உள்ளடங்கலாக நலன்களை உரித்துடையதாக்கி பாரிய பணியில் ஈடுபட்டு வரும்

நிறுவனமாக ஓய்வூதியத் திணைக்களம் திகழ்கின்றது. 2019 ஆம் ஆண்டில் நிறுவனஞ்சார் முகாமைத்துவச் செயற்பாட்டில் மென்மேலும் ஓய்வூதியர்களை அண்மிக்கச் செய்து தரம் வாய்ந்ததாக செயற்படுத்துவதற்கு மையப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தினை உள்ளடக்கிய நிறுவனஞ்சார் தொழிற்பாட்டினை விருத்தி செய்வதற்கான பல மூலோபாயங்களையும் செயற்படுத்தி வருகின்றது.

அதற்கமைய பல ஆண்டுகளாக இருந்து இன்று வரையில் இலங்கை தாய் நாட்டிற்காக தங்களது சேவையை வழங்கிய அரச ஊழியர்களினதும் , அரச அதிகாரிகளினதும் மறைவிற்குப் பின் நாதியற்று நிர்க்கதியாகி நிற்கும் குடும்ப அங்கத்தவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் வகையில் அமைந்த சேவைகளை உரிய நேரத்துக்கு நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் பணியாட்தொகுதியினர்களைக் கொண்ட ஓய்வூதியத் திணைக்களம் அளப்பரிய சமூகப் பணியில் ஈடுபடும் நிறுவனமாக அதனை அறிமுகப்படுத்த முடியும்.

## 1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, இலக்குகள்

### நோக்கு

பொருளாதார மற்றும் சமூக ரீதியில் திருப்தி மிக்கதோர் ஓய்வூதியர் சமுதாயம்

### செயற்பணி

அரச சேவையில் ஓய்வூதியர்களுக்கும் அவர்களின் பயனாளிகளுக்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிலைபேறான முகாமைத்துவ முறைகளைப் பயன்படுத்தி, தனியார் மற்றும் அரச துறையினர் உள்ளடங்கிய சேவைபெறுநர்களினதும் சேவை வழங்குநர்களினதும் திருப்தியை உயர் மட்டத்தில் உறுதிப்படுத்தி, சட்ட ரீதியான நலன்களை வழங்குதல்.

# இலக்குகள்

- அரச ஊழியர்களின் ஓய்வூதிய நலன்கள் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு மற்றும் விதவைகள் மற்றும் அநாதைகள் சட்டம் மற்றும் விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் சட்டத்திற்கு ஏற்புடையதாகும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு ஒழுங்கினை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்பான ஏற்பாடுகளை விதித்தல்.

- ஓய்வூதியம் குறித்த சட்ட ரீதியான கட்டமைப்பு, சட்ட விதிகள் மற்றும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு ஏற்ப அரச ஊழியர்களின் ஓய்வூதியத்தை வழங்குதல்.

- மாதாந்த ஓய்வூதியப் பயன்களை தொடர்ச்சியாக செலுத்துதல் மற்றும் ஒரு தடவை செலுத்தப்பட்ட நலன்களை மிகச் சரியாகவும் துல்லியமாகவும் வழங்குதல்.

- அ. சே. அ. அ. முறைமையை ஒழுங்குபடுத்தல் மற்றும் பயன்களை வழங்குதல்.

- அரசுக்காக விதவைகள் அநாதைகள் பங்களிப்புத் தொகையை சேகரித்தல் மற்றும் ஏனைய வருமானங்களையும் சேகரித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்.

- முப்படை இராணுவத்தினரின் ஓய்வூதியங்களைச் செலுத்துதல்.

- முனைப்பான சேவையில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் உயிர் பிரியும் அல்லது அங்கவீனமுறும் முப்படை இராணுவம் மற்றும் பொலிஸ் சேவையின் உத்தியோகத்தர்களுக்கு இழப்பீட்டுத் தொகை மற்றும் கொடுப்பவுகளை செலுத்துதல்.

- சமூகப் பாதுகாப்பு தொடர்பான உலகத்தின் போக்கினை ஆய்வு செய்து நவீன சமூகப் பாதுகாப்பு முறைமைகள் குறித்த கொள்கைகளை தொகுப்பதற்கான உதவி மேற்கொள்ளல்.

- வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய முன்னேற்றங்கள் குறித்து சட்டமன்றத்துக்கு பொறுப்புக் கூறல்.

✓ ஓய்வூதியக் கொடுப்பனவை செலுத்துவதற்கு மேலதிகமாக ஓய்வூதியம் திணைக்களத்தினால் பின்வரும் சேவைகளுக்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன.

- ஓய்வூதியர்களை மீளவும் தொழில்களில் ஈடுபடுத்துதல்.
- ஓய்வூதியர்களுக்கு புகையிரத நிலையங்களில் நேரடியாக விடுவிக்கப்பட்டு பயணச் சீட்டுக்களை ஒதுக்கிக் கொள்வதற்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.
- உள்ளார்ந்த தொடர்புகளை மேம்படுத்துவதற்காக தொலைபேசி சலுகை பகேஜ்களை அறிமுகப்படுத்துதல்.
- ஓய்வூதியர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் காப்புறுதி வசதிகளை வழங்குவதற்கு உதவியாக இருத்தல்.
- தொலைபேசி App இன் ஊடாக ஓய்வூதியர்களுக்கு அவசியப்படும் தகவல்களை அறிந்து கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல்.
- ஓய்வூதியம் தயார்படுத்தும் அலகு மற்றும் ஓய்வூதியம் செலுத்துதல் தொடர்பாக அமைந்த வங்கிகள் மற்றும் கொடுப்பனவு வலையமைப்புடன் பயனுறுதி வாய்ந்த தொடர்பினை பேணிச் செல்லல் மற்றும் மேம்படுத்துதல்.
- ஒட்டுமொத்த ஓய்வூதியப் பிரஜைகளினதும் பொருளாதார மற்றும் சமூக நலனோம்பிற்கு அவசியப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் செயற்படுத்துவதற்கு தனியார் மற்றும் தனியாரற்ற பிரிவுகளின் பங்களிப்புக்களை பெற்றுக்கொள்ளல்.
- ஓய்வூதியச் சங்கங்களை தலைமையாகக் கொண்டு சிவில் சமூகத்தின் செயற்பாடுகளைத் தொடர்புபடுத்தி பிராந்திய ரீதியான அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்தல்.
- தலைமுறைகளுக்கிடையிலான உள்ளார்ந்த ரீதியான தொடர்புகளை மேம்படுத்துவதற்காக முன்னோடியாக பங்களிப்புச் செய்தல்.

## 1.3. பிரதான செயற்பாடுகள்

ஒய்வூதியத் திணைக்களத்தின் ஒட்டுமொத்த பணிகளும் 4 செயற்பாடுகளின் மூலம் இடம்பெறுகின்றது.

### 1.3.1. பதிவு செய்தல்

I. ஓய்வூதியப் பதிவு

- சிவில்

அரச ஊழியர்கள், பிரிவெனா ஆசிரியர்கள், தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்கள், 2006.01.02 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்கள், வினைத்திறனின்மை காரணமாக ஓய்வு பெற்றவர்கள், ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக ஓய்வு பெற்றவர்கள் ஓய்வூதியத்திற்காக பதிவு செய்யப்படுகின்றார்கள்.

- ஆயுதப் படைச் சேவை

ஆயுதப் படைச் சேவைக்குரிய உத்தியோகத்தர்களின் சேவைக் காலம் நிறைவு பெற்றதன் பின்னர் ஓய்வு பெறுவதற்காக பதிவு செய்தல், விசேட இழப்பீடு மற்றும் இழப்பீட்டு ஓய்வூதியத்திற்காக பதிவு செய்தல், சேவையில் ஈடுபட்டிருக்கும் போது மரணிப்பவர்களின் வாரிசுரிமைகளுக்கு செலுத்தப்படும் மரணப் பணிக்கொடை நலனிற்காக பதிவு செய்தல்.

II. விதவைகள் மற்றும் அநாதைகள் அல்லது தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திற்காக பதிவு செய்தல்.

அரச ஊழியரின் அல்லது ஓய்வூதியரின் மரணத்திற்குப் பின்னர் விதவைகள் மற்றும் தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்தை வழங்குவதற்காக பதிவு செய்தல், அரச சேவையில் ஈடுபட்டிருக்கும் போது மரணிக்கும் அரச ஊழியர்கள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக மரணிக்கும் அரச ஊழியக்கள் போன்றோருக்கும் இறப்புப் பணிக்கொடை இலக்கத்தினை வழங்குதல்.

III. அரச சேவை சேமலாப நிதியத்தில் பதிவு செய்தல்

அரச சேவையில் ஓய்வூதியத்துடன் கூடிய நியமனங்களைக் கொண்டவர்களுக்கு சேவை முடிவின் போது நலன்கள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக பதிவு செய்தல்

### 1.3.2. கொடுப்பனவு ஒழுங்குமுறை

ஓய்வூதியமானது, விதவைகள், தபுதாரர்கள், அநாதைகள் மற்றும் அங்கவீனர்களுக்கான ஓய்வூதியம் என்பன மாதாந்தம் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளாக காணப்படுவதோடு, அரச சேவை ஊழியர் சேமலாப நிதியத்தின் நலன் கொடுப்பனவுகள், விதவைகள் மற்றும் அநாதைகள் நிதியத்தின் மீளக் கொடுப்பனவுகள், ஓய்வூதியப் பணிக்கொடை கொடுப்பனவுகள், இறப்பிற்கான பணிக்கொடை கொடுப்பனவுகள், ஓய்வூதிய உரித்துடமை விலகிச் செல்லும் ஆயுதப் படைச் சேவை உத்தியோகத்தர்களின் சேவை பணிக்கொடை மற்றும் சிவில் சேவை பணிக்கொடையைத் தயாரித்தல், விசேட இழப்பீட்டு கொடுப்பனவு, விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் செலுத்துதல், வெளிநாட்டுக்குச் சென்ற தொழிலாளிகளின் அல்லது ஓய்வூதியத்தை செலுத்துவதனை மிகத் துல்லியமாக ஒழுங்குபடுத்தும் பணியையும் இப்பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

### 1.3.3. பெறுகை ஒழுங்குமுறை


விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் நிதியத்தின் பெறுகைகள், அரச சேவை ஊழியர் சேமலாப நிதிய பெறுகை ஒழுங்குமுறை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதிய கிடைப்பனவுகள், கட்டிட வாடகை மற்றும் விடுமுறை விடுதிகளினால் கிடைக்கப்பெறும் வருவாயை ஒழுங்குமுறைப்படுத்தல்.

### 1.3.4. அபிவிருத்தி போக்குகள்

ஓய்வூதியத் திணைக்களத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் பிரதானமாக மனித வள அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி, விடயம் சார் அபிவிருத்திகள் மற்றும் பௌதீக வள அபிவிருத்தி போன்ற நான்கு முக்கிய பரிமாணங்களின் ஊடாக தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

## 1.4. நிறுவனக் கட்டமைப்பு

நிறுவனக் கட்டமைப்பு



- **ஓய்வூதியம் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர்– 2019.12.31 ஆந் திகதிக்கு**

| பதவியின் இயல்பு | பதவி | உரித்துடைய தாகும் சேவை | சம்பள முறை | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் மொத்த எண்ணிக்கை | சேவையாற்றுபவர்களின் எண்ணிக்கை | பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் | SLAS (Special) | SL-3-2016 | 1 | 1 | 0 |
| | மேலதிக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் | SLAS (Special) | SL-3-2016 | 1 | 1 | 0 |
| | வைத்திய உத்தியோகத்தர் | Primary Grade | SL-2-2016 | 1 | 0 | 1 |
| | ஓய்வூதியப் பணிப்பாளர் | SLAS (Class I) | SL-1-2016 | 4 | 2 | 2 |
| | பிரதான கணக்காளர் | SLAcS (Class I) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | பிரதம உள்ளக கணக்காய்வாளர் | SLAcS (Class I) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | SLAS (Class II or III) | SL-1-2016 | 10 | 8 | 2 |
| | கணக்காளர் | SLAcS (Class I) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | கணக்காளர் | SLAS (Class II or III) | SL-1-2016 | 9 | 8 | 1 |
| | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | SLAS (Class II or III) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | சட்ட உத்தியோகத்தர் | Dept | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | Software Developer | Dept | Contract | 3 | 1 | 2 |
| | | | | **34** | **26** | **8** |
| மூன்றாம் நிலை மட்டம் | நிர்வாக உத்தியோகத்தர் | PMAS (Supra) | MN-7-2016 | 4 | 2 | 2 |
| | மொழிபெயர்ப்பாளர் – சிங்களம் –ஆங்கிலம் 01<br>சிங்களம் – தமிழ் 01 | TS | MN-6-2016 | 2 | 2* | 0 |
| | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | SLICTS | MN-6-2016 | 5 | 1 | 4 |
| | | | | **11** | **5** | **6** |
| இரண்டாம் நிலை மட்டம் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | SLTS | MN-3-2016 | 1 | 0 | 1 |
| | வரவு செலவுத் திட்ட உதவியாளர் | RS | MN-4-2016 | 1 | 1 | 0 |
| | ஓய்வூதிய உத்தியோகத்தர் | Dept. | MN-4-2016 | 340 | 233 | 107 |
| | அபிவிருத்தி உத்தியோகத்தர் | DOS | MN-4-2016 | 398 | 397 | 1 |
| | அரச முகாமைத்துவ உதவியாளர் | PMAS | MN-2-2016 | 190 | 175 | 15 |
| | தகவல் மற்றும் தொடர்பாடல் | SLICTS | MT-1-2016 | 5 | 3 | 2 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தொழில்நுட்ப உதவியாளர் | | | | | |
| | ஆவண உதவியாளர் | Dept. | MN-1-2016 | 141 | 122 | 19 |
| | Help Desk Operator | Dept. | Contract | 2 | 0 | 2 |
| | | | | **1078** | **931** | **147** |
| ஆரம்ப நிலை மட்டம் | பங்களா பொறுப்பாளர் | Dept. | PL-1-2016 | 2 | 1 | 1 |
| | சமையற்காரர் / பூங்கா தோட்டத் தொழிலாளர் | Dept. | PL-1-2016 | 4 | 3 | 1 |
| | சாரதிகள் | DS | PL-3-2016 | 12 | 12 | 0 |
| | மின்சாரத் தொழிலாளி | Dept. | PL-3-2016 | 1 | 0 | 1 |
| | அலுவலக உதவியாளர் | OES | PL-1-2016 | 56 | 55 | 01 |
| | | | | **75** | **71** | **04** |
| **மொத்தம்** | | | | **1198** | **1033** | **165** |

* **மொழிபெயர்ப்பாளர்** – சேவையில் ஈடுபடுகின்ற பதவியணி : – சிங்களம் – ஆங்கிலம் – 01
ஆங்கிலம் – தமிழ் – 01

## 1.5. திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள்

### I. நிர்வாகப் பிரிவு

திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களினதும் பிரத்தியேகக் கோவையை நடாத்திச் செல்லல் மற்றும் சகல உத்தியோகத்தர்களினதும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல், திணைக்களத்தின் சகல கட்டிடங்களையும் நிர்மானித்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள மேற்கொள்ளல், திணைக்களத்திற்கு அவசியப்படும் சேவைகளை வழங்குதல் மற்றும் அதற்கான கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், திணைக்களத்தின் அனைத்து வாகனங்களையும் பராமரித்தல், துப்பரவாக்கம் சேவை செய்தல் மற்றும் பழுதுபார்த்தல், திணைக்களத்தின் இயந்திர மற்றும் உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் துப்பரவாக்கம் சேவை செய்தல், திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல் மற்றும் தகவலறியும் உரிமைச் சட்டத்துக்கு உரித்தான கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மனித வளத்தை விருத்தி செய்தவதற்காக நிர்வாகப் பிரிவின் மூலம் பயிற்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்தும் விடயங்கள் இடம்பெறுகின்றன. அதன்போது திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் விடய ரீதியான அறிவை விருத்தி செய்தல் மற்றும் புதிய போக்குகள் தொடர்பான விடங்களை இற்றைப்படுத்தல் தொடர்பான விடயம் ஆரம்ப கட்ட நிகழ்ச்சித்திட்டமாகவும், மனப்பாங்கு மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும், உள்ளக மற்றும் வெளிக்கள பயிற்சித் திட்டங்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இதன்போது பலவிதமான வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களை தொடர்புபடுத்தி இப் பயிற்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவ்வாறே திணைக்கள ரீதியான மனித வளங்கள், வளவாளர்களாக ஈடுபடுத்தப்பட்டு ஓய்வூதியத் திட்ட முறைமை தொடர்பாக வேறு நிறுவனங்களை விழிப்பூட்டும் பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தலும் இப் பிரிவின் விடயப் பரப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

- திணைக்களத்து உத்தியோகத்தர்களின் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு தரத்துடன் கூடியதும் , வினைத்திறன் கொண்டதுமான சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு திணைக்களத்தின் உயர் மட்டம் தொடக்கம் அடி மட்டம் வரையில் பரந்து காணப்படும் பதவிகளில் உள்ள சகல உத்தியோகத்தர்களும் உள்ளடங்கும் வகையில் பல்வேறு பயிற்சித் திட்டங்களை நடாத்துவதற்கு 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்தோடு திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கான

நிகழ்ச்சித்திட்டங்கள், அலுவலக நடைமுறை மற்றும் கடிதங்களைத் தயாரித்தல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உற்பத்தித்திறன் விருத்தி தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னிலை வகிக்கின்றன.

- 14/2019 ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்குதல் குறித்து சகல பிரதேச செயலாளர்கள் மற்றும் கணக்காளர்களை விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதோடு அதற்கு இணையாக ஓய்வூதிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

- மேலும் அரச நிறுவனங்களுக்கிடையில் உயர் தரத்துடன் கூடிய சேவைகளை வழங்குவதற்காக அரச நிறுவனம் என்ற வகையில் ஓய்வூதியத் திணைக்களம் ஓய்வூதியம் செலுத்தும் செயற்பாட்டினை சர்வதேச தரம் கொண்டதாக பேணிச் செல்வதற்காக 2019 ஆம் ஆண்டினுள் 1000க்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல் , பயிற்சியளிப்பதற்காக வளவாளர்களை வழங்கும் செயற்பாடும் நடைபெற்றுள்ளன.

- அதற்கமைய தென் மாகாண அரச சேவை உத்தியோகத்தர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுச் செயற்பாடு குறித்து விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் 02 இனை தென் மாகாண அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது. அவ்வாறே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் சேவையாற்றும் கணக்காளர்களுக்கும் பயிற்சியளித்தல் மற்றும் கிழக்கு மாகாணம், தென் மற்றும் வட மத்திய மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் ஓய்வூதியம் செலுத்தப்படும் செயற்பாடு குறித்து அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதோடு, வைத்தியர்கள், பல் வைத்தியர்கள் மற்றும் மத்திய மாகாண அரச உத்தியோகத்தர்களினதும் ஓய்வூதியத்தை மிக விரைவில் பெற்றுக்கொள்வது தொடர்பாக அறிவூட்டல் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

- மனித வள அபிவிருத்தியினை மேற்கொள்ளும் போது உத்தியோகத்தர்களின் மனோநிலை மட்டத்தை சிறப்பாக வைத்திருக்க முடியுமான வகையில் அலுவலக சூழலொன்றை உருவாக்கும் வகையில் அலுவலக சூழலை நவீனமயப்படுத்துதல், சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்துதல், திறமை மிக்க உத்தியோகத்தர்களை அடையாளங் கண்டு அவர்களுக்காக கிரிக்கெட், கரம் போன்ற பல்வேறு விளையாட்டுக்களில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- மனித வள விருத்தியை மேற்கொள்ளும் போது உத்தியோகத்தர்களின் மனப்பாங்கு நிலையை சிறந்த முறையில் பேணிச் செல்ல முடியுமான அலுவலகச் சூழலை உருவாக்குவதற்காக அலுவலக சூழலை நவீனமயப்படுத்தல், சுகாதார வசதிகளை மேம்படுத்தல், திறமையுள்ள உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களுக்கு கிரிக்கெட், கரம் போன்ற பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குதல், புத்தாண்டு விழாக்களை நடாத்துதல் போன்ற பல்வேறு நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- திணைக்களத்தினுள் தொடர்பாடல் நடவடிக்கைகளை முறைசார்ந்ததாகவும் வினைத்திறனாகவும் பேணிச் செல்வதற்கு புதிய உள்ளக தொலைபேசித் தொடர்பாடல் தொகுதியொன்றினை நிறுவுதல் மற்றும் ஓய்வூதியர்களின் பிரச்சினைகளுக்காக மிகவும் துரிதமாக பதிலளிக்கக் கூடிய வகையில் செயலிழந்து காணப்பட்ட 1970 உடனடி தொலைபேசி இலக்கத்தை மீளவும் செயற்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அச் செயற்பாட்டிற்காக தனியாக அமைந்த திணைக்கள உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்பதோடு, அதனால் ஓய்வூதியர்கள் தொலைபேசியின் ஊடாக தகவல்களைக் கோரும் போது முன்னர் காணப்பட்ட அசௌகரியங்களை நீக்கிக்கொள்வதற்கு முடியுமாக உள்ளதோடு, உடனடியாக பதில்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பும் கிட்டுகின்றது.

- ஓய்வூதியர்களுக்கு நேரடியாக குறித்த பதவிநிலை உத்தியோகத்தரைச் சந்தித்து தங்களது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி ஒவ்வொரு புதன் கிழமையும் மக்கள் தின நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படுவதோடு, அதற்காக ஒரு நாளைக்கு 500 க்கும் மேற்பட்ட ஓய்வூதியர்கள் அதற்கு வருகை தருகின்றார்கள். அதன் மூலம் அவர்களின் பிரச்சினைகளை உடனடியாக தீர்த்துக் கொள்ளப்படுவதோடு புதன் கிழமை தவிர்ந்த ஏனைய தினங்களில் 'முன் உதவி மேசை' இற்காக பதவிநிலை உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டு ஓய்வூதியர்களுக்கு அவர்களின் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

- 2016 ஆம் ஆண்டு இலக்கம் 12 இனையுடைய தகவலறியும் உரிமைச் சட்டம் ஓய்வூதியத் திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 2019 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட ஓய்வூதியர்களின் பிரச்சினைகள் சகலதுக்கும் பதிலளிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதோடு இவ்வாண்டில் 192 கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதன் மூலம் தனிப்பட்ட ஓய்வூதியங்கள் குறித்த

பிரச்சினைகளுக்கான தகவல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 14 நாட்களினுள் பதில்களை அனுப்பும் செயற்பாடு இடம்பெறுவதோடு, அறியாமையின் அடிப்படையில் தமக்குரியதற்ற ஓய்வூதியம் குறித்த பிரச்சினைகள் மற்றும் தகவல் கோரல்கள் தொடர்பில் பதில்களை வழங்கும் நடவடிக்கை நடைபெறுவதில்லை. எவரேனும் ஒரு நபருக்கு கிடைக்கப்பெற்ற பதிலில் திருப்தியடையாதவிடத்து அக் கோரிக்கை தொடர்பில் கிடைக்கப்பெறும் மேன்முறையீட்டுக்காக பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் ஊடாக பதிலளிக்கப்படும் என்பதோடு அதிலும் திருப்தியடையாதவிடத்து தகவலறியும் உரிமை ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டினை சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதோடு அவர்களினால் அழைக்கப்படும் திகதியில் அதற்காக ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகியிருத்தல் வேண்டும். 2019 ஆம் ஆண்டில் இரண்டு தடவை ஆணைக்குழு முன்னிலையில் திணைக்களம் ஆஜராகியுள்ளது.

- மேலும் "சனாதிபதியிடம் கேளுங்கள்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் எமது திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 1176 ஓய்வூதியப் பிரச்சினைகளுக்கான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. 280 ஓய்வூதியப் பிரச்சினைகள் செயற்பாட்டு நிலையில் காணப்படுவதோடு, 141 பிணக்குகள் வேறு நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

- 2019 ஆம் ஆண்டிறுதியின் போது திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களும் (1025) 2020 ஆம் ஆண்டுக்குரித்தான சம்பள ஏற்றங்கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- 2014 ஆம் ஆண்டில் இருந்து அங்கீகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள பங்களாப் பொறுப்பாளர் பதவிக்கு உரித்தான ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக 2019 ஆம் ஆண்டில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றுள்ளது.

- சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்களின் III ஆம் வகுப்புக்கான வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சை நடாத்தப்பட்டுள்ளது.

- ஓய்வூதியத் திணைக்களம் அமைந்துள்ள கட்டிடத்தில் திணைக்களத்தின் பயன்பாட்டிற்கு கொள்ளப்படாத இடப்பரப்பு மற்றொரு நிறுவனத்திற்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதோடு அதனால் மாதாந்த வருமானம் அறவிடப்பட்டு வருகின்றது. 2019 ஆம் ஆண்டில் கட்டிட வாடகை கிடைப்பனவுகளின் பெறுமதி ரூபா. 27,656,955 ஆகும். அவ்வாறே

ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஓய்வூதிய சமூகம் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த மக்களினதும் பிரயோசனத்திற்காக நடாத்தப்பட்டு செல்லும் விடுமுறை விடுதிகளை நிர்வகித்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அதன் மூலம் மாதாந்த வருமானத்தை ஈட்டுதல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

- கடித ஆவணங்களின் நீண்ட கால பேணுகையை உறுதிப்படுத்திக் கொள்ளல் மற்றும் கோப்புக்களை மிக இலகுவில் தேடிக்கொள்ளும் வகையில் 5 ஆம் மாடியில் சிவில் ஆவணக் காப்பகம் நிறுவப்பட்டுள்ளது. அங்கு அரச ஊழியர் சேமலாப நிதியத்தின் கோப்புக்கள், வெளிநாடு சென்ற ஓய்வூதியர்களின் கோப்புக்கள், சிவில் ஓய்வூதிய கோவைகள் மற்றும் உள்ளூராட்சி சேவை ஓய்வூதியக் கோப்புக்கள் என்றவாறு வகைப்படுத்தப்பட்டு கோர்க்கப்பட்டுள்ளதுன் இதுவரை 100,000 கோவைகள் அளவு வைப்புச் செய்யப்பட்டுள்ளன.

## II. *சிவில் ஓய்வூதியப் பிரிவு*

- **பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு**

நாடு பூராகவும் பரந்து காணப்படுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஆயுதப் படைச் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்களது சேவைக் காலத்தை நிறைவு செய்ததன் பின்னர் ஓய்வு பெறச் செய்து ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை செலுத்துவதற்காக கோரப்பட்டுள்ள விண்ணப்பங்கள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் அவற்றினைப் பதிவு செய்து ஓய்வூதிய இலக்கத்தை வழங்குதல், ஓய்வூதிய தரவுத் தளத்தினுள் ஓய்வூதியர்களை உள்ளடக்கி துரிதமாக முதல் கொடுப்பனவை வழங்க ஆரம்பித்தல், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வாழ்வூதியக் கொடுப்பனவு , விசேட இழப்பீடு மற்றும் இழப்பீட்டு ஓய்வூதியம் செலுத்துதல் உள்ளடங்கலாக ஓய்வூதியர்களுக்கு உரித்தான சமூகப் பாதுகாப்பு நலன்களை வழங்குவதற்காக அவசியப்படும் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் ஓய்வூதியத் திணைக்களத்தின் பன்முகப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவினால் நடைபெறுகின்றது.

அண்ணளவாக வருடமொன்றிற்கு அரச ஊழியர்கள் முப்பத்தைந்தாயிரத்துக்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் ஓய்வு பெறச் செய்யப்படுகின்றார்கள் என்பதோடு 2019 ஆம் ஆண்டில் ஓய்வு பெறச் செய்யப்பட்டவர்களுக்காக திணைக்களத்தின் பன்முகப்படுத்தப்பட்ட பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 30,143 ஆகும். குறித்த விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் ஓய்வு பெற்றுச் செல்லும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் கட்டாயமாக ஒரு தடவை கலந்து கொள்ள

வேண்டிய கண்காணிப்பு மையத்தின் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள். அவ்வாறு தோற்றுவதற்கு விண்ணப்பித்துள்ளர்களின் எண்ணிக்கை 26,386 பேராகும். தேசிய அடையாள அட்டை, விண்ணப்பப்படிவம் மற்றும் இணைப்புக்களின் பெயரில் உள்ள வித்தியாசங்கள், சேவைக் காலம் நிவர்த்தியாக கணக்கிடப்படாமை, நிரந்தர மற்றும் தற்காலிக சேவைக் காலம் துல்லியமாக குறித்த சேவை நிலையங்களில் குறிப்பிட்டிருக்காமை, சம்பள மாற்றக் கடிதங்கள் மற்றும் ஆன்லைன் தொகுதிக்கிடையிலான தகவல்களின் வேறுபாடுகள், தெளிவற்ற கோர்ப்புகள், விதவைகள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகை அறவிடப்படுதல் போன்ற சான்றிதழ்களை சமர்ப்பிக்காமை போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டில் 30% ஆன அளவு விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்பட்டன மற்றும் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன.

**ஓய்வூதியம் செலுத்துதல்**

| மாதம் | ஆன்லைன் ஊடாக ஓய்வூதியம் செலுத்துதல் | சிவில் – Source Document | இராணுவ – Source Document | இழப்பீட்டு ஓய்வூதியம் – Source Document | பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தங்கிவாழ்வோருக்கான கொடுப்பனவுகள் | விசேட இழப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| சனவரி | 631 | 12 | 5 | 3 | 22 | 56 |
| பெப்ரவரி | 2,495 | 6 | 15 | 1 | 19 | |
| மார்ச் | 2,444 | 8 | 12 | 0 | 13 | |
| ஏப்ரல் | 3,079 | 6 | 45 | 1 | 17 | |
| மே | 1,041 | 5 | 6 | 2 | 23 | |
| ஜூன் | 2,170 | 8 | 1 | 2 | 27 | |
| ஜூலை | 2,053 | 2 | 0 | 2 | 24 | |
| ஆகஸ்ட் | 2,110 | 4 | 0 | 2 | 32 | |
| செப்டம்பர் | 1,891 | 4 | 1 | 1 | 2 | |
| ஒக்டோபர் | 2,289 | 4 | 0 | 0 | 13 | |
| நவம்பர் | 2,237 | 9 | 0 | 1 | 11 | |
| திசெம்பர் | 3,510 | 6 | 1 | 1 | 4 | |
| **மொத்தம்** | **25,950** | **74** | **86** | **16** | **207** | **56** |

- **மையப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவு**

அ.நி.சு. இலக்கம் 16/1999 மற்றும் 02/2008 ஆகிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிறுவனத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பன்முகப்படுத்தப்படாத சகல ஓய்வூதியக் கொடுப்பனவுகளையும் செலுத்துதல், பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மையப்படுத்தப்பட்ட ஆகிய சகல திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதியங்களையும் அங்கீகரித்தல் மற்றும் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் இறந்த உத்தியோகத்தர்களின் பணிக்கொடை மற்றும் நிலுவை ஓய்வூதியங்களைச் செலுத்தும் நடவடிக்கை இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ஓய்வூதிய நலன்கள் உரித்துடைய சரியான நபர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்களின் ஓய்வூதிய உரித்துடமையைப் பதிவு செய்து கொடுப்பனவுகளை வழங்கும் தொழிற்பாடுகள் முதல் ஓய்வூதியம் கணக்கிடப்பட்டு செலுத்தும் வரையிலான சகலதையும் உள்ளடக்கிய பணிகள் ஓய்வூதியத்தை முதலில் செலுத்துவதாக உள்ளடக்கப்படும். பொது 55 இன் மூலம் ஓய்வூதியத்தை செலுத்துவதற்கு முன்னைய பணிகளாக நடைபெறுகின்றது.

தற்போது ஓய்வூதியம் பெறும் ஓய்வூதிய உத்தியோகத்தர்களின் சேவைக் காலத்தினுள் இடம்பெற வேண்டிய திருத்தங்கள் ஓய்வு பெறச் செய்யப்பட்டதன் பின்னர் மேற்கொள்வது ஓய்வூதிய திருத்தத்தின் கீழ் நடைபெறுகின்றது.

ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் அவ் ஓய்வூதிய நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் மரணித்து விட்டால் அல்லது நலன்களைப் பெறுவதற்குரிய வாரிசுகளுக்கு செலுத்துதல் 2 மற்றும் 39 வாரிசுகளுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் நடவடிக்கை இதன் கீழ் இடம்பெறுகின்றன.

- **பொது 55 இன் கீழ் ஓய்வூதியத்துக்கு முன்னரான கொடுப்பனவுகள் மற்றும் 2 ஆம் மற்றும் 39 ஆம் வாரிசுரிமைகளுக்கான கொடுப்பனவுகளை செலுத்துதல் – 2019**

| | 2018.12.31 இற்கான நிலுவை | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | கொடுப்பனவுகள் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்குரிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| பொது 55 | 351 | 365 | 710 | 15 | 06 |
| வாரிசுகளுக்கான கொடுப்பனவுகள் | 90 | 70 | 146 | 08 | 06 |

- **திருத்தியமைக்கப்பட்ட கொடுப்பனவுகள் (PD6) மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 2019**

| மாதம் | கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | கொடுப்பனவுகள் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்குரிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2018.12.31 இற்கான நிலுவை | 477 | | | |
| சனவரி | 803 | 591 | 339 | |
| பெப்ரவரி | 568 | 375 | 183 | |
| மார்ச் | 657 | 405 | 246 | |
| ஏப்ரல் | 391 | 246 | 170 | |
| மே | 759 | 439 | 268 | |
| ஜூன் | 554 | 355 | 202 | |
| ஜூலை | 558 | 312 | 208 | |
| ஆகஸ்ட் | 491 | 368 | 214 | |
| செப்டம்பர் | 466 | 306 | 244 | |
| ஒக்டோபர் | 744 | 356 | 262 | |
| நவம்பர் | 429 | 281 | 237 | |
| திசெம்பர் | 553 | 281 | 188 | |
| **மொத்தம்** | **7,450** | **4,315** | **2,761** | **374** |

- **கொள்கைப் பிரிவு**

அரச ஓய்வூதியப் பிரஜைகளுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்காக தொகுக்கப்பட்டு தற்போது காணப்படும் கொள்கை ரீதியான விடயங்களுக்கு பொருள் கோடல், சந்தர்ப்பத்திகேற்ப அவ்வாறே நிலவுகின்ற கொள்கை ரீதியான விடயங்களை திருத்தியமைத்தல் மற்றும் புதிய கொள்கைத் தீர்மானங்களுக்கு வருதல் என்பன இப் பிரிவின் பிரதான பணிகளாக காணப்படுகின்றன. மேலும், அரச ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் ஒப்பீட்டு ரீதியாக நியாயமான மட்டத்தில் பேணிச் செல்வதற்கு அவசியப்படும் பின்னணியை ஏற்படுத்துவதும் இதன் பிரதான பொறுப்பாகும்.

சட்டரீதியான திருத்தங்களுக்காக உரித்துடையதாகும் ஓய்வூதியத் திணைக்களத்தின் சுற்றறிக்கை, அறிவித்தல் கடிதங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுதல் மற்றும் ஓய்வூதியச் சமூகம் தனிப்பட்ட வகையிலும், சகல அரச நிறுவன மட்டத்திலும் முன்வைக்கப்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை காண்பதற்காக

அவசியப்படும் தெளிவுபடுத்தல்கள்/ஆலோசனைகள் வழங்குதல் கொள்கைப் பிரிவினால் நிறைவேற்றப்படும் பணிகளாக காணப்படுகின்றன.

**2019 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுரைக் கடிதங்கள்**

| | **சுற்றறிக்கை இலக்கம்** | **விடயம்** |
|---|---|---|
| 1 | 3/2015 (III) | ஓய்வு பெறும் தினத்திலே ஓய்வூதிய நலன்களை வழங்குதல். |
| 2 | 1/2019 | 2019 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 ஏற்ப ஓய்வூதியத்தை செம்மையாக்கல். |
| 3 | 1/2019 (I) | 2019 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 ஏற்ப ஓய்வூதியத்தை செம்மையாக்கல் – பொதுவான அறிவுரை |
| 4 | 1/2019 (II) | 2019 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 ஏற்ப ஓய்வூதியத்தை செம்மையாக்கல் – முப்படை உத்தியோகத்தர்களுக்கான |
| 5 | 1/2019 (III) | 2019 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 ஏற்ப ஓய்வூதியத்தை செம்மையாக்கல் – பொதுவான அறிவுரை |
| 6 | 1/2019 (IV) | 2019 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 ஏற்ப ஓய்வூதியத்தை செம்மையாக்கல். |
| 7 | 2/2019 | 2020 ஆம் ஆண்டிற்கு ஓய்வூதியம் செலுத்துதல். |
| 8 | 3/2019 | பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கான ஊனமுற்ற ஓய்வூதியம் செலுத்துதல். |
| 9 | பொது நிருவாக அமைச்சின் அங்கீகாரத்துடன் இதுவரை வழங்கப்படவில்லை. | ஓய்வூதியம் பெறும் உத்தியோகத்தர் ஒருவருக்கு ஓய்வூதியம் பெற்றுக்கொள்வதில் அசௌகரிய சந்தர்ப்பங்களில் பொறுப்பாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பான உடன்படிக்கை |
| 10 | | தற்காலிக, அமைய, பதிலீட்டு, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஊழியர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்குதல். |
| 11 | | செயல்பாட்டுக் கடமையில் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக மரணித்த இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களின் விதவையான மனைவிகள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக காயமுற்று அங்கவீனமடைந்துள்ள வைத்தியக் காரணங்கள் காரணமாக ஓய்வு பெறச் செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ரணவிரு சுரகும் கொடுப்பனவை செலுத்துதல். |

- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்துடன் நடைபெற்ற சட்டரீதியான பிணக்குகளை நிறைவு செய்வதற்காக அத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருத்தல் இவ் வருடத்தில் இடம்பெற்ற முக்கியமான நிகழ்வாகும்.

| | ஆலோசனைக் கடிதங்கள் | விடயம் |
|---|---|---|
| 1 | 1/2019 | ஓய்வூதியத் திட்டத்தை செயற்படுத்துதல். |
| 2 | 2/2019 | அரச சேவையில் உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெறும் போது முறைசார்ந்த வகையில் ஓய்வு பெறச் செய்வதற்குரிய கடிதத்தை வழங்குதல். |
| 3 | 3/2019 | ஓய்வூதியம் திருத்தியமைக்கப்படும் சந்தர்ப்பங்களிலே பணிக்கொடையயும் செலுத்துதல். |
| 4 | 4/2019 | 2018.01.01 இற்கு முன்னர் சேவையை முடிவுறுதித்தியுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு ரூபா. 25,000 இனைக் கொண்ட விசேட கொடுப்பனவை ஓய்வூதியத்துடன் சேர்த்தல். |
| 5 | 4/2019 (I) | 2018.01.01 இற்கு முன்னர் சேவையை முடிவுறுதித்தியுள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் சமனான சம்பளப் படிநிலையில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு ரூபா. 25,000 இனைக் கொண்ட விசேட கொடுப்பனவை ஓய்வூதியத்துடன் சேர்த்தல். |
| 6 | 4/2019 (II) | 2018.01.01 இற்கு முன்னர் சேவையை முடிவுறுதித்தியுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு ரூபா. 25,000 இனைக் கொண்ட விசேட கொடுப்பனவை ஓய்வூதியத்துடன் சேர்த்தல். |
| 7 | 5/2019 | விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகையை உரிய வகையில் அறவிடப்படாமை. |
| 8 | 6/2019 | இராணுவ சேவை மற்றும் ஊனமுற்ற ஓய்வூதியத்தை ஒன்றிணைத்து செலுத்துதல் என்ற தலைப்பில் 2018.07.17 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட ஓய்வூதியச் சுற்றறிக்கை இலக்கம் 9/2008 (திருத்தியமைக்கப்பட்ட II) இற்கு வழிகாட்டுதல். |
| 9 | 7/2019 | ஓய்வூதியக் கோப்புக்களை ஸ்கேன் செய்யும் தொகுதியினுள் நுழைவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல். |
| 10 | 9/2019 | PD3 ஆன்லைன் விண்ணப்பப்படிவங்களை திருத்தியமைத்தல். |

| | ஆலோசனைக் கடிதங்கள் | விடயம் |
|---|---|---|
| 11 | 10/2019 | பிறப்பில் அங்கவீனமுற்றிருக்காது அங்கவீனமுற்ற ஓய்வூதியத்துக்கு உரிமை கோருவதற்கு ஐந்து (5) வருடங்களுக்கு ஒரு முறை மருத்துவ சபைக்கு உட்படுத்துதல். |
| 12 | 11/2019 | ஊனமுற்ற ஓய்வூதியத்தைப் பெறும் ஓய்வூதியர்கள், மருத்துவ சபைக்கு சமூகமளிக்க வேண்டிய திகதிக்கு வருகை தராத காரணத்தால் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஊனமுற்ற ஓய்வூதியத்தை மீளவும் செயற்படுத்துதல். |
| 13 | 12/2019 | 2020 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக்குச் சென்ற இலங்கை ஓய்வூதியர்களின் வருடாந்த உயிர் வாழ்கின்றமைக்கான சான்றிதழை வழங்குதல். |

### III. விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பிரிவு

ஓய்வூதியம் உரித்துடைய பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் இறந்ததன் பின்னர் அவனின்/அவளின் வாழ்க்கைத் துணைக்கு, அநாதைகளுக்கு மற்றும் அங்கவீனமுற்ற அநாதைகளுக்கு மாதாந்தம் ஓய்வூதியமொன்றினை வழங்கும் செயற்பாடு விதவைகள் அநாதைகள் பிரிவின் ஊடாக இடம்பெறுகின்றது.

அவ்வாறே அனைத்து அரச ஊழியர்களும் அரச சேவையில் இணைந்ததன் பிற்பாடு விதவைகள் மற்றும் அநாதைகள் அல்லது தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் நடவடிக்கையை மேற்கொள்வது கட்டாயமானதாகும். ஆன்லைன் தரவுத் தளத்தின் ஊடாக குறித்த அரச உத்தியோகத்தர் சேவையாற்றிய நிறுவனத்தின் மூலம் ஓய்வூதிய முகாமைத்துவ தரவுத் தளத்தினுள் பிரவேசித்து விதவைகள் மற்றும் அநாதைகள் இலக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அவசியப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறே அரச ஊழியர் ஒருவரின் அல்லது ஓய்வூதியர் ஒருவரின் மரணத்தின் பின்னர் விதவைகள் மற்றும் தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்தை செலுத்துவதற்காக பதிவு செய்யும் செயற்பாட்டினையும், அரச சேவையில் ஈடுபட்டிருக்கும் போது மரணிக்கும் அரச ஊழியர்கள் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளின் காரணமாக மரணிக்கும் அரச ஊழியர்கள் போன்றோருக்கும் இறப்புப் பணிக்கொடை இலக்கத்தினை வழங்கும் செயற்பாடும் விதவைகள் அநாதைகள் பிரிவின் ஊடாக இடம்பெறுகின்றது.

- 2019 ஆம் ஆண்டில் விதவைகள் மற்றும் அநாதைகள் இலக்கம் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் 71,085 கிடைக்கப் பெற்றுள்ளதுடன், 66,715 விண்ணப்பப்படிவகளுக்காக விதவைகள் மற்றும் அநாதைகள் பதிவு இலக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்களில் காணப்பட்ட

குறைபாடுகள் காரணமாக 4,370 அளவு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

- 2019 ஆம் ஆண்டில் அங்கவீனமுற்ற அநாதைகள் ஒய்வூதியத்திற்கான 309 விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அவ்விண்ணப்பங்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக கிட்டத்தட்ட 63 விண்ணப்பப்படிவங்கள் நிரகாரிக்கப்பட்டன.

- 2019 ஆம் ஆண்டில் விதவைகள் மற்றும் அநாதைகள் ஒய்வூதியத்திற்காக 8042 இவிண்ணப்பப்படிவகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அவ்விண்ணப்பங்களில் 7,154 இற்கான செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட அண்ணளவாக 888 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு திரும்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

- 2019 ஆம் ஆண்டில் இறப்புப் பணிக்கொடைக்காக 1919 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றிருந்ததோடு அவற்றில் 978 இற்கான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன. குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏறக்குறைய 941 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடித ஆவணங்களின் நீண்ட கால பேணுகை மற்றும் கோப்புக்களை மிக இலகுவில் தேடிக்கொள்ளும் வகையில் மூன்றாம் மாடியில் விதவைகள் மற்றும் அனாதைகள் ஆவணக் காப்பகமொன்று நிறுவப்பட்டுள்ளது. அதில் உள்ளூராட்சி சேவை விதவைகள் மற்றும் அநாதைகளின் கோப்புக்கள், பிரிவெனாக்களின் ஆசிரியர்கள், தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஒய்வூதியக் கோப்புக்கள் போன்றன விதவைகள் மற்றும் அநாதைகள் கோப்புக்கள் ஏறத்தாழ 1,294,700 இனை வைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றில் 850,000 அளவிலான கோப்புக்கள் ஸ்கேன் செய்து நிறைவு செய்யப்பட்டுள்ளன.

## IV. கணக்குப் பிரிவு

தேசத்தின் முன்னேற்றத்திற்காக அரச வளங்கள் மற்றும் நிதியை வினைத்திறனாகவும் பயனுறுதி வாய்ந்ததாகவும் பயன்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அரச நிதிக் கொள்கைச் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப வெளிப்படைத்தன்மையுடனும் பொறுப்புடனும் நிறைவேற்றும் வகையில் நிதிக் கட்டுப்பாட்டினை பேணிச் செல்லும் நடவடிக்கை கணக்குப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- **மாதாந்தக் கொடுப்பனவுப் பிரிவு**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஓய்வூதியர்களின் சகல மாதாந்த ஓய்வூதியங்களையும் செலுத்துகையை ஒழுங்குபடுத்தும் செயற்பாடு இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அரச மற்றும் தனியார் வங்கி அமைப்பு, தபாலக அமைப்பு, கிராமிய வங்கி மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக குறித்த திகதியில் மாதாந்த ஓய்வூதியத்தை சகல ஓய்வூதியக்காரர்களுக்கும் செலுத்துவதுடன் தொடர்புடைய சகல பணிகளையும் மிக வினைத்திறனாக நிறைவேற்றப்படுகின்றது.

- **பணிக்கொடைப் பிரிவு**

ஒரு தடவை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவுகளில் ஓய்வூதியப் பணிக்கொடையும் ஒன்றாகும். இது பணிக்கொடைப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன், ஓய்வூதியர்களிடமிருந்து அரசுக்கு அறவிடப்பட வேண்டிய அறவிடல்கள் ஏதும் இருப்பின் அத் தொகையை அறவிட்டுக் கொள்ளும் நிகழ்வு இடம்பெறுவதோடு, எஞ்சிய பணத் தொகை ஓய்வூதியரின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்படுகின்றது.

- **மோசடிகள் தொடர்பான பிரிவு**

2/2006, 5/2015 மோசடிகள் மற்றும் அவற்றுடன் தொடர்பான சகல நிலுவைத் தொகை செலுத்துகை, பல்வேறு சம்பளத் திருத்தங்களை அடிப்படையாகக் கொண்ட நிலுவைத் தொகைச் செலுத்துகை மற்றும் ஐந்து இலட்சத்துக்குக் குறைவான நிலுவைத் தொகை செலுத்துகையை இப் பிரிவின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வனைத்து நிலுவைத் தொகைகள் AR மூலம் மேற்கொள்ளப்படுவதோடு பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் AR விண்ணப்பப்படிவங்களை உரிய வகையில் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் குறித்த விடய உத்தியோகத்தரினால் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கணக்காளரினால் நிலுவைக் கொடுப்பனவுகள் சான்றுப்படுத்தப்பட்டு செலுத்துகைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

Unreduced, Outstanding payment, Disable Allowances, Unpaid Pension Arrears, Allowance Arrears, 55 WOP Revision, Salary Revision WOP (From and Application), Widow/ Orphan Salary Increase போன்ற காரணங்களின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து மோசடிகள் தொடர்பான பிரிவினால் நிலுவைக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே Reason 2019 ஆம் ஆண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Secretaries Special Allowances 2019, SL – 4 Special Allowances 2019, Political Victimization, Incorrect

Basic Pension, 10 years Completed medical Board நிலுவைக் கொடுப்பனவுகள் மோசடிகள் தொடர்பான பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **விதவைகள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகை பிரிவு**

அரச ஊழியர்களின் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகையை திரட்டுதல், எவரேனும் ஒர் ஊழியரின் சேவை முடிவுத் திகதியில் விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திற்கான உரித்துடமை பெறுவதற்குரிய பயனாளிகள் அல்லாத விடத்து, அல்லது பயனாளிகளுக்கான உரித்துடமைகள் அல்லாதவிடத்து அரச ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்டுள்ள பங்களிப்புத் தொகையை அரச ஊழியர்களுக்கோ அல்லது அவர் மரணித்து விட்டால் அவரின் வாரிசுகளுக்கோ மீளச் செலுத்தல் விதவைகள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகைப் பிரிவினால் இடம்பெறுகின்றது.

1898 ஆம் ஆண்டு இலக்கம் 01 இனையுடைய விதவைகள், அநாதைகள் கட்டளைச் சட்டம் மற்றும் அதற்குரித்தாக திருத்தியமைக்கப்பட்ட மற்றும் 1983 ஆம் ஆண்டு இலக்கம் 24 இனையுடைய தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் சட்டம் மற்றும் அதற்குரித்தான திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டு சிவில் அரசின் உத்தியோகத்தர்களுக்கான 1970 ஆம் ஆண்டு இலக்கம் 18 இனையுடைய விதவைகள், அநாதைகள் சட்டம் மற்றும் 1998 ஆம் ஆண்டு இலக்கம் 60 இனையுடைய தபுதாரர்கள் மற்றும் விதவைகள் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஆயுதப் படை உத்தியோகத்தர்களுக்கான பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்தும் நடவடிக்கை இப் பிரிவின் மூலம் இடம்பெறுகின்றது. பங்களிப்புத் தொகை கிடைப்பனவுகளை சேகரித்தல் மற்றும் பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்துதல் விதவைகள் அநாதைகள் பங்களிப்புத் தொகைக் கிளையின் அடிப்படை பணியாகக் காணப்படுகின்றது.

**பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்துதல்**

| | 01/01/2015 க்கு முன்னர் | 01.01.2015 க்கு பின்னர் | க்குப் 16/10/2016 பின்னர் ஆன்லைன் முறைக்கு | இராணுவத்தினர் |
|---|---|---|---|---|
| 2019.01.01 நிலுவை | 29 | 64 | 21 | 44 |
| கிடைப்பனவுகள் | 141 | 439 | 1381 | 1465 |
| செலுத்துகை | 118 | 349 | 722 | 1475 |
| return | 05 | 96 | 588 | 34 |
| **ஆந் 2019.12.31 திகதிக்கான நிலுவை** | **47** | **58** | **92** | **0** |

- **வழங்கற் பிரிவு**

திணைக்களத்தின் பிரிவுகளின் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அலுவலக உபகரணங்கள், காகிதாதிகளைக் கொள்வனவு செய்தல், தகவல் தொழில்நுட்ப அமைப்புடன் தொடர்புடைய ஒப்பந்தங்களைத் தயாரித்தல் மற்றும் பெறுகைக் குழுக்களை நியமித்தல் வழங்கற் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

வழங்கற் பிரிவிற்குரிய பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக நான்காம் மாடியில் ஒழுங்குபடுத்தப்பட்டு நிறுவப்பட்டுள்ளதோடு, பிரிவுகளின் அவசியப்பாடுகளுக்கு ஏற்ப களஞ்சிய முகாமைத்துவ அமைப்பின் மூலம் பொருட்களுக்கான கொள்வனவுக் கட்டளையிட முடியும் என்பதோடு களஞ்சியசாலையில் பொருட்களை வைத்துக் கொள்ளாமல் துரிதமாக பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளும் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

- **மேலதிகக் கொடுப்பனவுப் பிரிவு**

ஓய்வூதியர்களுக்கு கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள பணத் தொகையை மீள அறவிடல் மற்றும் வேறு நிறுவனங்களினால் ஓய்வூதியத்திலிருந்து அறவிடப்பட வேண்டியவை என அறிவிக்கப்பட்டுள்ள (முற்பணம் பீ கணக்கின் நிலுவைகள், சம்பளம் மேலதிகமாக செலுத்தல் மற்றும் சேவைக் காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட தவறுகள் மற்றும் தாமதங்கள் காரணமாக அறவிடப்பட வேண்டிய தொகை) குறைக்கப்பட்டு ஓய்வூதியத்திலிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு உரித்தான நிறுவனங்களுக்கு பணம் அனுப்பி வைக்கும் செயற்பாடு இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டினுள் ஏனைய திணைக்களங்களுக்கான நட்டங்களை அறவிடப்பட்டு குறித்த நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்ட தொகை ரூபா. 7,209,717 ஆக காணப்படுவதோடு, தொடர்நதும் அறவிடப்படவுள்ள நட்டங்களின் நிலுவை ரூபா.23,881,806 ஆகும். இவ் வருடத்தில் நட்டங்கள் அறவிடப்பட்ட தொகை ரூபா.266,794,997 ஆகும் என்பதோடு நட்டங்கள் அறவிடப்பட்ட பொழிப்பு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| விபரம் | தொகை (ரூபா.) |
|---|---|
| 2019.01.01 ஆந் திகதிக்கு நிலுவை | 578,774,907 |
| <u>சேர்க்கப்பட்டது</u> | |
| 2019 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட சேதங்கள் | 256,413,367 |
| | 835,188,274 |
| <u>குறைக்கப்பட்டது</u> | |
| 2019 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட சேதங்கள் | 266,794,997 |
| **2019.12.31 ஆந் திகதிய நிலுவை** | **568,393,277** |

### V. அரச சேவை ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு

அரச சேவை ஊழியர் சேமலாப நிதியம், 1942 ஆம் ஆண்டு இலக்கம் 18 இனையுடைய அரச சேவை ஊழியர் சேமலாப நிதியக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1974-04-01 ஆந் திகதி மாதாந்த சம்பளத்தைப் பெறும் நிரந்தர ஓய்வூதியத்துடன் கூடிய அரசாங்க ஊழியர்களுக்காக சேவை முடிவில் நிதியியல் ரீதியான நலன்கள் வழங்கப்படுவதனை சான்றுப்படுத்தும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, 2003 ஆம் ஆண்டு இலக்கம் 17 இனையுடைய திருத்தத்தின் மூலம் நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந் நிதியம் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையின் கீழ் மேலதிக சொலிசிட்டர் நாயகம், தொழில் ஆணையாளர், தபால் மா அதிபர் மற்றும் நிதியத்தின் அங்கவர்களுடன் கூடிய ஐந்து பேரைக் கொண்ட குழுவொன்றின் மூலம் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

நிதியத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோளாக அமைவது ஓய்வூதியத்துடன் கூடிய மாதாந்த சம்பளம் பெறும் அரச ஊழியர்களுக்காக சேமலாப நிதிய முறைமைய உருவாக்குவதாகும். 2003-01-01 ஆந் திகதி முதல் ஓய்வூதியம் பெறாத மற்றும் எந்தவித சமூகப் பாதுகாப்பு முறையும் அற்ற சகல அரச ஊழியர்களுக்கும் இந் நிதியத்தின் மூலம் நன்மைகள் கிடைக்க இது விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

அரச சேவை ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் படி அரச சேவை ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்படும் 8% அளவுடைய பங்களிப்புத் தொகையும், அங்கத்தவர் சேவையாற்றும் நிறுவனத்தினால் செலுத்தப்படும் 12% அளவுடைய பங்களிப்புத் தொகையும் அரச ஊழியர் சேமலாப நிதியத்தில் வரவு வைக்கப்படுகின்றது. நிதியத்தை மீள செலுத்துவதற்காக அவசியப்படும் நிதியைத் தவிர ஏனைய சகல பணம், திறைசேரி உண்டியல், திறைசேரி பிணை முறி மற்றும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளதோடு, அவற்றிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற வட்டி விகிதாசாரமும் அங்கத்தவர்களுக்கு நலன்களாக வழங்கப்படுகின்றது. அதற்கமைய 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பங்களிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள வருடாந்த வட்டி விகிதம் ஒழுங்குமுறையே 13%, 12.61% மற்றும் 10.71% என்ற வகையிலாகும். இங்கு அரச ஊழியர் சேமலாப நிதிய கிடைப்பனவுகளை ஒழுங்குபடுத்தும் செயற்பாட்டினை அரச ஊழியர் சேமலாப நிதியப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டில் அரச ஊழியர் சேமலாப நிதியத்திற்காக கட்டாய பங்களிப்புத் தொகை என (8%) கிடைப்பனவுகள் மற்றும் ஊக்க ஊதியம் (12%) ரூபா. 887,091,009 ஆகும். நிதியத்திலிருந்து இவ் ஆண்டிற்கான செலுத்துகை ரூபா. 395,788,303 ஆகும்.

- **அரச ஊழியர் சேமலாப நிதிய கிடைப்பனவுகள் மற்றும் செலுத்துகைகள்**

| மாதம் | கிடைப்பனவுகள் (ரூபா.) | செலுத்துகை (ரூபா.) |
|---|---|---|
| சனவரி | 64,588,466 | 23,786,925 |
| பெப்ரவரி | 54,032,633 | 26,387,192 |
| மார்ச் | 74,105,702 | 27,575,262 |
| ஏப்ரல் | 54,465,166 | 20,972,715 |
| மே | 73,924,642 | 38,339,792 |
| ஜூன் | 79,663,331 | 23,392,525 |
| ஜூலை | 80,667,171 | 23,327,934 |
| ஆகஸ்ட் | 72,862,739 | 33,158,406 |
| செப்டம்பர் | 76,646,676 | 36,946,687 |
| ஒக்டோபர் | 105,100,362 | 47,229,265 |
| நவம்பர் | 82,983,029 | 35,432,289 |
| திசெம்பர் | 68,051,091 | 59,239,312 |
| **மொத்தம்** | **887,091,009** | **395,788,303** |

- அரச ஊழியர் சேமலாப நிதியத்தில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட மற்றும் நீக்கப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை

| மாதம் | செலுத்திய (நீக்கப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை) | புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சனவரி | 347 | 581 |
| பெப்ரவரி | 224 | 571 |
| மார்ச் | 305 | 641 |
| ஏப்ரல் | 208 | 407 |
| மே | 557 | 571 |
| ஜூன் | 336 | 920 |
| ஜூலை | 312 | 1013 |
| ஆகஸ்ட் | 483 | 1133 |
| செப்டம்பர் | 546 | 824 |
| ஒக்டோபர் | 541 | 652 |
| நவம்பர் | 956 | 639 |
| திசெம்பர் | 262 | 541 |
| **மொத்தம்** | **5,077** | **8,593** |

- **2019 ஆம் வருடத்தினுள் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் கிடைப்பனவுகள் மற்றும் செலுத்துகைக்காக**

| மாதம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | கொடுப்பனவுகள் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | எஞ்சிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2018.12.31 இற்கான நிலுவை | 582 | | | |
| சனவரி | 230 | 347 | 0 | |
| பெப்ரவரி | 510 | 224 | 0 | |
| மார்ச் | 447 | 305 | 72 | |
| ஏப்ரல் | 470 | 208 | 0 | |
| மே | 562 | 557 | 0 | |
| ஜூன் | 483 | 336 | 0 | |
| ஜூலை | 783 | 312 | 79 | |
| ஆகஸ்ட் | 611 | 483 | 0 | |
| செப்டம்பர் | 789 | 546 | 0 | |
| ஒக்டோபர் | 680 | 541 | 195 | |
| நவம்பர் | 422 | 956 | 78 | |
| திசெம்பர் | 448 | 255 | 0 | |
| **மொத்தம்** | 7017 | 5070 | 424 | 1523 |

### VI. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

திணைக்களத்தின் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக நிலவுகின்ற உள்ளக கட்டுப்பாட்டு முறையை ஆய்வு செய்வதன் மூலம் தவறுகள் மற்றும் மோசடிகளை தடுத்தல் மற்றும் கண்டுபிடித்துக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் உள்ளக பரிசோதனையை முறைசார்ந்ததாகவும் ஒழுங்காகவும் தொடர்ச்சியான சுயாதீன மதிப்பீட்டினை நடாத்துவது உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலமாகும்.

2019 ஆம் ஆண்டில் கணக்காய்வு செய்வதற்காக 15 பிரதேச செயலகங்களில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. என்றாலும் 11 பிரதேச செயலகங்களிலே கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 4 ஆம் காலாண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 4 நடாத்தப்பட்டுள்ளன. மேலும் மீளாய்வு ஆண்டினுள் கிடைக்கப் பெற்ற கடித ஆவணங்களின் அளவு மற்றும்

பரீட்சித்துப் பார்க்கப்பட்ட கடித ஆவணங்களின் அளவு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| | கிடைக்கப் பெற்ற கடித ஆவணங்களின் அளவு | பரீட்சித்துப் பார்க்கப்பட்ட கடித ஆவணங்களின் அளவு |
|---|---|---|
| 10 இலட்சத்துக்கு மேற்பட்ட நிலுவை ஓய்வூதியச் செலுத்துகை | 425 | 390 |
| பிரதேச செயலகங்கள் | 366 | 335 |
| திணைக்களத்தின் பிரிவுகள் மூலம் | 85 | 60 |
| ஏனைய நிறுவனங்களின் மூலம் | 01 | 01 |
| **மொத்தம்** | **877** | **786** |

## VII. சட்டப் பிரிவு

ஓய்வூதியத் திணைக்களம் தனது பணியை மிகக் கச்சிதமாக நிறைவேற்றிச் செல்லும் போது எழும் சட்ட ரீதியான பிணக்குகளுக்கு தீர்வுகளை வழங்குதல், மற்றும் அவற்றுடன் தொடர்புடைய சகல நிறுவன ஒருங்கிணைப்பு, திணைக்களத்தின் பிரதிவாதியாக மாற்றி நீதிமன்றத்தின் முன்னிலையில் தொடுக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் நிலவுகின்ற ஒழுங்கு விதி ஏற்பாடுகளைப் பின்பற்றி அவதானங்களை வழங்குவதற்கு சட்டப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

### சட்டப் பிரிவின் தொழிற்பாடுகள்

- திணைக்களம் தொடர்பாக நிலவுகின்ற சகல சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து செயலாற்றுதல்.
- மனித உரிமைகள் ஆணைக்குழு, பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான ஆணைக்குழு (ஒம்பூட்ஸ்மன்) அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களுக்கு பதிலளித்தல் மற்றும் விசாரணைகளுக்கு பங்குபற்றல்.
- இலஞ்சம் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் பரிசோதனைகளுக்கு கலந்து கொள்ளல் மற்றும் அவசியப்படும் அறிக்கைகளை தயாரித்தல்.

- சட்டப் பிரிவிடம் முன்வைக்கப்படும் ஓய்வூதியர்களின் பிணக்குகளுக்கு உரித்தான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.
- பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் திணைக்களத்தினால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களைத் தயாரித்தல்.

மேற்படி பணிகளுக்கு ஏற்ப நீதிமன்றம் மற்றும் ஏனைய குறித்த நிறுவனங்களுடன் ஆலோசனைக்காக பங்கேற்றல் மற்றும் அவதானங்கள் வழங்கப்பட்டுள்ள அளவுகள் 400 ஆகக் காணப்படுவதோடு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 21 ஆகும்.

## VIII. வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவு

இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் வெளிநாட்டில் உள்ள ஓய்வூதியர்களின் மற்றும் இரட்டை பிரஜாவுரிமை உள்ள ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தைச் செலுத்துதல், ஓய்வூதியக் கோவை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் என்பன வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டின் இறுதியின் போது ஓய்வூதியம் செலுத்தப்பட்ட வெளிநாட்டு ஓய்வூதியர்களின் எண்ணிக்கை 9768 ஆகும்.

| மாதம் | ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|
| சனவரி | 9089 | 207,732,663 |
| பெப்ரவரி | 9162 | 217,444,563 |
| மார்ச் | 9227 | 216,289,219 |
| ஏப்ரல் | 9276 | 225,048,298 |
| மே | 9373 | 226,765,954 |
| ஜூன் | 9436 | 240,325,376 |
| ஜூலை | 9492 | 227,708,651 |
| ஆகஸ்ட் | 9591 | 247,106,699 |
| செப்டம்பர் | 9643 | 237,882,224 |
| ஒக்டோபர் | 9682 | 236,168,601 |
| நவம்பர் | 9730 | 240,047,288 |
| திசெம்பர் | 9768 | 238,657,104 |
| **மொத்தம்** | | **2,761,176,640** |

## IX. ஆயுதப் படைச் சேவை ஓய்வூதியப் பிரிவு

அங்கவீனமுற்ற ஊழியர்களுக்கான ஓய்வூதியம், மாற்றமுற்ற பணிக்கொடை, ஊழியர் பணிக்கொடை, அங்கவீனமுற்றவர்களுக்கான ஓய்வூதியம், தங்கிவாழ்கின்றவர்களுக்காக செலுத்தப்படும் கொடுப்பனவு, இறப்புப் பணிக்கொடை, விசேட இழப்பீடு, மீள சேவைத் திருத்தங்கள் போன்ற நடவடிக்கைகள் மற்றும் இணைப்புச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் போன்ற கொடுப்பனவு நடவடிக்கைகள் ஆயுதப் படைச் சேவை பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டிற்கான அங்கவீனமுற்ற ஊழியர் ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

- ஓய்வூதியம் 9/2008 திருத்த இலக்கம் 11 ஆம் சுற்றறிக்கையை வெளியிடுதல். (அங்கவீனமுற்றோருக்கான ஓய்வூதியம் 50/60 வரையறை தொடர்பான பிரச்சினைகள்)
- ஓய்வூதியம் 6/2019 விசேட கடிதம் (ஓய்வூதியம் 9/2008 (11) ஆம் சுற்றறிக்கை தொடர்பாக பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டுவதற்காக பிரசுரிக்கப்பட்ட கடிதம்)
- ஓய்வூதியம் 9/2010 ஆம் இலக்கச் சுற்றறிக்கை திருத்தியமைக்கப்பட்டு உரிய சந்தர்ப்பத்தில் மருத்துவச் சபையிடம் சமர்ப்பிக்கப்படாத அங்கவீனமுற்ற இராணுவ உத்தியோகத்தர்கள் குறித்த ஓய்வூதியம்11/2019 ஆம் இலக்க விசேட கடிதத்தை வெளியிடுதல்.

- **மத்திய தரவுத் தளத்தினுள் சேர்க்கப்பட்ட ஓய்வூதியத்தின் அளவு**

| ஓய்வூதியத்தின் வகை | செலுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| சேவை ஓய்வூதியத்தைச் செலுத்தல் (10/12 க்குக் குறைந்த) | 365 |
| அங்கவீனர்களுக்கான முதற் கொடுப்பனவு | 647 |
| இராணுவத்தினர் திருத்தப்பட்ட | 2692 |
| மீள் திருத்தம் செய்யப்பட்ட | 275 |
| இறப்புப் பணிக்கொடை | 150 |
| சேவைப் பணிக்கொடை | 1025 |
| வாழ்வூதியப் படி | 231 |
| மீள் திருத்தம் (10/12 க்குக் குறைந்த) | 22 |
| இராணுவத்தினர் திருத்தப்பட்ட ( மீள சேவை) | 129 |
| **மொத்தம்** | **5536** |

- **பிரதேச செயலகங்களுடன் ஒன்றிணைந்து ஓய்வூதியத்தைச் செலுத்துதல்.**

| ஓய்வூதியத்தின் வகை | செலுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| அங்கவீனமுற்ற | 513 |
| இராணுவத்தினர் (மீள் திருத்தம் செய்யப்பட்ட மற்றும் 2014/10/01 க்கு முன்னர்) | 145 |
| வாழ்வூதியப் படி | 20 |
| பாதுகாப்புப் பத்திரக் கொடுப்பனவு | 455 |
| **மொத்தம்** | **1133** |

### X. தகவல் தொழில்நுட்ப பிரிவு

ஓய்வூதியம் செலுத்தும் செயற்பாட்டினை வினைத்திறனாகவும் துல்லியமாகவும் பேணிச் செல்வதற்காக தொடர்ந்தும் நவீன தகவல் தொழில்நுட்ப அமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டு ஓய்வூதியச் சமூகம், பிரதேச செயலகங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் ஓய்வூதியத் திணைக்களத்துடன் நேரடியாக ஒருங்கிணைப்பது இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### XI. ஊடகப் பிரிவு

அனைத்து பத்திரிகைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு ஓய்வூதிய விடயத்துக்குரிய தகவல்களை சேகரித்தல் மற்றும் முகாமைத்துவத்தின் அவதானமும் அத் தகவல்களை சமர்ப்பிப்பதும் ஊடகப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பிரதான செயற்பாடாக அமைந்துள்ளது. மேலும், தகவல் தொழில்நுட்ப விருத்தியுடன் தகவல் தொடர்பாடல் நடவடிக்கையையும் நவீன தொழில்நுட்ப பொறிமுறைகளின் ஊடாக மேற்கொள்வது திணைக்களத்தின் ஊடக அலகினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் போது உத்தியோகபூர்வ இணையத்தளம், உத்தியோகபூர்வ Facebook பக்கம், உத்தியோகபூர்வ youtube அலைவரிசை, இணையத்தள சஞ்சிகை மற்றும் ஓய்வூதியர்களுக்கான வானொலி போன்ற ஊடகங்களின் மூலம் தகவல்களை இற்றைப்படுத்தலும் ஏனைய ஊடக நிறுவனங்களுக்கு தகவல்களை வழங்கும் செயற்பாட்டினையும் ஊடக அலகினாலே இடம்பெறுகின்றது.

- **2019 ஆம் ஆண்டில் பிரதிபலித்துக் காட்டிய சில சந்தர்ப்பங்கள்**

  - **புதிய அறிமுகப்படுத்தல்கள்**

ஓய்வூதியத் திணைக்களத்தினுள் நிலவுகின்ற முறைமைகள் மற்றும் காணப்படும் நிலைமைகளை மேம்படுத்தி ஓய்வூதியச் செயற்பாட்டினை மென்மேலும் விருத்தி செய்யும் நடவடிக்கை 2019 ஆம் ஆண்டினுள் இடம்பெற்றது.


- **பௌதீக ரீதியாக மேம்படுத்துதல்**

உத்தியோகத்தர்களிடமிருந்து மேலும் பயனுறுதி வாய்ந்த சேவையை எதிர்பார்த்து அவர்களின் கடமைச் சூழலை நவீனமயப்படுத்தி சகல பிரிவுகளினதும் கடமைகளை மேற்கொள்வதற்கு உகந்த சுற்றுசூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அவசியப்படும் அலுவலகச் சூழலை நவீனமயப்படுத்தும் வேலைகள் இடம்பெற்றுள்ளது.

இதன் கீழ்,

- வெளிநாட்டு ஓய்வூதியம், சட்டம், கொள்கைகள் மற்றும் இராணுவம் ஆகிய பிரிவுகள் திணைக்களத்தின் மூன்றாம் மாடியிலே நவீனமயப்படுத்தப்பட்ட மற்றொரு இடத்தில் நிறுவப்பட்டுள்ளது.





- உள்ளக கணக்காய்வு மற்றும் அரச கணக்காய்வாளர் பிரிவு கட்டம் 3 இன் கீழ் நவீனமயப்படுத்தல்.



- வரையறுக்கப்பட்ட இடவசதியைக் கொண்ட நிர்வாகப் பிரிவு விரிவாக்கம் செய்யப்பட்டு மூன்றாம் மாடியில் நவீனமயம் செய்யப்பட்டுள்ளது மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக ஏனைய உத்தியோகத்தர்கள் 100 பேருக்கு ஒரே தடவையில் உணவருந்த முடியுமான வகையில் உணவகம் விரிவு படுத்தப்பட்டுள்ளது.







- நான்காம் மாடியில் கணக்குப் பிரிவு நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது .




- கொள்கைகள் மற்றும் வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவு நவீனமயப்படுத்தப்பட்டு அந் நிலப் பரப்பினை பயன்படுத்த முடியும் எனவும் அதில் 40 பேர் அளவு தங்கியிருந்து வேலை பார்க்க முடியுமான வகையில் அமைந்துள்ளது . அதேபோன்று கேட்போர்கூடம், மேலதிகப் பணிப்பாளர் நாயகத்திற்கான உத்தியோகபூர்வ அறையொன்று மற்றும் அதனை ஒட்டிய பணியார்த்தொகுதியனருக்கான இடமொன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது .





- ஒரே தடவையில் 120 பேருக்கு தங்கியிருக்க முடியுமான அளவுக்கு கீழ் மாடியில் உள்ள கேட்போர்கூடம் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது.
- ஐந்தாம் மாடியில் ஆவணக் காப்பகமொன்று நிர்மானிக்கப்பட்டு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளதோடு, மின் சுற்று அமைப்பொன்று புதுப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் நிறப் பூச்சிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.




**ஆக்கபூர்வமான முன்னேற்றம்**

- ஆவணக் காப்பகத்தில் காணப்படும் விதவைகள் மற்றும் அநாதைகளின் 8.5 இலட்சத்துக்கும் அதிகமான தொகை ஸ்கேன் செய்யப்பட்டு நிறைவடைந்துள்ளது.

- பிரதேச செயலகங்களுக்கான கணனிகளை பகிர்ந்தளித்து தகவல் தொழில்நுட்ப அமைப்பின் ஊடாக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக நிலவுகின்ற தடைகள் நீக்கப்பட்டுள்ளது. அத்தோடு ஓய்வூதியத் திணைக்களத்தினால் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு பயன்படுத்தும் வகையில் அவசியப்படும் தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை வழங்குவதன் ஊடாக கடமைகளைச் சரிவர செய்வதற்குரிய சூழலை ஏற்படுத்துதல்.

- ஓய்வூதியம் செலுத்தும் செயற்பாட்டின் போது ஓய்வூதியம் பெறுநர் உயிருடன் இருக்கின்றார் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வருடந்தோரும் ஓய்வூதியத் திணைக்களம், ஓய்வூதியப் பிரஜைகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் உயிர் வாழ்கின்றமைக்கான சான்றிதழ் (Life Certificate) நவீன தொழில்நுட்ப உபாயங்களுடன் இணைத்து உயிரியல் (Biometric) முறையின் மூலம் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.







- **வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்கள்**

- **தேசிய ஓய்வூதியர் தினக் கொண்டாட்டம்**

இலங்கை ஓய்வூதியப் பிரஜைகள் அரச சேவைக்காக ஆற்றிய பணிகளை மிகுந்த பெருமையுடன் நினைவு கூரும் வகையிலும் அவர்களால் நிறைவேற்றப்பட்ட முன்னுதாரணப் பணி நினைவாகவும் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் 08 ஆந் திகதி தேசிய ஓய்வூதியர் தினம் வெகு விமர்சையாக கொண்டாடப்படுகின்றது. இம்முறை நாட்டில் காணப்படும் சகல மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஓய்வூதியர்களின் பங்குபற்றலுடன் தேசிய ஓய்வூதியர் தின நிகழ்வுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் பங்குபற்றலுடன், கௌரவ பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் ரஞ்சித் மத்துமபண்டார அவர்களின் தலைமையின் கீழ் மற்றும் பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிரி அவர்களின் வழிகாட்டலுடன் 2019 ஒக்டோபர் மாதம் 08 ஆந் திகதியன்ற நெலும் பொக்குன மஹிந்த ராஜபக்ஷ அரங்கில் வெகு விமர்சையாக நடைபெற்றது. இவ்வருடம் தேசிய ஓய்வூதியர் தின விழா புதியதோர் ஓய்வூதியம் ” என்ற சிறப்புமிக்க தொனிப் பொருளினை அடிப்படையாக வைத்து நடாத்தப்பட்டது.





கற்றவர்களின் சொற்பொழிவுகள், ஓய்வூதியச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தி மேற்கொள்ளப்பட்ட சொற்பொழிவுகள், இராணுவத்தினரின் நடன நிகழ்ச்சிக் குழுவினால் அரங்கேற்றப்பட்ட சங்கீதம் மற்றும் நடனம் மற்றும் திரு. ரொட்னி வரணகுல அவர்கள் உள்ளடங்கிய கலைஞர் குழாத்தினால் முன்வைக்கப்பட்ட நகைப்பூட்டும் குறுந் நாடனம் அவ்விழாவை அழகுபடுத்தியது.





அதேபோன்று ஓய்வூதியச் சமூகத்திற்காக டயலொக் ஆசியாடா நிறுவனம் ஓய்வூதியர்களுக்கு உதவும் வகையில் தகவல்களைப் பெற முடியுமான Sri Lanka Pensions App இனை அறிமுகப்படுத்தி இம் முறை நடைபெற்ற விழாவை சிறப்புமிக்கதாக மாற்றியது.ஆக்கபூர்வமான கலை அம்சங்களுடன் அழகுற முன்வைக்கப்பட்ட இந்த தடவை தேசிய ஓய்வூதியர் தின விழாவில் கலந்து கொண்வர்களுக்கு தனியார் துறையில் பல்வேறு நிறுவனங்களின் நிதியியல் அனுசரணையுடன் விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன.




➢ **ஓய்வூதியக் கொடுப்பனவு (விளக்கப்படங்கள் மற்றும் அட்டவணைகள் மூலம்)**

▪ **வருடாந்த ஓய்வூதியர்களின் எண்ணிக்கை**


| வருடம் | ஓய்வூதியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2014 | 546,379 |
| 2015 | 560,462 |
| 2016 | 579,508 |
| 2017 | 600,867 |
| 2018 | 621,905 |
| 2019 | 639,984 |




மூலம்: கணக்குப் பிரிவு

• **மாகாணங்களின் அடிப்படையில் ஓய்வூதியர்களின் பரம்பல் – 2019**

| மாகாணங்கள் | ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| ஊவா மாகாணம் | 34,875 | 984,862,554 |
| கிழக்கு மாகாணம். | 26,445 | 750,549,807 |
| சப்ரகமுவ மாகாணம் | 51,894 | 1,550,169,605 |
| வடமேல் மாகாணம் | 74,017 | 2,199,409,129 |
| மத்திய மாகாணம் | 82,975 | 2,453,696,430 |
| வடமத்திய மாகாணம் | 42,664 | 1,251,462,999 |
| வட மாகாணம் | 21,040 | 601,974,812 |
| மேல் மாகாணம் | 218,909 | 6,565,949,332 |
| தென் மாகாணம் | 77,397 | 2,315,072,740 |
| வெளிநாட்டு ஓய்வூதியம் | 9,768 | 238,657,104 |
| **மொத்தம்** | **639,984** | **18,911,804,512** |





மூலம்: கணக்குப் பிரிவு

- **மாதாந்தம் ஓய்வூதியக் கொடுப்பனவுகளின் சுருக்கம்**


| மாதம் | ஒட்டுமொத்த செயலில் உள்ள ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | சிவில் மற்றும் இராணுவத்தினர் | விதவைகள் மற்றும் அநாதைகள் | மொத்தம் |
| சனவரி | 429,489 | 192,027 | 621,516 |
| பெப்ரவரி | 431,199 | 192,218 | 623,417 |
| மார்ச் | 433,015 | 192,314 | 625,329 |
| ஏப்ரல் | 435,272 | 192,657 | 627,929 |
| மே | 435,520 | 192,504 | 628,024 |
| ஜூன் | 436,733 | 192,338 | 629,071 |
| ஜூலை | 436,921 | 191,935 | 628,856 |
| ஆகஸ்ட் | 438,874 | 192,379 | 631,253 |
| செப்டம்பர் | 440,258 | 192,600 | 632,858 |
| ஒக்டோபர் | 442,212 | 192,606 | 634,818 |
| நவம்பர் | 443,792 | 192,956 | 636,748 |
| திசெம்பர் | 446,653 | 193,331 | 639,984 |

| மாதம் | புதிதாக இணைந்து கொண்ட ஓய்வூதியர்களின் எண்ணிக்கை 2019 | | | |
|---|---|---|---|---|
| | சிவில் | * இராணுவத்தினர் | விதவைகள் மற்றும் அநாதைகள் | மொத்தம் |
| சனவரி | 515 | 229 | 352 | **1.096** |
| பெப்ரவரி | 1,648 | 1075 | 813 | **3.536** |
| மார்ச் | 1,677 | 956 | 567 | **3.200** |
| ஏப்ரல் | 2,016 | 1348 | 881 | **4.245** |
| மே | 873 | 389 | 509 | **1.771** |
| ஜூன் | 1,542 | 853 | 389 | **2.784** |
| ஜூலை | 1,513 | 696 | 922 | **3.131** |
| ஆகஸ்ட் | 1,587 | 710 | 702 | **2.999** |
| செப்டம்பர் | 1,263 | 816 | 579 | **2.658** |
| ஒக்டோபர் | 1,311 | 1176 | 356 | **2.843** |
| நவம்பர் | 1,583 | 1015 | 853 | **3.451** |
| திசெம்பர் | 2,165 | 1602 | 900 | **4.667** |
| **மொத்தம்** | **17.693** | **10.865** | **7.823** | **36.381** |




- **இறப்புப் பணிக்கொடைக் கொடுப்பனவு – 2019**

| மாதம் | செலுத்தப்பட்ட ஆவணக் கோப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|
| சனவரி | 52 |
| பெப்ரவரி | 46 |
| மார்ச் | 94 |
| ஏப்ரல் | 95 |
| மே | 57 |
| ஜூன் | 74 |
| ஜூலை | 79 |
| ஆகஸ்ட் | 107 |
| செப்டம்பர் | 45 |
| ஒக்டோபர் | 140 |
| நவம்பர் | 71 |
| திசெம்பர் | 118 |
| மொத்தம் | **978** |




- **முனைப்பான சேவையில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் உயிர் நீத்த அல்லது அங்கவீனமுற்ற முப்படை இராணுவ மற்றும் பொலிஸ் சேவையின் உத்தியோகத்தர்களுக்கு இழப்பீட்டுத் தொகை மற்றும் கொடுப்பவுகளை செலுத்துதல் .**

| நிறுவனம் | 2019 திசெம்பர் வரை | |
|---|---|---|
| | எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை ரூபா . பில் . |
| இராணுவத்தினர் | 36,886 | 29.90 |
| கடற் படையினர் | 1,490 | 1.27 |
| வான் படையினர் | 539 | 0.48 |
| பொலிஸ் உத்தியோகத்தர் | 2,234 | 1.98 |
| மொத்தம் | **41,149** | **33.63** |




- **வருடாந்த ரீதியில் முனைப்பான சேவையில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் உயிர் பிரியும் அல்லது அங்கவீனமுறும் முப்படை இராணுவம் மற்றும் பொலிஸ் சேவையின் அங்கத்தவர்களுக்கான இழப்பீட்டுத் தொகை மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துதல்**

| | 2015 | | 2016 | | 2017 | | 2018 | | 2019 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நபர்களின் எண்ணிக்கை | செலவுகள் (ரூபா.) | நபர்களின் எண்ணிக்கை | செலவுகள் (ரூபா.) | நபர்களின் எண்ணிக்கை | செலவுகள் (ரூபா.) | நபர்களின் எண்ணிக்கை | செலவுகள் (ரூபா.) | நபர்களின் எண்ணிக்கை | செலவுகள் (ரூபா.) |
| இலங்கை இராணுவத்தினர் | 30,115 | 20,516 | 34,756 | 23,682 | 35,599 | 24,717 | 36,895 | 26,959 | 36,886 | 29,897 |
| இலங்கை கடற் படையினர் | 1,445 | 1,042 | 1,415 | 1,037 | 1,385 | 982 | 1,486 | 1,139 | 1,490 | 1,271 |
| இலங்கை வான் படையினர் | 575 | 405 | 560 | 410 | 534 | 404 | 564 | 427 | 539 | 486 |
| இலங்கை பொலிஸ் திணைக்களம் | 2,611 | 1,470 | 2,503 | 1,551 | 2,471 | 1,704 | 2,234 | 1,834 | 2,234 | 1,983 |
| மொத்த பெறுமதி | **34,746** | **23,433** | **39,234** | **26,679** | **39,989** | **27,808** | **41,179** | **30,359** | **41,149** | **33,637** |
| | | | | | | | | | | |


- **இறப்புப் பணிக்கொடைக் கொடுப்பனவு – 2019**

| பணிக்கொடை வகை | செலுத்தியவர்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை (ரூபா.) |
|---|---|---|
| சிவில் | 22,658 | 23,826,294,186 |
| கட்டமைக்கப்பட்ட | 1,426 | 569,905,539 |
| இராணுவத்தினர் | 207 | 86,298,818 |
| மரணங்கள் | 978 | 641,158,406 |
| ஏனைய* | 6,247 | 678,477,355 |
| **மொத்தம்** | **31,516** | **25,802,134,304** |




* சேவைப் பணிக்கொடை (09), திருத்தப் பணிக்கொடை

விசேட நட்டஈடு (10 மற்றும் சிவில்) மரணங்கள் (17)





- **வங்கிக்கு ஏற்ப கட்டணத் தவணைகள் மற்றும் வட்டி செலுத்துகை – 2019**

| மாதம் | மூலதனம் | வட்டி | தவணைத் தொகை |
|---|---|---|---|
| சனவரி | 338,730,783 | 606,799,628 | 945,530,410 |
| பெப்ரவரி | 339,198,873 | 611,066,701 | 950,265,574 |
| மார்ச் | 339,198,873 | 548,887,834 | 888,086,707 |
| ஏப்ரல் | 339,196,623 | 594,008,879 | 933,205,502 |
| மே | 339,196,623 | 583,708,214 | 922,904,837 |
| ஜூன் | 339,196,623 | 599,681,302 | 938,877,925 |
| ஜூலை | 339,196,623 | 577,429,975 | 916,626,598 |
| ஆகஸ்ட் | 339,196,623 | 593,604,240 | 932,800,864 |
| செப்டம்பர் | 339,196,623 | 590,405,655 | 929,602,278 |
| ஒக்டோபர் | 339,196,623 | 568,076,381 | 907,273,004 |
| நவம்பர் | 339,196,623 | 584,716,052 | 923,912,676 |
| திசெம்பர் | 339,196,623 | 561,816,550 | 901,013,173 |
| **மொத்தம்** | **4,069,898,137** | **7,020,201,410** | **11,090,099,548** |

மூலம்: கணக்குப் பிரிவு

- **நிலுவை சம்பளத் தொகையை செலுத்துதல் – 2019**

| மாதம் | எண்ணிக்கை | மாதாந்தச் செலவு |
|---|---|---|
| சனவரி | 822 | 7,277,926 |
| பெப்ரவரி | 1333 | 48,066,941 |
| மார்ச் | 784 | 36,492,817 |
| ஏப்ரல் | 796 | 35,092,043 |
| மே | 622 | 34,638,876 |
| ஜூன் | 981 | 50,541,041 |
| ஜூலை | 1130 | 80,978,478 |
| ஆகஸ்ட் | 1101 | 55,098,733 |
| செப்டம்பர் | 1040 | 63,054,390 |
| ஒக்டோபர் | 748 | 42,431,921 |
| நவம்பர் | 1347 | 70,940,303 |
| திசெம்பர் | 976 | 55,472,161 |
| **மொத்தம்** | 11,680 | 580,085,631 |



## 2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு

ஓய்வூதியத் திணைக்களத்தின் விடயப் பரப்புக்கு உரித்தான சகல கிடைப்பனவுகள் மற்றும் செலுத்துகைகளை ஒழுங்குபடுத்தி ஒட்டுமொத்த செயற்பாட்டினையும் வினைத்திறன் மிக்கதாக பேணிச் செல்வதற்காக துணை விடய பரப்புக்களாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டிற்கான அவ்வாறான வேறுபட்ட பிரிவுகளின் மூலம் செயற்படுத்தி சேவைகள் பெரும்பாலானவை மீள் கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது.

✓ அரச சேவையில் ஈடுபடும் அரச ஊழியர் ஒருவரை ஓய்வு பெறச் செய்தல் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்தின் செயற்பாட்டின் முதற் கட்டமாக அவ்வூழியர் ஓய்வூதியம் வழங்கும் செயற்பாட்டினுள் பதிவு செய்தல் வேண்டும் என்பதோடு, 2019 ஆம் ஆண்டில் ஓய்வூதியப் பதிவு செய்யும் பிரிவு, பன்முகப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு சேவைகள் பலவற்றினை ஒருங்கிணைப்புச் செய்து வருகின்றது.

✓ ஓய்வூதியம் செலுத்துவதனை முறைசார்ந்ததாகவும், துரிதமாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் மற்றும் பயனுறுதி வாய்ந்ததாகவும் மேற்கொள்ளும் நோக்கில் முன் கண்காணிப்பு பியசவின் கீழ் தொழிற்படுகின்ற விடயங்களை பன்முகப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவுடன் ஒன்றிணைப்பதன் மூலம் அப் பிரிவுக்கிடையில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

✓ மேலும், 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் தொடக்கம் கண்காணிப்பு பியசவின் நடவடிக்கைகளை முகாமை செய்வதற்காக Queue Management System என்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு கண்காணிப்பு நேர்முகப் பரீட்சைக்காக வருகை தரும் ஓய்வூதியர்களுக்கு தாமதங்கள் ஏதுமின்றி மிக விரைவாக சேவைகளை வழங்குவதற்கு அதனால் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

✓ ஓய்வூதிய பணிக்கொடையை செலுத்துவதற்காக முன்னர் இருந்த முறைமை திருத்தியமைக்கப்பட்டு 2019.01.01 ஆந் திகதி முதல் ஓய்வூதியத்தை செயற்படுத்துவதற்கான நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்து ஆளடையாளத்தை உறுதிப்படுத்தியதன் பின்னர் ஓய்வூதியப் பணிக்கொடையை ஓய்வூதியப் பெறுநர்களுக்கு வழங்குவதற்கு 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு அதன் ஊடாக செலுத்துகை மேற்கொள்ளப்படும் நபரின் ஆளடையாளமும் உறுதிப்படுத்தப்படுவதுடன் அவ் அமைப்பினுள் பாதுகாப்பு ஏற்பாடுகளை விருத்தி செய்வதற்கும் அதன் மூலம் முடியுமாக உள்ளது.

✓ கணக்குப் பிரிவு, மையப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவாக மீள்கட்டமைப்பு செய்யப்பட்டதுடன் அதுவரை பன்முகப்படுத்தப்பட்ட வகையில் இடம்பெற்ற ஓய்வூதியத் திருத்தத்திற்காக விண்ணப்பிக்கும் போது மையப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவின் ஊடாக அதனை மேற்கொள்ளும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியச் சுற்றறிக்கை 03/2015 இன் திருத்தத்தின் படி முதலாவது ஓய்வூதியப் பதிவினை ஆன்லைன் மூலம்

மேற்கொள்வதற்கான நடவடிக்கை இவ்வருடத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஜூலை மாதம் முதல் ஆன்லைன் தரவு தளத்தின் ஊடாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் வகையிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

✓ வெளிநாட்டில் உள்ள ஓய்வூதியப் பெறுநர்களுக்கான ஓய்வூதியத்தை செலுத்தும் நடவடிக்கை, ஓய்வூதியக் கோப்பு மற்றும் அதனைக் கொண்டு தொடர்புடைய செயல்களின் ஒருங்கிணைப்பு, நிர்வகித்தல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவுடன் தொடர்புடைய 2019 ஆம் ஆண்டில் பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதோடு, அதன் ஊடாக வெளிநாட்டு ஓய்வூதியம் குறித்து செய்யப்படும் வினவல்களின் அளவு கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 50% இனால் குறைவடைந்துள்ளது.

✓ 2018 ஆம் ஆண்டில் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் ஊடாக ஓய்வூதியம் செலுத்தும் நடவடிக்கை நிறுத்தப்பட்டு ஓய்வூதியம் 55% வீத அளவு, வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவின் வழிகாட்டலின் கீழ் பேணப்பட்டு வரும் வங்கிக் கணக்குகளின் மூலம் மீளவும் செலுத்துகை நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய ரூபா. 05 இலட்சம் மற்றும் 10 இலட்சத்துக்குக் கூடுதலான தொகை சரியான ஆவணங்களைக் கையளித்து நிலுவையாகவுள்ள அனைத்து ஓய்வூதியங்களும் தற்சமயம் செலுத்தப்பட்டு நிறைவடைந்துள்ளது.

✓ 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த 14/2019 ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்குவது தொடர்பில் அவ்வருடத்துக்குரிய நிவர்த்தியான உயிர் வாழ்வதற்கான சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் உள்ள வெளிநாட்டுக்குச் சென்றுள்ள இலங்கையர்கள் 2500 பேருக்கு முரண்பாடுகள் அற்ற ஓய்வூதியத்தை தயாரித்து நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

✓ வெளிநாட்டு தூதுவர் / உயர் ஸ்தானிகர் அலுவலகம் , வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் வங்கியுடன் சிறந்த தொடர்பினை பேணிச் செல்வதன் மூலம் ஓய்வூதியம் செலுத்தும் செயற்பாட்டுடன் தொடர்புடைய பிணக்குகளைக் குறைத்துக் கொள்வதற்கு முடியுமாக உள்ளது மற்றும் அதன் ஊடாக ஓய்வூதியம் செலுத்தப்படுதல் தாமதங்கள் இன்றி நடாத்திச் செல்வதற்கும் 2019 ஆண்டில் முடியுமாகக் காணப்படுகின்றது.

✓ விண்ணப்பப்படிவங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக ஏற்படும் தாமதங்களை தவிர்ப்பதற்கான பரீட்சிப்பு ஆவணமொன்றினை அறிமுகப்படுத்தல், கோப்புக்கள் காணாமற் போதலை குறைத்துக் கொள்வதற்காக முறைமைப்படுத்தப்பட்ட ஆவணக் காப்பகமொன்றினை நடாத்திச் செல்வதனைப் போன்றே ஆன்லைன் முறைக்கு விண்ணப்பப்படிவங்களுடன் உயிர் வாழ்வதற்கான சான்றிதழ் மற்றும் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் தயார்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளமையானது இந்த ஆண்டு பல சாதகமான மாற்றங்கள் செய்யப்பட்டன.

✓ ஓய்வூதியம் உரித்துடைய அரச உத்தியோகத்தர்கள் மரணித்ததன் பின்னர் அவரின் வாழ்க்கைத் துணைக்கு, அநாதைகளுக்கு மற்றும் அங்கவீனமுற்ற அநாதைகளுக்கு மாதாந்தம் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொடுக்கும் பணியில் ஈடுபடும் விதவைகள் அநாதைகள் பங்களிப்புத் தொகைப் பிரிவின் அடிப்படை தொழிற்பாடாக அமைவது பங்களிப்புத் தொகையை சேகரிப்பதும் பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்துவதுமாகும். பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்தும் முறைமையில் வினைத்திறனை அதிகரித்தல், அச் செயற்பாட்டினை துரிதப்படுத்தும் நோக்கில் 2019 ஆம் ஆண்டில் பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்துவதற்காக ஆன்லைன் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு அதற்கமைய பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்தும் செயற்பாட்டினை தற்சமயம் மிக விரைவான வினைத்திறன் மிக்க சேவையொன்றாக மாறியுள்ளது.

✓ அவ்வாறே விதவைகள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகை முழுச் சேவைக் காலத்துக்கும் அறவிடப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான மாதிரிப் படிவமொன்றை PD03 விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

✓ அரச சேவையில் சம்பள திருத்தம் தொடர்பாக அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இற்கமைய 2017.01.01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ஓய்வு பெற்ற சகல அரசாங்க உத்தியோகத்தர்களினதும் ஓய்வூதியத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு ஆன்லைன் ஊடாக முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டு தற்சமயம் ஒட்டுமொத்த ஓய்வூதியர்களும் 90% த்தினை விடக் கூடுதலான நலன்களை உரித்துடையதாக்கிக் கொடுப்பதற்கு முடியுமாகவும் உள்ளது.

✓ 2019 ஆண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கையின் படி 2016.12.31 ஆந் திகதி வரை ஓய்வு பெற்ற சகல அரசாங்க மற்றும் முப்படை இராணுவ உத்தியோகத்தர்களினதும் அவர்களின் விதவைகளினதும் ஓய்வூதியம் 2017 ஆம் ஆண்டில் அரசின் சம்பள கட்டமைப்புக்கு சமனானதாக மாற்றப்பட்டு 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு சம்பள சீராக்கம் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்தின் மையப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தினை மேம்படுத்தி புதிய தகவல் தொழில்நுட்ப மென்பொருளொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஓய்வூதியத் திருத்தச் செயற்பாடு நாடு பூராகவும் பிரதேச செயலகங்கள் ஊடாக ஆன்லைன் முறையின் கீழ் மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் நிவர்த்தியாகவும் துரிதமாகவும் மேற்கொள்வதற்கு அதன் மூலம் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

✓ ஓய்வூதியம் செலுத்தும் செயற்பாட்டின் போது ஓய்வூதியப் பெறுநர் உயிருடன் இருக்கின்றார் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வருடந்தோறும் ஓய்வூதியத் திணைக்களம் , ஓய்வூதியப் பிரஜைகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் உயிர் வாழ்கின்றமைக்கான சான்றிதழ் (Life Certificate) நவீன தொழில்நுட்ப உபாயங்களுடன் இணைத்து உயிரியல் (Biometric) முறையின் மூலம் பெற்றுக் கொள்வதற்கான துவக்கம் 2019 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## ❑ ஓய்வூதியத் திணைக்களத்தின் எதிர்காலப் போக்கு

- ✓ மையப்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப அமைப்பு மற்றும் நிறுவனஞ் சார் முகாமைத்துவக் கட்டமைப்பினை தரப்படுத்தி மற்றும் மேம்படுத்தி 2019 ஆம் வருடத்தில் ஓய்வூதியத் திணைக்களத்தில் இடம்பெற்ற சிறப்பான மாற்றச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு ஒட்டுமொத்த ஓய்வூதியப் பிரஜைகளுக்காக திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை மேலும் அதிகரிப்பதற்காக நிறுவனஞ் சார் விடயப் பரப்பு 2020 ஆம் வருடத்தில் தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக ஒரு புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் திணைக்களம் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

- ✓ ஓய்வூதியர்களின் உயிர் வாழ்வகின்றதற்கான சான்றிதழை வழங்கும் செயற்பாட்டிற்காக கை விரல் ரேகைகளைப் பெறும் நடவடிக்கை 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2016.01.01 ஆந் திகதியின் பின்னர் ஓய்வு பெற்றுச் சென்ற புதிய ஆன்லைன் மூலம் பதிவுகளை மேற்கொண்ட ஓய்வூதியர்களுக்கான கை விரல் ரேகைகள் பயன்பாட்டினால் உயிர் வாழ்கின்றமைக்கான சான்றிதழை வழங்கும் வசதிகளை ஏற்படுத்த அவசியப்படும் நடவடிக்கை தற்சமயம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்காக சகல அரச மற்றும் தனியார் வங்கிகளில் இது குறித்த வசதிகளை வழங்குவதற்கு 2020 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- ✓ அவ்வாறே ஓய்வூதியர்களின் முழுமையான சேவைக் காலத்துக்கு உரித்தான விதவைகள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகையை அறவிடுவதற்கு உரித்தான சான்றிதழைப் வழங்கும் போது நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படும் நடைமுறை சார்ந்த பிரச்சினைகளில் ( ஆவணங்கள் தொலைந்து போதல், அழிவுறுதல் போன்ற) கவனம் செலுத்தி அப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அவசியப்படும் சுற்றறிக்கை அறிவுரைக் கடிதங்களை வெளியிடுவதற்காக திணைக்களம் தற்சமயம் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

- ✓ நேர்முகப் பரீட்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடித ஆவணங்களில் விசேடமாக அவர்களின் பெயர்களில் காணப்படும் கோளாறு நிலைமையின் காரணமாக நிராகரிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ளும் நோக்கில் ஓய்வு பெறச் செய்வதற்கு முன்னர் அவற்றினைத் தீர்த்துக் கொள்வதற்கு அவசியப்படும் பிரச்சினைகள் தொடர்பாக நிறுவனத்தை விழிப்புணர்வூட்டுவதற்காக அவசியப்படும் ஆலோசனைக் கடிதங்களை வெளியிடும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு 2020 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

- ✓ விதவைகள் மற்றும் அநாதைகள் இலக்கத்துடன் கூடிய பிழையான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு அவை, நேர்முகப் பரீட்சையின் போது தெரியவருமிடத்து மீண்டும் விதவைகள் மற்றும் அநாதைகள் கோவைகளைப்

பரீட்சித்துப் பார்ப்பதற்கும் புதிய இலக்கங்களை வழங்குவதற்கும் ஏற்படுவதால் அதிகளவு காலம் எடுப்பதனால் ஆன்லைன் ஊடாக மீள பதிவு செய்யப்பட்டுள்ள (Online re-register) விதவைகள் மற்றும் அநாதைகள் இலக்கம் மாத்திரம் PMS அமைப்பினுள் சேர்க்கப்பட்டதன் பின்னர் அமைப்பினுள் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் தற்சமயம் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

- ✓ விதவைகள் மற்றும் அநாதைகளின் இலக்கங்களில் தவறுகள் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் PMS இல் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனும் தரவுகள் நேர்முகப் பரீட்சையின் போது திருத்தியமைக்கப்படுவதனால் ஓய்வூதியம் வழங்கும் பத்திரத்தை அதற்கு முன்னர் நிறுவனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுவதன் காரணமாக அதில் அவ்வாறான திருத்தங்கள் குறிப்பிடப்படாமை பின்னைய காலங்களில் சிக்கல்களை ஏற்படுத்தும் என இனங்காணப்பட்டுள்ளது. அதனால் நேர்முகப் பரீட்சையின் போது ஓய்வூதியம் செயற்படுத்தப்பட்டதன் பின்னர் மாத்திரமே வழங்கும் பத்திரம் PMS இன் மூலம் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் அமைப்பினை தயார்படுத்துவதற்கு தற்சமயம் ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- ✓ அதேபோன்று 2020 ஆம் ஆண்டில் ஆன்லைன் முறையில் பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்துவதற்கு உரிய கொடுப்பனவுகள் குறித்து ஓய்வூதியக்காரர் ஊடாக அறியப்படுத்துவதற்கும் அவ்வாறான கொடுப்பனவுகள் தொடர்பாக குறித்த நிறுவனங்களை விழிப்பூட்டும் வகையில் தகவல்களை தரவுத் தளத்தினுள் சேர்ப்பதற்கான இயலுமையை ஏற்படுத்துவது குறித்து தற்சமயம் அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது.

- ✓ அவ்வாறே 2020 ஆம் ஆண்டில் தேசிய அடையாள அட்டையற்ற வெளிநாட்டில் வாழ்கின்ற ஓய்வூதியர்களுக்கு கடவுச் சீட்டிலக்கத்தை தரவுத் தளத்தினுள் சேர்ப்பதன் மூலம் 14/2019 ஆம் இலக்க ஓய்வூதிய முரண்பாட்டினை நீக்குவதற்காக தற்போது காணப்படும் தகவல் தொழில்நுட்ப முறையை ஒழுங்காக ஆய்வு செய்து உசிதமான முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

- ✓ மேலும் உயிர் வாழ்கின்றமைக்கான சான்றிதழ் ஆன்லைன் முறை ஊடாக ஓய்வூதியத் தரவுத் தளத்தினுள் சேர்ப்பதற்கும் வெளிநாடுகளில் இருக்கும் இலங்கை ஓய்வூதியர்களுக்கும் சந்தர்ப்பத்தை வழங்குவதற்கும் எதிர்வரும் ஆண்டுகளினுள் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

- ✓ ஓய்வூதியம் செலுத்தும் முறை, பிரதேச செயலாளர். வாயில் (DS portal), ஓய்வூதிய முகாமைத்துவ அமைப்பு போன்ற தொகுதிகள் மூன்றினையும் ஒருங்கிணைத்து PMS 2.0 இனை உருவாக்குவது 2020 ஆம் ஆண்டில் முக்கிய சவாலாக மாறியுள்ளது.

- ✓ பயிற்சித் திட்டங்களளை ஏற்பாடு செய்து தொடர்ந்தும் விழிப்பூட்டுவதற்கான நடவடிக்கைகளின் பால் அடிப்படை அவதானங்கள் செலுத்தப்பட்டுள்ளது. அதனூடாக தற்போது காணப்படும் பாரிய பின்னடைவுகள் மற்றும் குறைபாடுகளை ஓரளவு குறைத்துக் கொள்வதற்கு முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்**

## 3. 2019.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

### 3.1. நிதிச் செயலாற்றுகைக் கூற்று

2019.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| பாதீடு 2019 | | குறிப்பு | உண்மை நிலை 2019 | உண்மை நிலை 2,018 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | | | |
| - | வருமான வரி | 1 | - | 0 | ஏசீஏ-1 |
| - | உள்ளுர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | 0 | |
| 30,000,000,000.00 | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | 0 | |
| 30,000,000,000.00 | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | 28,984,852,661 | 25,213,646,618 | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | 28,984,852,661 | 25,213,646,618 | |
| - | **வருமானம் பெறுகைகள்** | | - | 0 | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 224,191,545,265 | 182,967,680,000 | ஏசீஏ-3 |
| | திறைசேரிக்கு மீண்டுவந்த முற்பணங்கள் | | | -1,700,000,000 | |
| | பெற்றுக்கொண்ட தேறிய முற்பணம் | | 224,191,545,265 | 181,267,680,000 | |
| - | வைப்புகள் | | 8,798,384 | 17,467,659 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 52,205,855 | 48,947,134 | ஏசீஏ-5.:.5ஏ |
| - | ஏனைய பெறுகைகள் | | 43,437,572,432 | 27,819,626,215 | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **267,690,121,936** | 209,153,721,008 | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ ஸ்ரீ (அ)(ஆ)** | | **296,674,974,597** | 234,367,367,626 | |
| | **கழிக்குக : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | 0 | |
| 516,570,000.00 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 516,109,865 | 464,669,718 | |
| 73,685,257.00 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 72,889,754 | 72,390,290 | ஏசீஏ-2(ஐ) |
| 274,042,258,643.00 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 272,363,007,932 | 224,866,916,448 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | 0 | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | 60,780 | 0 | |
| 274,632,513,900.00 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)** | | **272,952,068,331** | **225,403,976,456** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 25,750,000.00 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 18,058,221 | 22,547,715 | |
| 10,121,100.00 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 9,084,010 | 8,682,085 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | | ஏசீஏ-2(ஐ) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | 0 | |
| 2,500,000.00 | திறன் அபிவிருத்தி | 14 | 669,170 | 1,686,952 | |
| 30,830,000.00 | பிற மூலதனச் செலவு | 15 | 30,816,675 | 30,993,314 | |
| 69,201,100.00 | **மொத்த மூலதனம் செலவினம் (உ)** | | **58,628,076** | 63,910,066 | |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)** | | **43,326,974,874** | 26,900,461,785 | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 8,621,606 | 14,447,230 | ஏசிஏ 4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 62,655,715 | 61,968,169 | ஏசீஏ-5.:.5(ஈ) |
| | **பிற கொடுப்பனவுகள்** | | 43,255,697,553 | 26,824,046,386 | |
| | **மொத்த செலவினம் எ ஸ்ரீ (ஈ,உ,ஊ)** | | **316,337,671,280** | **252,368,348,307** | |
| | **2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான முற்பண மீதி ஏ ஸ்ரீ (இ-எ)** | | (19,662,696,683) | -18,000,980,681 | |

## 3.2. நிதி நிலைமை தொடர்பான அறிக்கை

ஏசீஏ -பீ

2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமை அறிக்கை

| | குறிப்பு | உண்மை நிலை 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| **நிதி அல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 2,022,113,280.00 | 2,009,824,699.00 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5 | 161,170,739.00 | 150,720,879.00 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **2,183,284,019.00** | **2,160,545,578.00** |
| **தேறிய சொத்துக்கள் ∴ உரிமைப் பங்கு** | | | |
| தேறிய பெறுமதி | | 152,636,858.00 | 142,363,776.00 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 2,022,113,280.00 | 2,009,824,699.00 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | - | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்பக் கணக்குகள் | ஏசீஏ-4 | 8,533,881.00 | 8,357,104.00 |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **2,183,284,019.00** | **2,160,545,579.00** |

பக்க இலக்கம் 01 முதல் 30 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 31 முதல் 40 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| .......................... | .......................... | .......................... |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத் | பிரதான கணக்காளர் |
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : A. Jagath D. Dias | பதவி : |
| திகதி : | திகதி : Director General | திகதி : 26.02.2020 |
| S. Hettiarachchi<br>Secretary<br>Ministry of Public Administration, Home Affairs, Provincial Council and Local Government | Department of Pensions<br>Colombo 10. | A.D.T.N. ABEYSINGHE<br>Chief Accountant<br>Department of Pensions<br>Maligawatta,<br>Colombo 10. |

## 3.3. காசுப் பாய்ச்சல் தொடர்பான அறிக்கை

ஏசீஏ- சீ

2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி பாய்ச்சல் அறிக்கை

| | உண்மையான 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான பணப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 10,528,144,946 | 217,865,934,904 |
| பிற தலைப்புகளுக்கு சேகரிக்கப்பட்ட வருமானம் | 44,020,374,397 | |
| பணிமுற்பணங்கள | 224,191,545,265 | |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **278,740,064,608** | **217,865,934,904** |
| **கழிக்குக - பகிர்ந்தளிக்கப்பட்ட பணம்** | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 548,991,644 | 498,360,720 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 234,875,558,306 | 190,672,098,328 |
| பிற செலவின தலைப்புக்களுக்கு ஏற்படும் செலவு | 43,232,156,011 | |
| நிதிச் செலவுகள் - திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 203 | 42,105,071 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **278,656,706,164** | **191,212,564,119** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **83,358,444** | **26,653,370,785** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான பணப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| பௌதீக சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை | - | - |
| வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | 4,337,373 | - |
| | **4,337,373** | |
| **கழிக்குக - பகிர்ந்தளிக்கப்பட்ட பணம்:** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 37,469,355 | 39,867,285 |
| | 50,974,581 | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **88,443,936** | **39,867,285** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய பணப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-உ** | **(84,106,563)** | **(39,867,285)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய பணப் பாய்ச்சல் (எ)=(இ-ஊ)** | **(748,119)** | **26,613,503,499** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான பணப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தப் பணம் (ஏ)** | 6,894,473 | - |
| | **6,894,473** | |
| ***கழிக்குக - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வைப்புத்தொகை | | |
| வைப்புக் கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் மாற்றம் | 6,146,354 | 60,194,770 |
| அ.சேவை சேமலாப நிதியக் கொடுப்பனவுகள் | | 26,553,308,729 |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **6,146,354** | **26,613,503,499** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | **748,119** | **(26,613,503,499)** |
| **பணத்தில்ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) -(ஒ)** | **-** | **-** |
| **ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **-** | **-** |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **-** | **-** |

3

## 3.4. நிதி அறிக்கை குறிப்புகள்

### அறிக்கையிடலின் அடிப்படை

1) அறிக்கையிடல் காலப்பகுதி

2019 ஜனவரி 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு இந் நிதிஅறிக்கை அறிக்கையிடப்பட்டது.

2) கணிப்பீட்டு அடிப்படை

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) வருமானத்தை அடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவற்றின் வரியிடக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கள் கிடைக்கக் கூடிய காசின் அடிப்படையில் அடையாளங்காணப்படுகின்றது.

4) சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறுமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2019 டிசம்பர் 31இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

## 3.5. வருமானச் சேகரிப்பு தொடர்பான செயலாற்றுகை

ரூபா.,000

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டு விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்டுள்ள வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | அளவு (ரூபா.) | இறுதி வருமான மதிப்பீட்டின் % ஆக |
| | சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தொகை | | | | |
| 2004.1 | மத்திய அரசு | 19,000,000 | 19,000,000 | 18,958,921 | 99.78% |
| 2004.2 | மாகாண சபை | 11,000,000 | 11,000,000 | 10,025,932 | 91.14% |
| 2002.01.01 | வாடகை வருமானம் | 36,435 | 36,472 | 31,209 | 85.57% |
| | உள்ளூராட்சி நிதி | | | | |
| 8186 | ஆசிரிய விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் | 323,440 | 323,440 | 387,707 | 119.87% |
| - | உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் | - | - | 22 | - |
| - | விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் | - | - | 352 | - |
| - | உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் | - | - | 208,885 | - |

### 3.6. ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது தொடர்பான செயலாற்றுகை

ரூபா.,000

| நிதி ஒதுக்கீட்டின் வகை | ஒதுக்கப்பட்ட நிதித் தொகை | | உண்மையான செலவு | பயன்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு, முடிவுறுத்தப்பட்ட இறுதி நிதி ஒதுக்கீட்டின் அளவுகளின் விகிதாசாரமாக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப நிதி ஒதுக்கீடு | இறுதி நிதி ஒதுக்கீடு | | |
| மீண்டுவரும் | 254,834,000 | 274,632,575 | 272,952,071 | 99.4% |
| மூலதனம் | 64,000 | 69,201 | 58,628 | 84.7% |

### 3.7. நிதி ஒழுங்கு விதியின் 208 இன் பிரகாரம் , ஏனைய அமைச்சுகள் / திணைக்களங்களின் பிரதிநிதியொருவராக இத் திணைக்களத்துக்கு / மாவட்ட செயலகங்களுக்கு / மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்

ரூபா.,000

| தொடரிலக்கம் | நிதி ஒதுக்கீடுகளைப் பெற்ற அமைச்சுக்கள்/ திணைக்களம் | நிதி ஒதுக்கிட்டின் நோக்கம் | நிதி ஒதுக்கீடு | | உண்மையான செலவு | பயன்படுத்திய நிதி ஒதுக்கீடு, வழங்கப்பட்ட இறுதி நிதி ஒதுக்கீட்டின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப நிதி ஒதுக்கீடு | இறுதி நிதி ஒதுக்கீடு | | |
| 01 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு (104) | DO Trainee Salary | 960 | 960 | 870 | 91% |
| 02 | கட்டிடங்கள் திணைக்களம் (309) | வீட்டு வாடகை | 3,117 | 3,117 | 3,117 | 100% |

## 3.8. நிதியல்லாத சொத்து அறிக்கையிடலின் செயலாற்றுகை

ரூபா.,000

| வருமானக் குறியீடு | குறியீட்டு விபரம் | 2019.12.31 ஆந் திகதிக்கு பொருட் கணக்கெடுப்பு அறிக்கைக்கு ஏற்ப நிலுவை | 2019.12.31 ஆந் திகதிக்கு நிதி நிலைக் கூற்றுக்கு ஏற்ப நிலுவை | எதிர்காலத்தில் கணக்கியலுக்கு உட்படுத்தப்பட வேண்டிய | முன்னேற்றம் % இல் அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்கள் மற்றும் பொருட்கள் | 581,259 | 581,259 | - | 100% |
| 9152 | இயந்திராதிகள் | 242,449 | 242,449 | - | 100% |
| 9153 | காணி | 1,198,405 | 1,198,405 | - | 100% |
| 9154 | புலனாகாத சொத்துக்கள் | - | - | - | - |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | நடைபெற்று வரும் வேலைகள் | - | - | - | - |
| 9180 | வரி செலுத்தப்படும் சொத்துக்கள் | - | - | - | - |

### 3.9. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

LEW/D/D/DOP/02/20/13 2020 ஜுலை 14 ஆந் திகதி

ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்,
ஓய்வூதியத் திணைக்களம்.

**<u>ஓய்வூதியத் திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனைக் கொண்ட, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை</u>**

#### 1. நிதிக் கூற்று

#### 1.1 தகுதியுடைய அபிப்ராயம்

ஓய்வூதியத் திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான தகுதியுடைய கூற்று, அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை அறிக்கை மற்றும் காசுப் பாய்ச்சல் அறிக்கைகளை உள்ளடக்கி 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்று 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனையுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் ஏற்பாடுகளின் கீழ் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது ஏற்பாடுகளின் படி எனது ஆணைக்கு கட்டுப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனையுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்த்தின் 11 (1) ஆம் பிரிவின் படி ஓய்வூதியத் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக் கூட்டு தொடர்பில் எனது கருத்துரைகளை தெரிவித்தல் மற்றும் அவதானங்கள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (6) ஆம் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனையுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் படி முன்னளிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டும்.

இவ்வறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் மூலம் ஏற்படும் விளைவுகள் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களினால் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு ஓய்வூதியத் திணைக்களத்தின் நிதி நிலைமைகள் மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தர நியம அடிப்படைகளுக்கு அமைய

உண்மை மற்றம் நியாயமான நிலையை எடுத்துக் காட்டுகின்றது என்பது எனது அபிப்ராயமாகும்.

**1.2 தகுதியுடைய அபிப்ராயத்துக்கான அடிப்படை**

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக (இ.க.த. நி) இக் கணக்காய்வு நடாத்தப்பட்டுள்ளது. அத்தகைய தர நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன. எனது தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்றும் பொருத்தமானதென்றும் நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்களிக்கும் உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

இந் நிதிநிலை அறிக்கைகள் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற வகையிலும் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆந் திகதி இலக்கம் 271/2019 இனைக் கொணட அரச கணக்கீட்டுச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான போதுமானளவு பிறழ் கூற்றேதும் இல்லாத நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியப்படும் உள்ளக கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது கணக்களிக்கும் உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனையுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் படி ஓய்வூதியத் திணைக்களத்தினால் நிதியத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதன் வருமானம், செலவு , சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவர வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (அ) உப பிரிவின் படி ஓய்வூதியத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுறுதி மிக்க உள்ளக அமைப்பினைத் தயார்படுத்தி பேணிச் செல்லப்படுவதாக கணக்களிக்கும் உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும் என்பதோடு அவ்வமைப்பின் பயனுறுதித் தன்மை தொடர்பில் காலத்துக்குக் காலம் மீளாய்வினை மேற்கொண்டு அதற்கமைய அமைப்பினை உற்பத்தித்திறன் மிக்கதாக நடாத்திச் செல்வதற்கு அவசியப்படும் மாற்றங்களையும் மேற்கொள்ளல் வேண்டும்.

1.4 **நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்த நிதிக் கூற்றிலும்,மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவ் அறிக்கையை சமர்ப்பிப்பதும் எனது

குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும், குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்வு தரநியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப் படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுகள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும். பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், இந் நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் பயனர்களினால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களை எடுக்கும் போது அது தொடர்பில் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

தொழிற்துறைத் தீர்ப்பு மற்றும் தொழிற்துறை கட்டமைப்புடன் இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வு என்னால் செய்யப்பட்டுள்ளது.மேலும்,

- மோசடி அல்லது தவறின் காரணத்தினால் நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிட்டு, அத்தகைய ஆபத்துக்களுக்கு துலங்கல் காண்பிக்கும் விதத்தில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதனால் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும், எனது கருத்துரைக்கு போதியளவிலானதும் பொருத்தமானதானதும் கணக்காய்வு சான்றினை பெற்றுக்கொள்கிறேன். போதுமானளவு பிறழ் கூற்றுக்களினால் ஏற்பாடும் ஆபத்துக்களை விட மோசடியினால் ஏற்படும் ஆபத்துக்கள் பாரியதாக அமைவதோடு, கூட்டு நடவடிக்கை,போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்ந்திருத்தல் என்பன மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.
- கால அவகாசங்களுக்கு ஏற்ப உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவினைப் பெற்றிருந்தாலும் , உள்ளக கட்டுப்பாட்டின் பயனுறுதித் தன்மை தொடர்பான கருத்துரையினைத் தெரிவிப்பதற்கு நாடுவதில்லை.
- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உட்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருப்பதானது பாராட்டத்தக்கது.
- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களை முன்னளிக்கும் போது, நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றம் உள்ளடக்கத்துக்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான வகையில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும்

எனது கணக்காய்வினுள் அடையாளங் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுத் தேடல்கள், முக்கிய உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்களிக்கும் உத்தியோகத்தர் தெளிவுபடுத்தப்பட்டுள்ளார்.

### 1.5 ஏனைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அவசியப்பாடு தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (அ) ஆம் பிரிவின் படி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நான் கருத்துரைக்கின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்துப்போகின்றது என்பது பற்றி,

(ஆ) கடந்த வருடத்துக்கு உரித்தான நிதிக் கூற்று தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக் கூற்று தொடர்பில் கருத்துத் தெரிவித்தல்.

#### 1.6.1 நிதி நிலைமை பற்றிய கருத்து

1.6.1.1 திணைக்களத்தினால் நிதிச் செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கும் போது ஏனைய கிடைப்பனவுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் தலைப்புக்களின் கீழ் அரச ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஆசிரிய விதவைகள் அநாதைகள் நிதியம் ஆகிய இரு நிதியங்களின் கீழ் வருடத்தினுள் திரட்டப்பட்ட வருமானம் ரூபா.43,437,572,433 ஆன தொகை மற்றும் வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 43,255,697,553 ஆன தொகையையும் உள்ளடக்கியிருந்தது. என்றாலும், இந்நிதியங்கள் இரண்டுக்கும் வெவ்வேறாக நிதிக் கூற்றுக்கள் தயாரித்து கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

இந் நிதியத்தை சட்ட ஏற்பாட்டுத் தேவைக்கமைய நடைமுறைப்படுத்துவதற்கும், திணைக்களத்தின் நிதிக் கூற்றின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற தேவைப்பாடு குறித்தும் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும் என அவதானிக்கப்பட்டது.

வரைவு அறிக்கைக்காக பணிப்பாளர் நாயகத்தினால் எனக்கு முன்னளிக்கப்பட்டுள்ள பதிலகளுக்கமைய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 07/2006 இற்கமைய பொதுத் திறைசேரியினால் சட்டரீதியாகவும் சட்டரீதியற்ற வகையிலும் நிதிய மீளாய்விற்காக நியமிக்கப்பட்ட விசேட குழுவினால் ஆசிரிய விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குரிய சட்டங்களை திருத்தியமைத்து மூடப்பட வேண்டும் என்று முன்மொழியப்பட்டுள்ளதாக எடுத்துக் காட்டியிருந்தாலும் அது குறித்து அவசியப்படும் முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.6.2 காசுப் பாய்ச்சல் அறிக்கை

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளபட்டுள்ளன.

1.6.2.1 செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல்கள், (அ) மீதியைப் பரீட்சித்தல் செய்வதற்கமைய வருடத்திற்கான வருமானமற்ற கிடைப்புனவுகளின் பெறுமதி ரூபா. 10,182,139,721ஆன தொகையாக இருந்தாலும், காசுப் பாய்ச்சல் கூற்றுக்கேற்ப அதன் பெறுமதி ரூபா.10,528,144,946 ஆக

இருந்ததால் காசுப் பாய்ச்சல் கூற்றின் வருமானமற்ற கிடைப்பனவுகள் ரூபா.346,005,225 ஆன தொகையால் அதிகரித்துக் காட்டியிருந்தது.

(ஆ) மீதியைப் பரீட்சித்தலுக்கமைய வருடத்தினுள் ஏனைய தலைப்புக்களுக்காக திரட்டப்பட்ட நிதி ரூபா.44,253,207,827 ஆன தொகையாக இருந்தாலும் காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது ஏனைய தலைப்புக்களுக்காக திரட்டப்பட்ட வருமானம் ரூபா.44,020,374,397 ஆன தொகை வரை காட்டப்பட்டிருத்தல் அதற்குக் காரணம் ரூபா.232,833,430 ஆன தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தமையாகும்.

மேற்கூறப்பட்ட (அ) மற்றும் (ஆ) இன் வேறுபாடுகள் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சலின் கிடைப்பனவுகள் ரூபா.113,171,796 ஆன தொகையால் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(இ) மீதியை பரீட்சித்தல் மற்றும் ஏசீஏ 2 (ii) மாதிரிப் படிவத்துக்கமைய திணைக்களத்தினால் வருடத்தினுள் ஊழியர் வேதனாதிகள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளுக்காக ஏற்கப்பட்ட செலவுகள் ரூபா.598,352,726 ஆன தொகையாகும். என்றாலும் காசுப் பாய்ச்சலின் படி அதன் பெறுமதி ரூபா.548,991,644 ஆன தொகையாக காட்டுவதனால் ரூபா.49,361,082 ஆன தொகையாக குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) மீதியை பரீட்சித்தல் மற்றும் ஏசீஏ 2 (ii) செலவுக் கூற்றுக்கமைய மீளாய்வு வருடத்தினுள் திணைக்களத்தினால் நன்கொடைகள் மற்றும் பரிமாற்றங்கள் என்பவற்றிற்காக ரூபா.234,715,971,320 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த அப்பெறுமானம் ரூபா.234,875,558,306 ஆன தொகையாகையால் ரூபா.159,586,986 ஆன தொகையால் மேற்பட்டது என குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) மீதியைப் பரீட்சித்துப் பாரத்தமைக்கமைய ஏனைய விடயத் தலைப்புக்கள் ஏற்ற செலவுகள் ரூபா. 43,262,955,585 ஆன தொகையாக இருந்தாலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமானம் ரூபா.43,232,156,011 ஆன தொகையாக பதிவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா.30,799,574 ஆன தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

**1.6.2.2 முதலீட்டுச் செயற்பாடுகளினால் உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல்**

(அ) (i) மீதியைப் பரீட்சித்தலுக்கமைய வருடத்தினுள் முற்பண "பீ" கணக்கின் கீழ் அறவிட்டுக் கொள்ளல் ரூபா.40,062,582 ஆன தொகையாக இருந்தாலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் சேர்க்கப்பட்டிருந்த அதன் பெறுமானம் ரூபா.4,337,373 ஆன தொகையாக இருந்ததன் காரணமாக முற்பணக் கிடைப்பனவுகள் குறைவாக பதிவு செய்யப்பட்டுள்ள பெறுமதி ரூபா.35,725,209 ஆன தொகையாக இருந்தது. மேலும் ஏசீஏ 5 ஆம் கூற்றுக்கமைய முற்பணத் தொகை கிடைப்பனவுகள் 4,329,724 ஆன

தொகையாகவும் திறைசேரியின் அச்சிடலுக்கமைய கிடைப்பனவுகள் ரூபா.40,073,878 ஆன தொகையாகவும் குறிப்பிடப்பட்டிருந்ததனால் இவ்வெண்ணிக்கை ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது என அவதானிக்கப்பட்டது.

(ii) மீதியைப் பரீட்சித்துப் பார்த்தலுக்கமைய வருடத்தினுள் முற்பண "பீ" க் கணக்கின் கீழ் கொடுப்பனவுகள் ரூபா.50,983,977 ஆகவும், காசுப் பாய்ச்சல் கூற்றுக்கமைய அதன் கொடுப்பனவுகள் ரூபா.50,974,581 ஆன தொகையாகவும் பதிவு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா.9,396 இனால் குறைவைக் காட்டுகின்றது என அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏசீஏ 5 ஆம் கூற்றுக்கமைய அதன் பெறுமானம் ரூபா.50,977,977 ஆகவும் திறைசேரியின் அச்சிடலுக்கமைய ரூபா.51,343,912 ஆன தொகையாக காணப்பட்டமையால் அதன் எண்ணிக்கை ஒன்றுடன் ஒன்று முரண்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மீதியைப் பரீட்சித்துப் பார்த்தலுக்கமைய வருடத்தினுள் பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை கையகப்படுத்திக் கொள்ளலின் பெறுமாதி ரூபா. 40,569,854 ஆக இருந்தாலும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கமைய அதன் பெறுமானம் ரூபா.37,469,355 ஆகக் காணப்பட்டது. அதற்கமைய பௌதீக சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவு செய்தல் ரூபா.3,100,499 ஆன தொகையால் குறைவான காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

**1.6.2.3 நிதிச் செயற்பாடுகளினால் உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல்.**

மீதியைப் பரீட்சித்தல் மற்றும் திறைசேரியின் அச்சிடலிற்கமைய வ்வருடத்தினுள் வைப்புத் தொகையின் கிடைப்பனவுகளின் பெறுமதி ரூபா.8,798,384 ஆன தொகை என்றாலும் காசு பாய்ச்சலில் அப்பெறமதி ரூபா.6,894,473 ஆன தொகையாக 1,903,911 ஆன தொகையான குறைவைக் காட்டியிருந்தது.
அவ்வாறே வைப்பின் கொடுப்பனவு மீதியைப் பரீட்சித்தல் மற்றும் திறைசேரி அச்சிடலிற்கமைய ரூபா.8,621,606 ஆன தொகை என்றாலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா.6,146,354 ஆன தொகையாகவும் ரூபா.2,475,252 ஆன தொகையால் குறைவைக் காட்டியுள்ளது.

பணிப்பாளர் நாயகத்தினால் வரைவு அறிக்கைக்காக என்னால் வழங்கப்பட்ட பதில்களுக்கமைய திணைக்களத்தினால் காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது குறுக்குக் குறிப்புகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட கிடைப்பனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை நீக்கி விட்டு காசுப் பாய்ச்சலை கணக்கிடல் இவ்வேறுபாட்டுக்கான காரணமாக அமைந்துள்ளது.

## 2- நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

**(அ) வருமான குறியீட்டிலக்கம் 20:04:01:00 (மத்திய அரசு)**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

I. மீளாய்வு ஆண்டினுள் ரூபா. 42,736,960 ஆன தொகை வருமானத்திலிருந்து மீளச் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அக் கொடுப்பனவுகளில் ரூபா. 41,310,201 ஆன் தொகையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக 2001 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி இலக்கம் 1/ 2001 இனையுடைய ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 1 (அ) ஆம் பிரிவின் படி குறித்த நிறுவனங்களில் பற்றுக்கான அறிவித்தல் பெற்றிருக்கவில்லை.

II. சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தொகை ( விதவை / தபுதாரர் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகை) மத்திய அரசுக்கு மற்றும் வருமானக் கணக்கின் கீழ் பங்களிப்புச் செய்துள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பான தரவுத் தளத்தைப் பேணிச் செல்வதற்காக ஓய்வூதியத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் சமூகப் பாதுகாப்பு முறையினால் நலன்களைப் பெறவுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை தொடர்பில் தகவல்கள் காணப்படாமை, அதற்கிணங்க, உரித்துடையதாகும் விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் மற்றம் பங்களிப்புத தொகையை மீளச் செலுத்துதல் போன்ற நலன்கள் கிடைக்கப்பெறும் போது பங்களிப்புத் தொகை உண்மையாகவும், தொடர்ச்சியாகவும் கிடைக்கப்பெற்றதா என்பது பற்றி திணைக்களத்தினால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் உள்ளது.

வரைவின் அறிக்கைக்காக பணிப்பாளர் நாயகத்தினால் எனக்கு வழங்கப்பட்ட பதில்களுக்கமைய 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து சகல அரச ஊழியர்களினதும் தகவல்கள் அடிப்படைத் தகவல்கள் ஆன்லைன் தரவுத் தளமொன்றின் (On line) ஊடாக நிகழ்ச்சித்திட்டமொன்றை அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அரச துறையின் ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறாமையின் காரணமாக இந்நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்துவதில் தவிர்க்கப்பட்டது.

(ஆ) வருமானக் குறியீட்டு எண் 20:04:02:00 – சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தொகை – (மாகாண சபை)

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

I. சமூகப் பாதுகாப்பு பங்க்களிப்புத் தொகைக் கிடைப்பனவுகள் மற்றும் நிலுவைப் பங்களிப்புத் தொகை நிறுவனங்களுக்கு ஏற்பவும்

பங்களிப்பாளர்களுக்கு ஏற்பவும், குறிப்பாக இனங்காண முடியுமாகவுள்ள வகையில் உசிதமான தரவுத் தளம் தயார்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதோடு, உள்ளூராட்சி நிறுவனங்களினால் அனுப்பப்படும் பங்களிப்புத் தொகை வருமானமாகவும், உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிலுவை வருமானமாக அறிக்கையிடப்பட்டிருந்த பெறுமதி வருமான நிலுவையாகவும் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. அதன் காரணமாக மீளாய்வு ஆண்டினுள் இத் தலைப்பிற்காக ரூபா. 808,293,002 ஆன தொகை வருமான நிலுவையின் நிவர்த்தித்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதுள்ளதுடன் அப்பெறுமதி பங்களிப்பாளருக்கு ஏற்ப வேறுபடுத்தி ஒதுக்கவும் முடியாதுள்ளது.

II. 2001 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதிய இலக்கம் 1/2001 இனையுடைய ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 2.2 ஆம் பிரிவின் படி மாகாண சபைகளினால் சகல அலுவலகங்களினதும் பங்களிப்புத் தொகைக்கான ஒரு காசோலையின் மூலம் வழங்குவதாயின் ஒவ்வொரு மாதத்தினதும் அறவிடல்கள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், மீளாய்வாண்டின் அக்காசோலைகள் அனுப்பும் போது 14 நாட்கள் முதல் 94 நாட்கள் வரை தாமதமடையும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் நாயகத்தினால் வரைவு அறிக்கைக்காக எனக்கு அனுப்பி வைத்துள்ள பதில் பங்களிப்புத் தொகைக்கு ஏற்ப பெற்றுக்கொள்வதற்கு 20 நாட்கள் வரை காலம் வழங்கப்பட்டுள்ளதாகவும், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம், நிதி ஆணைக்குழுவுக்கும் இத் தாமதம் தொடர்பில் அறியப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இந்நிதி உரிய வகையில் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க ஏனைய சகல அரச நிறுவனங்களும் பொறுப்பாக இருக்க வேண்டும் என காட்டப்பட்டுள்ளது.

III. நேரடியாக காசோலை மூலம் பங்களிப்புத் தொகையை அனுப்பும் 05 நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரூபா. 756,996 ஆன பெறுமதியான காசோலைகள் 07 இனை பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆந் திகதி வரை மீள திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. என்றாலும் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் திகதியாகும் போது ஒரு வருடத்தை விடக் கூடிய காலம் கடந்துள்ள போதும் பங்களிப்புத் தொகை மீள கிடைக்கப்பெற்றிருக்க வில்லை என்பதோடு அது வருடத்தின் வருமான நிலுவையாகவும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.2 செலவு முகாமைத்துவம்

அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

(அ) மீண்டுவரும் செலவு விடயங்கள் 04 இற்கு மற்றும் மூலதன செலவு விடயங்கள் 06 இற்கும் உரித்தான மீதிகளின் பெறுமதி ஒழுங்குமுறையில் ரூபா.7,684,757 ஆகவும், ரூபா.10,032,998 ஆகவும் உள்ளதோடு, அது தேறிய நிதி ஒதுக்கீட்டின் நூற்றுக்கு 11 முதல் நூற்றுக்கு 91 வரையான இடைவெளியில் காணப்பட்டதோடு, அந் நிதி ஒதுக்கீடு சிறப்பாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் செலவு விடயங்கள் 04 இற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூபா.46,859,000 ஆன நிதி ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக நிதிப் பிரமாணம் 66/69 இன் நிதி ஏற்பாடுகள் ரூபா.16,365,000 இனை மாற்றிக் கொண்டதன் பின்னர் ரூபா.8,006,579 ஆன நிதி ஏற்பாடுகள் எஞ்சிக் காணப்பட்டன.

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் தொடர்புகளுக்கு கட்டுப்படுதல்.

மீளாய்வாண்டின் செலவு விடய இலக்கம் 253- 1 – 1.1002 இனை மற்றும் செலவு விடய இலக்கம் 253 – 1 – 2 .1502 இற்கான மீதியின் பெறுமதி ஒழுங்குமுறையில் ரூபா.180,904 இனை மற்றும் ரூபா.1,646,675,880 இனையும் கடன் பொறுப்புக்களின் பெறுமதி ஒழுங்குமுறையே ரூபா. 207,948 இனை மற்றும் ரூபா.2,424,690,280 ஆன தொகையாகையால் நிதி ஒதுக்கீட்டை விஞ்சிய கடன் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா.776,041,400 ஆகக் காணப்பட்டது.

## 2.4 கணக்களிக்கும் உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கணக்களிக்கும் உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுப்படுத்தல்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தும், அதற்கமைய நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

திணைக்களம் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுறுதித்தன்மை வாய்ந்த உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பொன்றினை தயாரித்து பேணிச் செல்வதாக கணக்களிக்கும் உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்த வேண்டும் என்பதோடு, அவ்வமைப்பின் பயனுறுதித்தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படி அமைப்பினை பயனுறுதி மிக்கதாக நடாத்திச் செல்வதற்கு அவசியப்படும் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு, அம்மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக அறிக்கைகள் எதுவும் கணக்காய்வுக்கு முன்னளிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 சட்டம், விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்காமை.**

**அவதானங்கள்**

**------------**

| **சட்டம், விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குரிய குறிப்பு** | **பெறுமதி ரூபா.** | **இணங்காமை** |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் நி.பி 371 (ஆ) | 142,000 | வழங்கப்பட்ட இடைக்கால கட்டு நிதி அது வழங்கப்பட்ட பணிகள் நிறைவு செய்தவுடன் தீர்க்கப்படல் வேண்டும் என்பதால் 03 சந்தர்ப்பங்களில் பெற்று கொள்ளப்பட்ட பெறுமதி ரூபா. 142,000 யாகவுள்ள கட்டுநிதியை 09-52 நாட்கள் வரையான காலத்துக்கு தாமதமாக தீர்க்கப்பட்டுள்ளது என மேற்படி பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை (i) xiv அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவு | | அலுவலக பயணம் ஆரம்பிக்கும் இடமாகக் கருதப்பட வேண்டியது உத்தியோகத்தர் சேவையாற்றும் சேவை நிலையம் அல்லது தான் வசிக்கும் வீடு என்ற இரண்டில் ஒன்று பயணத்திற்கு கிட்டிய இடமாக இருந்தாலும் கூட, அவ்வாறல்லாத பயணத்திற்கு தூர இடமொன்றிலிருந்து பயணம் ஆரம்பிக்கப்பட்டு இணைந்த படி மற்றும் பயணச் செலவினைப் பெற்றுள்ளதாக சந்தர்ப்பங்கள் 3 அவதானிக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| (ii) Xiv அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | இணைந்த படியைப் செலுத்துவதற்கு பயணம் செய்ய வேண்டிய குறைந்த பட்சத் தூரம் 11 கிலோமீற்றருக்கு (07 மைல்) அதிகமாக இருத்தல் வேண்டும் என்பதோடு அதற்குப் புறம்பாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தொடர்புடைய கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டுள்ளது. |
| (iii) Xiv ஆம் அத்தியாயத்தின் 28.6 ஆம் பிரிவு | தாமதமாக சமர்ப்பிக்கப்பட்ட பயணச் செலவிற்காக தாபன விதிக்கோவையின் படி குறைத்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும், அவ்வாறு குறைக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) ஓய்வூதியச் சுற்றறிக்கை

--------------------------

| | |
|---|---|
| (i) 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ஆந் திகதி மற்றும் இலக்கம் 01/2011 (திருத்தியமைக்கப்பட்ட) உடைய ஓய்வூதியச் சுற்றறிக்கை | ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் மாதாந்தம் ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கும் செயற்பாட்டை முறைசார்ந்தாக்க ஒழுங்கான கட்டுப்பாட்டு கணக்கினை பேணிச் செல்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான பரிசோதனைகளுக்கு ஏற்ப கொழும்பு, பன்னல மற்றும் நாரம்மல போன்ற பிரதேச |

| | |
|---|---|
| | செயலகங்களினால் அவ்வாறான கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. |
| (ii) 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி மற்றும் ஓய்வூதிய 1/2009 இலக்கத்துடைய சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தி | அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு ஓய்வூதியம் செலுத்தும் நடவடிக்கை குறித்த மேற்பார்வை முழுமையாக கிராம உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிய பாதுகாப்பு வழங்கப்படுவதை கிராம உத்தியோகத்தர் பொறுப்பேற்றல் வேண்டும் என்பதோடு மூன்று மாத கால அறிக்கையை கோப்பிடல் வேண்டும் என்றாலும் பரிசோதனையின் போது கொழும்பு பிரதேச செயலகத்துக்குரிய அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. |
| (இ) 2019 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 2/2019 இன் 04 ஆம் பிரிவு | பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் தயாரித்துள்ள நிபந்தனைகளை உள்ளடக்கிய கையேட்டின் 292 ஆம் கட்டளைக்கு ஏற்ப அரசிடமிருந்து ஓய்வூதியம் பெறுகின்ற நபரொருவரின் மரணத்தை பதிவு செய்யும் போது அது பற்றி பீ 73 இனையுடைய படிவத்தில் எழுதி |

மாவட்டப் பதிவாளருக்கு அல்லது மேலதிக மாவட்டப் பதிவாளருக்கும் , கொழும்பு நகரத்தின் வைத்தியப் பதிவாளர்களாயின் பதிவாளர் நாயத்துக்கும் தாமதமின்றி அறிக்கையிடல் வேண்டும். மேற்குறிப்பிட்ட பீ 73 அறிக்கையின் பிரதியொன்றை தமக்கு வாரத்துக்கு ஒரு முறை அனுப்புமாறும் குறித்த பிரதேச செயலாளர்கள் தனது கட்டுப்பாட்டின் கீழ் கடமையாற்றும் பதிவாளர்கள் மற்றும் வைத்தியப் பதிவாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தும் தொடர்புடைய பரிசோதனையின் போது வெளிப்பட்ட விடயங்களின் படி நாரம்மல, குருணாகல், யடிநுவர, ககவடகோரலை போன்ற பிரதேச செயலகங்களினால் அவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.6 முற்பணம் வழங்குதல் மற்றும் கணக்குத் தீர்த்தல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் கணக்கிணக்கக் கூற்றுக்கமைய அத்தினத்துக்கு பணித் தடை செய்யப்பட்டுள்ள, சேவையை விட்டு விலகிச் சென்றுள்ள மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் 5 வருடத்துக்கு மேற்பட்ட நிலுவையாகக் காணப்பட்ட 12 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா.718,350 ஆக காணப்பட்டதோடு அந் நிலுவை 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் அரச உத்தியோகத்தர்களின் முற்பண நிலுவை, தனியான நிலுவைகளின் வகைப்படுத்தல் சுருக்கத்துக்கமைய மற்றும் கட்டுப்பாட்டு கணக்கிற்கிடையில் ரூபா. 315,735 ஆன தொகை வித்தியாசம் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளதுடன் அவ் வித்தியாசத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா.85,877 ஆன தொகை 7 வருடங்களை விடப் பழைமையான மிதியாக உள்ளதோடு மீளாய்வு வருடத்தினுள் அம் மீதி தீர்க்கப்பட்டுக் காணப்படவில்லை.

2. செயற்பாட்டு மீளாய்வு மற்றும் செயலாற்றுகை

முன்னளிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம் , செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் செயற்பாட்டு மீளாய்வு, நிலைபேறான அவிபிருத்தி, நல்லாட்சி மற்றும் மனித வள முகாமைத்துவத்துக்கு உரித்தான கணக்காய்வு அவதானங்கள் மேற்குறிப்பிட்ட 1.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ரீ. ஜீ. ஐ. பத்மிணீ
உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக.

LEW/D/DOP/02/20/14 2020.07.31

ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்,
ஓய்வூதியத் திணைக்களம்.

**உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடு தொடர்பாக 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனையுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை.**

## 1. நிதிக் கூற்று

### 1.1 தகுதியடைய அபிப்ராயம்

உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு ஐந்தொகை மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவுக் கணக்குகள் மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான பணப் பாய்ச்சல் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய பதிவுகள், சாரம்சங்கள், முக்கிய கணக்கியல் கொள்கைகளையும் உள்ளடக்கியதாக 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்று 1974 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்கத்தடைய உள்ளூராட்சி சேவைகள் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள கட்டளை இலக்கம் 6 உடன் இணைந்ததாக வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (3) ஆம் ஏற்பாடுகள் மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி எனது ஆணைக்கு கட்டுப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் ஏற்பாடுகளின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்னளிக்கப்பட்டுள்ளது.

எனது அறிக்கையில் தகுதியடைய அபிப்ராயத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ள பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் செல்வாக்குகள் தவிர, நிதியத்தின் 2019 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதி நிலைமை மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்காக அதன் நிதியியல் செயற்பாடுகள் மற்றும் பணப் பாய்ச்சல் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைய உண்மையாகவும் நியாயமானதுமான பார்வையை வழங்குகின்றது என்பது எனது அபிப்ராயமாகவும் அமைகின்றது.

### 1.2 தகுதியடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 01 இற்குப் புறம்பாக நிதி அடிப்படையில் மீளாய்வு ஆண்டில் அடைந்திருந்த முன்னைய வருடங்களுக்கு உரித்தான பங்களிப்புத் தொகை ரூபா. 22,194 இனை மாத்திரம் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதோடு, தொடர்ந்தும் நிலுவையாக உள்ள பங்களிப்புத் தொகை சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1985 ஆம் ஆண்டு இலக்கம் 10 இனையுடைய உள்ளூராட்சி சேவைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் படி உள்ளூராட்சி சேவையில் ஓய்வூதியத்துடன் கூடிய உறுப்பினர்களின் தபுதாரர்கள் மற்றும் அநாதைகளின் ஓய்வூதியத்தைச் செலுத்தும் நோக்குடன் இந் நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. என்றாலும், 1993 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி சேவையை உருவாக்கியதன் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு உரித்துடைய ஓய்வூதியம் மற்றும் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நலன்கள் உரித்தாகின்றதன் காரணமாக 1993 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆந் திகதியின் பின்னர் இந்நிதியத்துக்கு புதிய அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அத்திகதியின் பின்னர் மரணித்த அங்கத்தவர்களின் தபுதாரர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்கு போதுமானளவு பணம் நிதியத்துக்கு சேராமையின் காரணமாக ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளைத் தயாரித்து நிதியத்தின் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நடப்பாண்டில் அவ்வாறே ஏற்கப்பட்டுள்ள செலவு ரூபா.65,329,870 ஆகக் காணப்படுகின்றது. அவ்வாறு நிதியம் செயலிழந்த நிலைமைக்கு மாற்றமடைவது தொடர்பில் கணக்குப் பதிவின் மூலம் வெ ளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக (இ.க.த. நி) இக் கணக்காய்வு நடாத்தப்பட்டுள்ளது. அத்தகைய தர நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன. எனது தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்றும் பொருத்தமானதென்றும் நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிநிலைக் கூற்றுகள் தொடர்பான முகாமையினதும் நிர்வாகத்துக்கு பொறுப்பானவர்களது பொறுப்புக்கள்

இந்நிதி நிலை அறிக்கைகள் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் முன்னளிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான போதுமானளவு பிறழ் கூற்றேதும் இல்லாத நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியப்படும் உள்ளக கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, நிதியை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு முடியுமான வகையில் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும் என்பதோடு, முகாமைத்துவத்தின் நிதியத்தை செலுத்தி தீர்த்து விடக் கருதுவதாயின் அல்லது வேறு மாற்றீட்டு முறைமைகள் இல்லாதிருந்தாலும் அதன் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தவிர தொடர்ச்சியான இருப்புக்குரிய காரணிகளை தெளிவுபடுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை அறிக்கையிடும் செயற்பாடு தொடர்பான பொறுப்பினை ஆளுகைக்கு பொறுப்பான தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவிற்கேற்ப, நிதியத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதன் வருமானம், செலவு , சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவர வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்த நிதிக் கூற்றிலும், மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அவ் அறிக்கையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர் மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும், குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்வு தரநியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப் படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுகள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும். பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், இந் நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழிற்துறைத் தீர்ப்பு மற்றும் தொழிற்துறை கட்டமைப்புடன் இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.மேலும்,

- மோசடி அல்லது தவறின் காரணத்தினால் நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிட்டு, அத்தகைய ஆபத்துக்களுக்கு துலங்கல் காண்பிக்கும் விதத்தில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதனால் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும், எனது கருத்துரைக்கு போதியளவிலானதும் பொருத்தமானதானதும் கணக்காய்வு சான்றினை பெற்றுக்கொள்கிறேன். போதுமானளவு பிறழ் கூற்றுக்களினால் ஏற்பாடும் ஆபத்துக்களை விட மோசடியினால் ஏற்படும் ஆபத்துக்கள் பாரியதாக அமைவதோடு, கூட்டு நடவடிக்கை,போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்ந்திருத்தல் என்பன மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.

- கால அவகாசங்களுக்கு ஏற்ப உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவினைப் பெற்றிருந்தாலும் , உள்ளக கட்டுப்பாட்டின் பயனுறுதித் தன்மை தொடர்பான கருத்துரையினைத் தெரிவிப்பதற்கு நாடுவதில்லை .
- பிரயோகத்தில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் தொடர்புடையதான வெளிப்படுத்தல்களின் தகுதிகள் பாராட்டத்தக்கது .
- நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் காரணமாக நிறுவனத்தின் இருப்பு தொடர்பில் போதியளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படை இங்கு தீர்மானிக்கப்படுகின்றது . போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் முடிவு செய்திருப்பதாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, அவ்வெளிப்படுத்தல்கள் போதியதற்றதாக இருப்பின் எனது கருத்தை மாற்றியமைக்க வேண்டும் . எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மீது தொடர்ச்சியான இருப்பு நிறைவடைவதற்கும் முடியும் .
- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உட்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருப்பதானது பாராட்டத்தக்கது .

எனது கணக்காய்வினுள் அடையாளங் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுத் தேடல்கள், முக்கிய உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகிக்கப்படும் தரப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்படும் .

## 2. ஏனைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அவசியப்பாடு தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தி ன் தேவைப்பாடு தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன .

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு இணங்க நிதியத்தின் நிதிக் கூற்று கடந்த வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது .
- 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு தேவைப்பாட்டுக்கு ஏற்ப கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது .

டப்ளியூ . பி . சீ . விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**LEW/D/DOP/02/20/15** **2020.07.24**

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்,
ஓய்வூதியத் திணைக்களம்.

**உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடு தொடர்பாக 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனையுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை.**

## 1. நிதிக் கூற்று

### 1.1 தகுதியுடைய அபிப்பிராயம்

உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு ஐந்தொகை மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான வருமான மற்றும் செலவுக் கணக்குகள் மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான பணப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய பதிவுகள், சாரம்சங்கள், முக்கிய கணக்கியல் கொள்கைகளையும் உள்ளடக்கியதாக 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்று உள்ளூராட்சி சேவைகள் கட்டளைச் சட்டத்தின் (264 ஆம் அதிகாரம்) 62 ஆம் பிரிவுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (3) ஆம் ஏற்பாடுகள் மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி எனது ஆணைக்கு கட்டுப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் ஏற்பாட்டின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்னளிக்கப்படும்.

இவ் அறிக்கையின் தகுதியடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை என்ற பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகள் தவிர்த்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான அதன் நிதி நிலைமைகள் மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்காக அதன் நிதியியல் செயற்பாடுகள் மற்றும் பணப் பாய்ச்சல் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைய உண்மையாகவும் நியாயமானதுமான பார்வையை வழங்குகின்றது.

### 1.2 தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை

**(அ)** இலங்கை அரச துரைறயின் கணக்கீட்டு தர நியம இலக்கம் 01 இன் படி நிதியத்தினால் வருமானம் இயல்பாகச் சேர்தலை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு வைக்கப்படல் வேண்டும் என்றாலும், மீளாய்வு ஆண்டில் முன்னைய வருடங்களுக்கு உரித்தான மற்றும் மீளாய்வு வருடத்துக்கு உரித்தாக கிடைக்கப்பெற்ற பங்களிப்புத் தொகை, நிதி என்ற அடிப்படையில் திறைசேரியிக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 1974 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்கத்துடைய உள்ளூராட்சி சேவைகள் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் படி உள்ளூராட்சி சேவையில் ஓய்வூதியத்துடன் கூடிய உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தும் நோக்குடன் இந்நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. எனினும், 1993 ஆம் ஆண்டில் மாகாண அரச சேவை நிறுவப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கு அரச உத்தியோகத்தர்களுக்கு உரித்துடைய ஓய்வூதிய நலன்கள் உரித்தாவதன் காரணமாக 1993 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆந் திகதியின் பின்னர் இந் நிதியத்தில் புதிய அங்கத்தவர்கள் எவரும் சேர்க்கப்படவில்லை.

2011 ஆம் ஆண்டின் பின்னர் உள்ளூராட்சி சேவையில் ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய்யம் செலுத்துவதற்கு போதுமானளவு நிதி நிதியத்துக்கு சேராமையின் காரணமாக ஓய்வூதிய திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டினைத் தயார்படுத்தி நிதியத்தின் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நடப்பாண்டில் அவ்வாறு ஏற்கப்படுகின்ற செலவு ரூபா.1,054,552,738 ஆன தொகையாகும். இவ்வாறு நிதியம் செயலிழந்த நிலைமைக்கு மாறுவது தொடர்பில் கணக்குப் பதிவின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு நிதிநிலை அறிக்கைக்கு ஏற்ப 287 உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து கிடைக்கப் பெற வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா.1,148,538,339 ஆகும். அந் நிலுவை தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த ஓய்வூதிய பங்களிப்புக்கள் காசுப் புத்தகத்திற்கு ஏற்ப 81 உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து கிடைக்கப் பெற வேண்டிய ரூபா.463,770,831 ஆன தொகை பங்களிப்புத் தெகையில் எவ்வித நிதியும் மிளாய்வாண்டில் கிடைக்கப் பெறவில்லை.

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக (இ.க.த. நி) இக் கணக்காய்வு நடாத்தப்பட்டுள்ளது. அத்தகைய தர நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்றும் பொருத்தமானதென்றும் நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிநிலைக் கூற்றுகள் தொடர்பான முகாமை மற்றும் நிர்வாகத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் முன்னளிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான போதுமானளவு பிறழ் கூற்றேதும் இல்லாத நிதி நிலை அறிக்கையை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியப்படும் உள்ளக கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, நிதியினை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு முடியுமான வகையில் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும் என்பதோடு, முகாமைத்துவம் நிதியத்தை செலுத்தி தீர்த்து விடக் கருதுவதாயின் அல்லது பதிலீட்டு முறைமைகள் இல்லாதிருந்தாலும் அதன் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தவிர தொடர்ச்சியான இருப்புக்குரிய காரணிகளை தெ ளிவுபடுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை அறிக்கையிடும் செயற்பாடு தொடர்பான பொறுப்பினை ஆளுகைக்கு பொறுப்பான தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவிற்கேற்ப, நிதியத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதன் வருமானம், செலவு , சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவர வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்த நிதிக் கூற்றிலும், மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அவ் அறிக்கையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும், குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்வு தரநியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப் படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுகள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும். பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ மேற்கொள்ளப்படும் செல்வாக்கு காரணமாக போதுமானளவு பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதோடு, இந் நிதிக் கூற்றுக்களின் அடிப்படையாகக் கொண்டு கணிப்பீட்டாளர்களினால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தவதாயின் அவை முக்கியமானவை.

என்னால் தொழிற்துறைத் தீர்ப்பு மற்றும் தொழிற்துறை கட்டமைப்புடன் இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.மேலும்,

- மோசடி அல்லது தவறின் காரணத்தினால் நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிட்டு, அத்தகைய ஆபத்துக்களுக்கு துலங்கல் காண்பிக்கும் விதத்தில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதனால் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும், எனது கருத்துரைக்கு போதியளவிலானதும் பொருத்தமானதானதும் கணக்காய்வு சான்றினை பெற்றுக்கொள்கிறேன். போதுமானளவு பிறழ் கூற்றுக்களினால் ஏற்பாடும் ஆபத்துக்களை விட மோசடியினால் ஏற்படும் ஆபத்துக்கள் பாரியதாக அமைவதோடு, கூட்டு நடவடிக்கை,போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்ந்திருத்தல் என்பன மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.

- கால அவகாசங்களுக்கு ஏற்ப உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவினைப் பெற்றிருந்தாலும் , உள்ளக கட்டுப்பாட்டின் பயனுறுதித் தன்மை தொடர்பான கருத்துரையினைத் தெரிவிப்பதற்கு நாடுவதில்லை.
- பிரயோகத்தில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் தொடர்புடையதான வெளிப்படுத்தல்களின் தகுதிகள் பாராட்டத்தக்கது.
- நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் காரணமாக நிறுவனத்தின் இருப்பு தொடர்பில் போதியளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படை இங்கு தீர்மானிக்கப்படுகின்றது. போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் முடிவு செய்திருப்பதாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, அவ்வெளிப்படுத்தல்கள் போதியதற்றதாக இருப்பின் எனது கருத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மீது தொடர்ச்சியான இருப்பு நிறைவடைவதற்கும் முடியும்.
- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உட்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருப்பதானது பாராட்டத்தக்கது.

எனது கணக்காய்வினுள் அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுத் தேடல்கள், முக்கிய உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகிக்கப்படும் தரப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்படும்.

**2. ஏனைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அவசியப்பாடு தொடர்பான அறிக்கை**

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தி ன் தேவைப்பாடு தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்து டைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு இணங்க நிதியத்தின் நிதிக் கூற்று கடந்த வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது.
- 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு தேவைப்பாட்டுக்கு ஏற்ப கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

டப்ளியூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

LEW/D/DOP/02/20/19 2020.07.31

ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்,

ஓய்வூதியத் திணைக்களம்.

**உள்ளூராட்சி சேவைகள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடு தொடர்பாக 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனையுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை.**

**1. நிதிக் கூற்று**

**1.1 தகுதியுடைய அபிப்பிராயம்**

உள்ளூராட்சி சேவைகள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான ஐந்தொகை மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான வருமான மற்றும் செலவுக் கணக்குகள் மற்றும் அத்திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான பணப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய பதிவுகள், சாரம்சங்கள், முக்கிய கணக்கியல் கொள்கைகளையும் உள்ளடக்கியதாக 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்று 1974 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்கத்தடைய உள்ளூராட்சி சேவைகள் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ளதும் 1985 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சேவைகள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் கட்டளை இலக்கம் 6 உடன் இணைந்ததாக வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (3) ஆம் ஏற்பாடுகள் மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்ட ஏற்பாடுகளின் படி எனது ஆணைக்கு கட்டுப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் ஏற்பாடுகளின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்னளிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் தகுதியுடைய அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்டுள்ள பாகங்களில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் செல்வாக்கினைத் தவிர, நிதியத்தின் 2019 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதி நிலைமை மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான அதன் நிதியியல் செயற்பாடுகள் மற்றும் பணப் பாய்ச்சல் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைய உண்மையாகவும் நியாயமானதுமான பார்வையை வழங்குகின்றது என்பது எனது அபிப்பிராயமாகவும் அமைகின்றது.

**தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை**

(அ) இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியம இலக்கம் 01 இன் படி பெருகியது என்பதனை அடிப்படையாகக் கொண்டு கணக்குப் பதியப்பட வேண்டும் என்றாலும், மீளாய்வு ஆண்டில் முன்னைய வருடங்களுக்கு உரித்தான கிடைக்கப்பெற்ற பங்களிப்புத் தொகை ரூபா. 174,558 இனை அடிப்படையாகக் கொண்டு திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் நிலுவையாக உள்ள பங்களிப்புத் தொகையை சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1974 ஆம் ஆண்டு இலக்கம் 16 இனையுடைய உள்ளூராட்சி சேவைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் படி உள்ளூராட்சி சேவையில் ஓய்வூதியத்துடன் கூடிய உறுப்பினர்களின் விதவைகள் மற்றும் அநாதைகளின் ஓய்வூதியத்தைச் செலுத்தும் நோக்குடன் இந் நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. என்றாலும், 1993 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி சேவையை உருவாக்கியதன் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு உரித்துடைய ஓய்வூதியம் மற்றும் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நலன்கள் உரித்தாகின்றதன் காரணமாக 1993 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆந் திகதியின் பின்னர் இந்நிதியத்தில் புதிதாக அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளவில்லை.

அத்திகதியின் பின்னர் மரணித்த அங்கத்தவர்களின் விதவைகள் மற்றும் பிள்ளைகளுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்கு போதுமானளவு பணம் நிதியத்துக்கு சேராமையின் காரணமாக ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளைத் தயாரித்து நிதியத்தின் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வாறே நடப்பாண்டில் ஏற்கப்பட்டுள்ள செலவு ரூபா.922,080,202 ஆகக் காணப்படுகின்றது. அவ்வாறு நிதியம் செயலிழந்த நிலைமைக்கு மாற்றமடைவது தொடர்பில் கணக்குப் பதிவின் மூலம் வெ ளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக (இ.க.த. நி) என்னால் இக்கணக்காய்வு நடாத்தப்பட்டுள்ளது. அத்தகைய தர நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள், இவ்வறிக்கையில் உள்ள நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்றும் பொருத்தமானதென்றும் நான் நம்புகிறேன்.

**1.3 நிதிநிலைக் கூற்றுகள் தொடர்பாக முகாமையினதும் நிர்வாகத்துக்கு பொறுப்பானவர்களதும் பொறுப்புக்கள்**

இந் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் முன்னளிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான போதுமானளவு பிறழ் கூற்றேதும் இல்லாத நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியப்படும் உள்ளக கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, நிதியினை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு முடியுமான வகையில் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும் என்பதோடு, முகாமைத்துவத்தின் நிதியத்தை செலுத்தி தீர்த்து விடக் கருதுவதாயின் அல்லது பதிலீட்டு முறைமைகள் இல்லாதிருந்தாலும் அதன் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தவிர தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் நிதியத்தின் தொடர்ச்சியான இருப்புக்கு உரித்தான காரணிகளை தெ ளிவுபடுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை அறிக்கையிடும் செயற்பாடு தொடர்பான பொறுப்பினை ஆளுகைக்கு பொறுப்பான தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவிற்கேற்ப, நிதியத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதன் வருமானம், செலவு , சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவர வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்த நிதிக் கூற்றிலும், மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அவ் அறிக்கையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர் மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும் குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப்படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுகள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும். பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சியாளர்களினால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்துகின்றது என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழிற்துறைத் தீர்ப்பு மற்றும் தொழிற்துறை கட்டமைப்புடன் இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.மேலும்,

- மோசடி அல்லது தவறின் காரணத்தினால் நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிட்டு, அத்தகைய ஆபத்துக்களுக்கு துலங்கல் காண்பிக்கும் விதத்தில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதனால் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும், எனது கருத்துரைக்கு போதியளவிலானதும் பொருத்தமானதானதும் கணக்காய்வு சான்றினை பெற்றுக்கொள்கிறேன். போதுமானளவு பிறழ் கூற்றுக்களினால் ஏற்பாடும் ஆபத்துக்களை விட மோசடியினால் ஏற்படும் ஆபத்துக்கள் பாரியதாக அமைவதோடு, கூட்டு நடவடிக்கை,போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்ந்திருத்தல் என்பன மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.

- கால அவகாசங்களுக்கு ஏற்ப உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் நிதியத்தின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவினைப் பெற்றிருந்தாலும் , உள்ளக கட்டுப்பாட்டின் பயனுறுதித் தன்மை தொடர்பான கருத்துரையினைத் தெரிவிப்பதற்கு நாடுவதில்லை.

- பிரயோகத்தில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் தொடர்புடையதான வெளிப்படுத்தல்களின் தகுதிகள் பாராட்டத்தக்கது.

- நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் காரணமாக நிறுவனத்தின் இருப்பு தொடர்பில் போதியளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படை இங்கு தீர்மானிக்கப்படுகின்றது.போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் முடிவு செய்திருப்பதாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, அவ்வெளிப்படுத்தல்கள் போதியதற்றதாக இருப்பின் எனது கருத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மீது தொடர்ச்சியான இருப்பு நிறைவடைய முடியும்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உட்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருப்பதானது பாராட்டத்தக்கது.

எனது கணக்காய்வினுள் அடையாளங் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுத் தேடல்கள், முக்கிய உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகிக்கப்படும் தரப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்படும்.

**2. ஏனைய சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் அவசியப்பாடு தொடர்பான அறிக்கை**

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் தேவைப்பாடு தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்து டைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு இணங்க நிதியத்தின் நிதிக் கூற்று கடந்த வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது.

- 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு தேவைப்பாட்டுக்கு ஏற்ப கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

டப்ளியூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

LEW/D/DOP/02/20/20 2020.07.31

ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்,
ஓய்வூதியத் திணைக்களம்.

**<u>ஆசிரியர் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத் திட்டம் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடு தொடர்பாக 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனையுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை.</u>**

## 1. நிதிக் கூற்று

### 1.1 தகுதியுடைய அபிப்ராயம்

ஆசிரியர் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்குரிய ஐந்தொகை மற்றும் அத்திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான வருமான மற்றும் செலவுக் கணக்குகள் மற்றும் அத்திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான கிடைப்பனவுகள் மற்றும் செலுத்துகை கணக்குகள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் குறித்த பதிவுகள், சாரம்சங்கள், முக்கிய கணக்கியல் கொள்கைகளையும் உள்ளடக்கியதாக 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1953 ஆம் ஆண்டு இலக்கம் 44 இனையுடைய பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் மற்றும் 9 ஆம் பிரிவுகளின் படி விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் 6 (1) ஆம் பிரிவுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (3) ஆம் ஏற்பாடுகள் மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி எனது ஆணைக்கு கட்டுப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் ஏற்பாடுகளின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்னளிக்கப்படும்.

இவ்றிக்கையில் தகுதியடைய அபிப்ராயத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ள பாகங்களில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் செல்வாக்கு தவிர, நிதியத்தின் 2019 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதி நிலைமை மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்காக அதன் நிதியியல் செயற்பாடுகள் மற்றும் பணப் பாய்ச்சல் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைய உண்மையாகவும் நியாயமானதுமான பார்வையை வழங்குகின்றது என்பது எனது அபிப்ராயமாகவும் அமைகின்றது.

### 1.2 தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை

(அ) 1953 ஆம் ஆண்டு இலக்கம் 44 இனுடைய பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதியச் சட்டக் கட்டளை இலக்கம் 04 இன் படி ஆசிரியர் விதவைகள் மற்றும் அநாதைகள்

பங்களிப்புத் தொகையிலிருந்து நிதியொன்றை திரட்டுவதன் மூலம் ஆசிரியர் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்தைச் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும் பங்களிப்புத் தொகையை திரட்டல் மற்றும் கொடுப்பனவுகளுக்காக நிதிக்குப் பதிலாக வேறொரு வங்கிக் கணக்கொன்று பேணிச் செல்லப்பட வில்லை என்பதோடு, பங்களிப்புத் தொகையை ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் வங்கிக் கணக்கில் திரட்டி வைத்திருத்தல் மற்றும் மேற்படி செலவுகள் ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவ்வாறு வருடத்தினுள் செலுத்தப்பட்ட விதவைகள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகையின் மதிப்பு மற்றும் நிதியம் செயலிழந்த நிலைக்கு மாறுதல் குறித்து கணக்குப் பதிவுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) பங்களிப்புத் தொகை மற்றும் ஏனைய வருமானங்களை சேகரித்தல் மற்றும் பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்துவதற்காக இறுதி கணக்கில் பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் கணக்கில் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுன் நிறைவடையும் ஐந்தொகையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள ரூபா. 1,039,177,078 இனை திறைசேரியின் பிரதிச் செயலாளரின் நிலுவை பெயரளவிலான நிலுவையாக உள்ளது என அவதானிக்கப்பட்டுள்ளது.

(இ) பிரிவெனாக்கள் மற்றும் தனியார் / உதவி பெறும் பாடசாலைகளின் ஆசிரியர்கள், விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகையாக நூற்றுக்கு 6 வீதத்தினையும் பங்களிப்பு ஓய்வூதிய நிதிப் பங்களிப்பாக நூற்றுக்கு 6 வீதமாகவும் இணைப்பு 2 இன் கீழ் பங்களிப்பு ஓய்வூதியத் திணைக்களத்துக்கு மாதாந்தம் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும் கல்வி அமைச்சினால் கணக்குப் பொழிவுகளின் மூலம் 2019 ஆம் ஆண்டில் 3 மாகாணங்களுக்கு வரவு வைக்கப்பட்டுள்ள ரூபா. 137,818,157 இனையுடைய தொகை எந்த உத்தியோகத்தரினால் எதற்குச் செய்யப்பட்ட பங்களிப்பு என இனங்காணப்படவில்லை.

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக (இ.க.த. நி) இக் கணக்காய்வு நடாத்தப்பட்டுள்ளது. அத்தகைய தர நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன. எனது தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்றும் பொருத்தமானதென்றும் நான் நம்புகிறேன்

**1.3 நிதிநிலைக் கூற்று தொடர்பாக முகாமையினதும் நிர்வாகத்துக்கு பொறுப்பானவர்களதும் பொறுப்புக்கள்**

இந் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் முன்னளிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான போதுமானளவு பிறழ் கூற்றேதும் இல்லாத நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியப்படும் உள்ளக கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, நிதியினை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு முடியுமான வகையில் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும் என்பதோடு, நிதியத்தை செலுத்தி தீர்த்து விடக் கருதுவதாயின் அல்லது மாற்றீட்டு முறைமைகள் இல்லாதிருந்தாலும் அதன் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தவிர தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்குகளைப் பதிவிடல் மற்றும் நிதியத்தினை தொடர்ச்சியாக பேணிச்செல்வதற்கு உரித்தான காரணிகளை தெளிவுபடுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை அறிக்கையிடும் செயற்பாடு தொடர்பான பொறுப்பினை ஆளுகைக்கு பொறுப்பான தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவிற்கேற்ப, நிதியத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதன் வருமானம், செலவு , சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவருதல் வேண்டும்.

1.4 **நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்த நிதிக் கூற்றிலும்,மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அவ் அறிக்கையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர் மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும் குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப் படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுகள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும். பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழிற்துறைத் தீர்ப்பு மற்றும் தொழிற்துறை கட்டமைப்புடன் இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.மேலும்,

- மோசடி அல்லது தவறின் காரணத்தினால் நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிட்டு, அத்தகைய ஆபத்துக்களுக்கு துலங்கல் காண்பிக்கும் விதத்தில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதனால் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும், எனது கருத்துரைக்கு போதியளவிலானதும் பொருத்தமானதானதும் கணக்காய்வு சான்றினை பெற்றுக்கொள்கிறேன். போதுமானளவு பிறழ் கூற்றுக்களினால் ஏற்பாடும் ஆபத்துக்களை விட மோசடியினால் ஏற்படும் ஆபத்துக்கள் பாரியதாக அமைவதோடு, கூட்டு நடவடிக்கை,போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்ந்திருத்தல் என்பன மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.

- கால அவகாசங்களுக்கு ஏற்ப உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவினைப் பெற்றிருந்தாலும் , உள்ளக கட்டுப்பாட்டின் பயனுறுதித் தன்மை தொடர்பான கருத்துரையினைத் தெரிவிப்பதற்கு நாடுவதில்லை.
- பிரயோகத்தில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் தொடர்புடையதான வெளிப்படுத்தல்களின் தகுதிகள் பாராட்டத்தக்கது.
- நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் காரணமாக நிறுவனத்தின் இருப்பு தொடர்பில் போதியளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படை இங்கு தீர்மானிக்கப்படுகின்றது.போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் முடிவு செய்திருப்பதாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, அவ்வெளிப்படுத்தல்கள் போதியதற்றதாக இருப்பின் எனது கருத்தை மாற்றியமைக்க வேண்டும்.எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மீது தொடர்ச்சியான இருப்பு நிறைவடைவதற்கும் முடியும்.
- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உட்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருப்பதானது பாராட்டத்தக்கது.

எனது கணக்காய்வினுள் அடையாளங் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுத் தேடல்கள், முக்கிய உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகிக்கப்படும் தரப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**2. ஏனைய சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் அவசியப்பாடு தொடர்பான அறிக்கை**

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் தேவைப்பாடு தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு இணங்க நிதியத்தின் நிதிக் கூற்று கடந்த வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது.
- 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு தேவைப்பாட்டுக்கு ஏற்ப கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

டப்ளியூ.பி.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

LEW/D/DOP/02/20/21 2020.09.11

ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்,

ஓய்வூதியத் திணைக்களம்.

**அரச சேவை ஊழியர் சேமலாப நிதியத்தின் 2019 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் தொடர்பாக 2018 இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் படி கணக்காய்வு தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை**

**1. நிதிக் கூற்று**

**1.1 மறுப்புக்கான அபிப்ராயம்**

அரச சேவை ஊழியர் சேமலாப நிதியத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான ஐந்தொகை மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவீனக் கணக்குகள் மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான பணப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய பதிவுகள், சாரம்சங்கள், முக்கிய கணக்கியல் கொள்கைகளையும் உள்ளடக்கியதாக 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1942 ஆம் ஆண்டு இலக்கம் 18 இனைக் கொண்ட அரச சேவை ஊழியர் சேமலாப நிதியக் கணக்கின் கட்டளைச் சட்டத்தின் (621 அதிகாரத்தின்) 24(1) ஆம் உறுப்புரையுடன் இணைந்ததாக வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (3) ஆம் ஏற்பாடுகள் மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி எனது ஆணைக்கு கட்டுப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் ஏற்பாடுகளின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்னளிக்கப்படும்.

நிதியத்தின் நிதிக் கூற்றுகள் தொடர்பாக நான் எவ்வித அபிப்ராயங்களையும் தெரிவிப்பதில்லை. அபிப்ராய மறுப்புக்கான அடிப்படை என்ற பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந் நிதிநிலை அறிக்கைகள் தொடர்பான கணக்காய்வு அபிப்ராயத்திற்கான அடிப்படையை முடியுமான அளவு வழங்கவும் மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் என்னால் முடியவில்லை.

**1.2 அபிப்பிராய மறுப்புக்கான அடிப்படை**

இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியம இலக்கம் 01 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் வருமான மற்றும் செலவுகள் திரட்டப்பட்ட அடிப்படைக்கு ஏற்ப கணக்குப் பதிவு செய்தல் வேண்டும் என்பதாலும், அதற்கு முரணாக வருடாந்த நிதிநிலை அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கை 2.4 (சீ) (ii) இன் கீழ் நிதியத்துக்கு

கிடைக்கப்பெறும் நிதி, நிதியை அடிப்படையாகக் கொண்டு கணக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மாதாந்த கணக்குச் சாரம்சங்களின் மூலம் பல்வேறு அரச நிறுவனங்களினால் நிதியத்தின் வங்கிக் கணக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ள பற்று மற்றும் வரவுகளில் கண்டறியப்படாத நிலுவைகளைத் தீர்க்கும் வரை செம்மையாக்கற் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு அக்கணக்கின் பற்று இருப்பு ரூபா.29,807,958 ஆக இருந்தாலும், அதற்குரித்தான உப அட்டவணைக்கு ஏற்ப இருப்பு ரூபா.24,517,312 ஆக ஆனதால் ரூபா.5,290,646 ஆகிய தொகையில் வித்தியாசம் அவதானிக்கப்பட்டுள்ளது.

நிதியத்துக்கு பங்களிப்புச் செய்துள்ள பங்களிப்பாளர்களின் தனிப்பட்ட கணக்குகள் பராமரிப்பதற்கு இணைவழி (Online) மூலம் தரவுத் தளமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் அதனை முறைசார்ந்த வகையில் செயற்படுத்தாமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதிக்கு ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள கட்டாய பங்களிப்புத் தொகை கணக்கின் நிலுவை ரூபா. 26,748,086,766 ஆகவும், தன்னார்வ பங்களிப்புத் தொகைக் கணக்கு நிலுவை ரூபா.41,481,802 உம் மற்றும் அரசின் பங்களிப்புத் தொகை கணக்கு நிலுவை ரூபா. 41,456,600,115 ஆன தொகை தொடர்பாகவும் கணக்காய்வின் போது திருப்திகரமான மட்டத்துடைய அவதானிப்பினை மேற்கொள்ள முடியாமற் போனது.

### 1.3. நிதிநிலைக் கூற்றுகள் தொடர்பான முகாமையினதும் நிர்வாகத்துக்கு பொறுப்பானவர்களது பொறுப்புக்கள்

இந் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் முன்னளிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான போதுமானளவு பிறழ் கூற்றேதும் இல்லாத நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியப்படும் உள்ளக கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, நிதியினை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு முடியுமான வகையில் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும் என்பதோடு, முகாமைத்துவத்தின் நிதியத்தை செலுத்தி தீர்த்து விடுவதற்கு கருதுவதாயின் அல்லது பதிலீட்டு முறைமைகள் இல்லாதிருந்தாலும் அதன் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தவிர தொடர்ச்சியான இருப்புக்குரிய காரணிகளை தெ ளிவுபடுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பினை ஆளுகைக்கு பொறுப்பான தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவிற்கேற்ப, நிதியத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதன் வருமானம், செலவு , சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவர வேண்டும்.

### 1.4. நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு ஏற்ப நடாத்தப்படும் கணக்காய்வினை மையமாகக் கொண்டு நிதியத்தின் நிதிநிலைக் அறிக்கைகளை தயார்படுத்துவது தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், மறுப்புக்கான அபிப்ராயம் எனும் பகுதியில் தெளிவுபடுத்தப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்ராயங்களை அடிப்படையாகக் கொண்டு வழங்குவதற்கு போதுமான மற்றும் தகுந்த கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு என்னால் முடியாமல் போனது.

## 2. ஏனைய சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின அவசியப்பாடு தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் தேவைப்பாடு தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்து டைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு இணங்க நிதியத்தின் நிதிக் கூற்று கடந்த வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது.

- 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு தேவைப்பாட்டுக்கு ஏற்ப கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 3. செயற்பாடுகள் குறித்த மதிப்பாய்வு

### 3.1. சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்புடையதற்று காணப்படுதல்.

பின்வரும் சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்புடையதற்றதாக இருக்கின்றமை தொடர்பில் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிக் குறிப்பு | ஏற்புடையதற்றது |
|---|---|
| (அ) 1942 அரசாங்க சேவை ஊழியர் சேமலாப நிதியக் கட்டளைச் சட்டத்தின் (621 அதிகாரம்)<br><br>(I) 16 (1 ஆ) மற்றும் 20 (ஆ) பிரிவு | திறமையின்மை, தவறான நடத்தை காரணமாக பங்களிப்பாளர் சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுமிடத்து அல்லது நிதியத்தின் பங்களிப்பாளர் அரச சேவையில் ஓய்வூதியம் உரித்துடைய பதவியொன்றுக்கு நியமிக்கப்படுமிடத்து அவ் அலுவலருக்காக அரசின் பங்களிப்புத் தொகை மற்றும் வட்டியுடன் அப்பங்களிப்பாளரின் கணக்கிற்கு அரசங்கத்தினால் வரவு வைக்கப்பட்ட பங்களிப்புத் தொகையின் அளவு நிதியத்தின் திரட்டு நிதியத்துக்கு மீளச்செலுத்தப்படுதல் வேண்டும் என்பதோடு 2019 ஆம் ஆண்டுக்குரிய ரூபா. 318,660,995 இனை செலுத்தாத அரசாங்கத்தின் பங்களிப்புத் தொகை மற்றும் வட்டியை திரட்டப்பட்டதாக இருந்தது. |
| (II) 25 ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்த பின்னர் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினால் திசெம்பர் 31 ஆம் தேதி வரை உறுப்பினர்களின் கணக்குகளின் இருப்புக்களை பங்காளர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்றாலும், அத்தகைய நடவடிக்கை இடம் பெற்றிருக்கவில்லை. |

### 3.2. செயலாற்றுகை

2019 சனவரி மாதம் 01 ஆந் திகதிக்கு செலுத்தப்படாத 592 விண்ணப்பங்கள் காணப்பட்டதோடு, வருடத்தினுள் நிதிய உறுப்பினர்களால் நலன்களைப் பெற்றுக்கொள்வாற்காக சமர்ப்பித்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 6435 ஆகும். அவற்றிலே மீளாய்வாண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியாகும் போது 5070 விண்ணப்பங்களுக்காக ரூபா.708,893,693 ஆன தொகை செலுத்தப்பட்டுள்ளதுடன் 434 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுக் காணப்பட்டன.

டப்ளியூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## 4. செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

### 4.1. நிறுவனத்தின் செயல்திறன் குறிகாட்டி (செயற்பாட்டுத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டது)

| செயற்பாடுகள் | துணைச் செயற்பாடுகள் | செயலாற்றுகைக் குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்படும் வெளியீடுகளின் விகிதாசாரம் (%) ஆக உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|---|---|
| | | | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| புதிய ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | ஓய்வூதியக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொண்ட ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | - | 89.03% | - |
| | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவு | | - | 83.68% | - |
| திருத்தியமைக்கப்பட்ட செலுத்துகைகள் | ஓய்வூதியத் திருத்தம் | செலுத்திய திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதியங்களின் அளவு | - | - | 31.31% |
| பணிக்கொடை மற்றும் ஏனைய செலுத்துகை | இறப்புப் பணிக்கொடை | | - | 88.90% | - |
| | அங்கவீனர்கள் ஓய்வூதியம் | | - | - | 62.84% |
| | புரவலன் பியச (சத்கார பியச) | நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | - | 89.03% | - |
| மாதாந்த ஓய்வூதியம் | மாதாந்த ஓய்வூதியம் – சிவில் | மாதாந்தம் நலன்களைப் பெற்ற ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | 100% | - | - |
| | பணிக்கொடை செலுத்துதல் மற்றும் கடன் தவணை | மாதாந்தம் நலன்களைப் பெற்ற ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | 96% | - | - |

| செயற்பாடுகள் | துணைச் செயற்பாடுகள் | செயலாற்றுகைக் குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்படும் வெளியீடுகளின் விகிதாசாரம்(%) ஆக | | |
|---|---|---|---|---|---|
| | | | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| சமூக நலன்புரி | முப்படையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் | மாதாந்தம் நலன்களைப் பெற்ற நபர்களின் எண்ணிக்கை | 96.39% | - | - |
| விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் | விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியங்களை செலுத்துதல் | மாதாந்தம் நலன்களைப் பெற்ற ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | 100% | - | - |
| விதவைகள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகை வருமானம்: வருமானச் சேகரிப்பு | மத்திய அரசு | மாதாந்த வருமானம் | 99.78% | - | - |
| | மாகாண சபை | மாதாந்த வருமானம் | 91.14% | - | - |
| | ஆசிரியர் விதவைகள் அநாதைகள் | மாதாந்த வருமானம் | 147.4% | - | - |
| விதவைகள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகை மீளச் செலுத்துதல் : | சிவில் | பயனாளிகளின் எண்ணிக்கை | - | 76.53% | - |
| | இராணுவத்தினர் | பயனாளிகளின் எண்ணிக்கை | 122.91% | - | - |
| | ஆசிரியர் விதவைகள் அநாதைகள் | பயனாளிகளின் எண்ணிக்கை | 100% | - | - |
| அரச ஊழியர் சேமலாப நிதியம் | அ.ஊ. சே.நி. அங்கத்தவர்களின் எண்ணிக்கை | வருடாந்த புதிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 143.1% | - | - |
| | பங்களிப்புத் தொகையை செலுத்துதல் | பயனாளிகளின் எண்ணிக்கை | - | - | 70.38% |
| | பங்களிப்புத் தொகை கிடைப்பனவுகள் | மாதாந்த பங்களிப்பு 8% மற்றும் 12% | 122% | - | - |

| செயற்பாடுகள் | துணைச் செயற்பாடுகள் | செயலாற்றுகைக் குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்படும் வெளியீடுகளின் விகிதாசாரம்(%) ஆக | | |
|---|---|---|---|---|---|
| | | | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| இயலளவு விருத்தி | கோப்பு முகாமைத்துவம் | கோப்புக்களை இற்றைப்படுத்தல் | 100% | - | - |
| | Friday Forum நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல். | மாதமொன்றுக்கு ஒரு நிகழ்ச்சித்திட்டம் என்றவகையில் நிறைவு செய்தல். | - | - | 50% |
| உற்பத்தித்திறன் | அபிவிருத்தி பணிகளுக்கான பயிற்சித் திட்டங்களை நடாத்துதல் | திணைக்கள உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல் | - | 75% | - |
| | உற்பத்தித்திறனிற்கு அவசியப்படும் பயிற்சி அமர்வுகளை நடாத்துதல் | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | - | 75% | - |
| தொகுதி சார் அபிவிருத்தி நடவடிக்கைகள் | PMS பராமரிப்பு நடவடிக்கைகள் | | 100% | - | - |
| | வருடி இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல் | வருடி இயந்திரங்களின் எண்ணிக்கை | 100% | - | - |
| | Firewall ஒப்பந்தத்தை இற்றைப்படுத்துதல் | இறுதி ஒப்பந்தம் | 100% | - | - |
| | இராணுவப் பிரிவினருக்காக புதிய தகவல் அமைப்பிற்கான தககவல்களை சேகரித்தல் | புதிய தகவல் அமைப்பு | 100% | - | - |
| | விதவைகள் மற்றும் அநாதைகள் பிரிவுக்கு புதிய அமைப்பிற்கான தேவைப்பாடு குறித்து தகவல்களை வழங்குதல் | புதிய தகவல் அமைப்பு | 100% | - | - |

| செயற்பாடுகள் | துணைச் செயற்பாடுகள் | செயலாற்றுகைக் குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்படும் வெளியீடுகளின் விகிதாசாரம் (%) ஆக | | |
|---|---|---|---|---|---|
| | | | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| நிறுவனச் சூழலை மேம்படுத்துதல். | மூன்றாம் மாடியின் நிர்வாகப் பிரிவினை அண்டிய பிரதேசங்களை நவீனமயப்படுத்துதல் | 2019 ஆம் ஆண்டினுள் சகல செயற்திட்டங்களையும் நிறைவு செய்தல். | 100% | - | - |
| | மூன்றாம் மாடியின் உணவகப் பகுதியை விரிவுபடுத்தி நவீனமயப்படுத்தல | | 100% | - | - |
| நிலுவைச் சம்பளத்தை செலுத்துதல் | சிவில் | ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | - | 76% | - |
| | இராணுவத்தினர் | | - | - | 32% |
| | மோசடிகள் | | - | - | 39% |
| வெளிநாட்டு ஓய்வூதியம் செலுத்தல் | சிவில் ஓய்வூதியம் | ஓய்வூதியர்கள் மற்றும் விதவைகளின் எண்ணிக்கை | *179% | - | - |
| | விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் | | 104.76% | - | - |
| | ஓய்வூதியத் திருத்தம் | | ** 840% | - | - |
| | நிலுவையாக உள்ள ஓய்வூதியத்தைச் செலுத்துதல் | | 100.7% | - | - |

* உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் மூலம் நிறுத்தி வைக்கப்பட்ட ஓய்வூதியத்தை உள்ளூர் வங்கிகளின் ஊடாக கொடுப்பனவு செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக வருடத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட 300 ஆக இருந்த வருடாந்த பயனாளிகளின் எண்ணிக்கை 538 ஆக வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. சதவீதமாக எடுத்துக் கொண்டால் அது 179% ஆகும்.

** 14/2019 இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு ஏற்ப வெளிநாடு சென்றுள்ள ஓய்வூதியர்களின் ஓய்வூதிய முரன்பாட்டினை நீக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக வருடத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட 250 இனை வருடாந்த ஓய்வூதியம் திருத்தியமைக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 2100 ஆகும் வரை அதிகரிக்கப்பட்டது. சதவீதமாக எடுத்துக் கொண்டால் அது 840% ஆகும்.

- 2019 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திற்கு ஏற்ப 2017.01.01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ஓய்வு பெறச் செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் ஓய்வூதியத்தை திருத்தியமைப்பது தொடர்பாக வெளியிடப்பட்ட 2019.05.31 ஆந் திகதி மற்றும் இலக்கம் 14/2019 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை, 01/2019 ஓய்வூதியச் சுற்றறிக்கை மற்றும் அது தொடர்பில் வெளியிடப்பட்ட திருத்தங்களுக்கு ஏற்ப ஓய்வூதிய முரன்பாடுகளை நீக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2017.01.01 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வூதிய உரித்துடமையுள்ள ஓய்வூதியர்களின் 450,358 இற்கான ஓய்வூதிய முரண்பாடுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதோடு அதற்காக ரூபா.5,539,578,593 அளவுடைய தொகை செலவிடப்பட்டுள்ளது.

## 5. வளங்கள் தொடர்பான விபரத் திரட்டு

### 5.1. ஆளனி முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | காணப்படும் பதவியணி | பதவி வெற்றிடங்கள் (மேலதிகமான) ** |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 34 | 26 | 08 |
| மூன்றாம் நிலை மட்டம் | 11 | 05 | 06 |
| இரண்டாம் நிலை மட்டம் | 1078 | 931 | 147 |
| ஆரம்ப நிலை மட்டம் | 75 | 71 | 04 |

### 5.2. மனித வள அபிவிருத்தி

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற உத்தியோகத் தர்களின் எண்ணிக்கை | பயிற்சித் திட்டத்தின் கால எல்லை | ஒட்டுமொத்த முதலீடு (ரூபா.) | | நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (வெளிநாட்டு /உள்நாட்டு) | வெளியீடு /பெற்ற அறிவு* |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளி நாட்டு | | |
| பாதுகாப்பாக வாகனம் ஓட்டுதல் | 2 | 1 | | | உள்நாட்டு | |
| குடிமகன் அவதானம் தொடர்பாக விழிப்புணர்வுத் திட்டம் | 2 | 1 | | | | |
| அரச துறை உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வூட்டல் திட்டம் (Awareness Programme for the Public Sector Officers) | 2 | 1 | | | | |
| உற்பத்தித்திறன் | 50 | 1 | | | | |
| ஊழியர் ஊக்குவிப்பு | 50 | 1 | | | | |
| அலுவலக நடைமுறை மற்றும் கடிதம் தயாரித்தல் | 70 | 1 | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தித்திறன் | 50 | 1 | | | | |
| ஊழியர் ஊக்குவிப்பு | 40 | 1 | | | | |
| அலுவலக நடைமுறை மற்றும் கடிதம் தயாரித்தல் | 42 | 1 | | | | |
| இராஜதந்திரம் தொடர்பான டிப்ளோமா மற்றும் உலக விவகாரங்கள் (Diploma in Diplomacy & World Affairs 1 Year) | 2 | 1 | | | | |
| பொது நிருவாகம் தொடர்பான முதுமானிப் பட்டம் (Masters in Public Administration 1 Year) | 1 | 1 | | | | |

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது /இணக்கமற்றத) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| **1.** | **பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | ஏற்புடையதற்றது | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | | | |
| 1.6 | ஏனைய | | | |
| **2.** | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி. 445)** | | | |
| 2.1 | அ.நி.சு. 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினவல் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது /இணக்கமற்றத) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்குப் பொழிவுகளையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்புப் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் பதிவேட்டை (GA-N20) புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **03** | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது | இணக்கமானது | | |

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது /இணக்கமற்றத) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 ஆந் திகதிய அரச கணக்குச் சுற்றறிக்கை இலக்கம் 171/2004 இன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை | இணக்கமானது | | |
| **4** | **வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களை தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டத்தைத் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணகாய்வுத் திட்டங்களை தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்து தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது | | |

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| **5** | **கணக்காய்வு வினவல்கள்** | | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினவல்களையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு குறிப்பிம் திகதியில் பதிலளிக்கப்பட்டுள்ளது | இணக்கமற்றது | * 31 கணக்காய்வு வினவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அவற்றில் 05 இற்கான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன | |
| **6** | **உள்ளக கணக்காய்வு** | | | |
| 6.1 | நிதிப் பிரமாணங்கள் 134 (2) DMA/1-2019 பிரகாரம் ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்தாலோசித்த பின்னர், உள்ளக கணக்காய்வுத் திட்டங்களை தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்தினுள் பதிலளித்தல். | இணக்கமற்றது | | * இது குறித்து பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை விழிப்புணர்வு செய்து உடனடியாக பதிலளிக்க நடவடிக்கை எடுத்தல் |

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப் பிரிவு 4 (14) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 6.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதிப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல் | இணக்கமானது | | |
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | DMA சுற்றறிக்கை 1-2019 இன் பிரகாரம், குறைந்தது நான்கு கணக்காய்வு (04) மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| **8** | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 இன் படி சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டு நாயக அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் | இணக்கமானது | | |

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் படி அச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல் படுத்துவதற்கான அதிகாரியை கட்டுப்பாட்டு நாயக அலுவகத்துக்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு ஒருங்கிணைப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார் | இணக்கமற்றது | *உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட வில்லை | |
| 8.3 | அரச நிதிச் சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்பிக்கப்பட்டுள்ளன | இணக்கமற்றது | * பொருட்கள் கணக்கெடுப்பு நடாத்தப்பட்டுள்ளன. குறித்த அறிக்கைகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்தக் கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 8.5 | நி. பி. 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றும் நடவடிக்கை இடம்பெற்றது | இணக்கமானது (2018 ஆம் ஆண்டுக்குரிய பொருட்கள் கணக்கெடுப்பில் தெளிவுபடுத்தப்பட்ட பொருட்களின் அகற்றல் நடவடிக்கை நிறைவடைந்துள்ளது) | | |

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| **9.** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு 06மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 9.3 | வாகன பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படல் வேண்டும் | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பாகவும் நிதி பிரமாணங்கள் 103, 104, 103,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 30/2016 இன் பந்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல் | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவுப் புத்தகம் குத்தகை காலத்தின் பின்னர் மாற்றப்படும் | இணக்கமானது | | |

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| **10** | **வங்கிக் கணக்கின் முகாமைத்துவம்** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கிக் கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முன்னரான வருடங்களில் இருந்து முன்கொண்டு செல்லப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளைத் தீர்த்தல் | இணக்கமானது | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய மற்றும் சரி செய்யப்பட வேண்டிய நிலுவைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்நிலுவைகளை ஒரு மாதத்துக்குள் தீர்த்தல். | இணக்கமானது | | |
| **11** | **நிதி ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாத படி செலவிடல் | இணக்கமானது | | |
| 11.2 | நி. பி. 94 (1) இன் படி , வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான வருட இறுதியில் எஞ்சிய நிதி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் தொடர்ந்திருக்கும் | இணக்கமானது | | |

| **இலக்கம்** | **ஏற்புடைய தேவைப்பாடு** | **இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)** | **இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க** | **எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது** |
|---|---|---|---|---|
| **12.** | **அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | நிலுவையில் உள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்தல் | இணக்கமானது | | |
| 12.3 | ஒரு வருடத்தை விடக் கூடிய காலத்திலிருந்து இருந்து வரும் நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல் | இணக்கமற்றது | * பணித் தடை செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் 04 பேரினதும், ஒழுக்காற்று விசாரணைகள் நிறைவு பெறாதவர்கள் இருவரினதும், போதுமானளவு தகவல்கள் அற்ற இருவரினதும், சேவையை விட்டு விலகிச் சென்ற ஒரு உத்தியோகத்தர் மற்றும் இடமாற்றங்களைப் பெற்றுச் சென்ற 07 உத்தியோகத்தர்களினதும் கடன் நிலுவை இதுவரை செலுத்தி தீர்க்கப்படவில்லை. | |

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை தொடர்பாக நி. பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **14** | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டிறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி.371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும் | இணக்கமற்றது | | |
| 14.3 | நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால கட்டுநிதியை வழங்கல் | இணக்கமானது | | |
| 14.4 | கட்டு நிதியின் கணக்கு நிலுவை, திறைசேரியின் பதிவேட்டுடன் மாதாந்தம் கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| **15** | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | குறித்த விதிகளின் படி, சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும் | இணக்கமானது | | |

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை ( இணக்கமானது / இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம், வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் | இணக்கமானது | | |
| 15.3 | நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாட்தொகுதியினரைப் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 16.2 | பணியாட்தொகுதியினரில் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல் | இணக்கமானது | | |
| 16.3 | 2017.09.20 ஆந் திகதிய MSD சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| **17** | **பொது மக்களுக்கான தகவல்கள் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்து தகவல்களை வழங்கும் பதிவேடு புதுப்பித்து பேணிச் செல்லல் | இணக்கமானது | | |

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| 17.2 | நிறுவனம் தொடர்பான தகவல்களை அதன் இணையத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் இணையத்தளம் அல்லது மாற்று வழிகள் ஊடாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துக்கள் அல்லது குற்றச்சாட்டுக்களை எளிதாக்குதல். | இணக்கமானது | | |
| 17.3 | தகவலறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் | இணக்கமற்றது | * அறையாண்டுக்கான ஆண்டறிக்கை அனுப்பப்பட்டுள்ளது | |
| **18** | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்** | | | |
| 18.1 | அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018(1) இன் படி பிரசைகள் பட்டயம் அல்லது பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணக்கமற்றது | * 2020 ஆம் ஆண்டிற்காக தயார்படுத்தப் பட்டு வருகின்றது | |
| 18.2 | சுற்றறிக்கையின் பந்தி 2.3 யைப் பொறுத்தவரை , பிரசைகள் பட்டயம் அல்லது பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயற்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது. | இணக்கமற்றது | | |

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| **19** | **மனித வளத் திட்டத்தைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் இணைப்பு 02 மாதிரி படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டத்தைத் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 19.2 | பணியாட்தொகுதியினர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணி நேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்துக்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வளத் திட்டம் உறுதி செய்ய வேண்டும் | இணக்கமானது | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 1 கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து பணியாட்தொகுதியினருக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 19.4 | மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல். | இணக்கமானது | | |

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| **20** | **கணக்காய்வுப் பந்திகளுக்குப் பதிலளித்தல்** | | | |
| 20.1 | முன்னைய ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்தல் | இணக்கமானது | | |